தனிப்பிரதி விலை அணா 0—1—6.

Reg. No. M. 3066. 1937-ஜனவரி 1.

PAHUTHARIVU ("REASON")

மலர் 2. **இதழ் 9.**



ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

பகுத்தறிவு.

பல அறிஞர்களின் அறிவியல் ஆராய்ச்சிகள், விஞ்ஞான விளக்கம், பெண்கள் முன்னேற்றம், உடற் பயிற்சி, சுகாதாரம், வைத்தியம், பாட்டுகள், நாடகங்கள், ஹாஸ்யங்கள், உலக விநோதங்கள், சிறு கதைகளும் நிறைந்து விளங்குவது

வருட சந்தா

உள் நாடு ரூ. 1—0—0. வெளிநாடு ரூ. 1—8—0.
தனிப்பிரதி 0—1—6. தனிப்பிரதி 0—2—6.

சந்தாதார்களுக்கு

"பகுத்தறிவு"க்கு எந்த மாதத்தில் சந்தாதாரர்களாகச் சேர்ந்தாலும் வருட ஆரம்பமாகிய மே மாதம் முதலிலிருந்து பத்திரிகைகள் அனுப்பப்படும். கொஞ்சம் பிரதிகளே கைவசமிருப்பதால் எல்லோரும் முந்திக்கொள்ள வேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

"பகுத்தறிவு" சந்தாதாரர்களுக்கு முதல் வருடபைண்டு வால்யம் (12 பிரதிகள் சேர்ந்தது) ஒரு ரூபாய்க்குக் கொடுக்கப்படும். தபால் சார்ஜ்வேறு. சொற்பக் காப்பிகளே இருப்பதால் உடனே ஆர்டர் கொடுங்கள்.

புதிதாகச் சந்தா சேருபவர்கள் சந்தாத் தொகையை முன்னதாகச் செலுத்திவிடவேண்டும்.

சந்தாதாரர் பத்திரிகை சம்பந்தமாய்க் கடிதம் எழுதும் போது சந்தா நம்பரைக் குறிப்பிட வேண்டும்.

விஷய அட்டவணை பக்கம்.

குயிற் கண்ணிகள் (பாட்டு)
(பி. ஆர். சின்னகிருஷ்ணசாமி) 1
மதவெறி (ஈ. வெ. ரா. 3
தியே சிவம்—நீரே மால் (பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம்) 9
தமிழிற்குத் துரோகமும் ஹிந்தி பாஷையின் இரகசியமும்
(சித்திரபுத்திரன்) 18
நம் பணியை கடவுள் ஏற்றுக் கொண்டாரா? (கைவல்யம்) 24
வேடிக்கைப் பேச்சுக்கள் (பி. ஆர். குப்புசாமி) 30
சீ! காலிப்பயலே! (கதை) (எஸ். சி. பரன்) 32
மோட்சமும் நரகமும் (ஈ. வெ. ரா.) 36
கோயில்களும் மடங்களும் ஏன்? (சாமி சிதம்பரனார்) 41
கடவுள் செய்யும் வேலை என்ன?
(ம. சிங்காரவேலு பி. ஏ. பி எல்.) 47
ஜாதி முறை 55
ஐக்கியத்தின் பொருத்தம் (சித்திர புத்திரன்) 61

ரோஜா முத்தையா

பூத்தமிழ்.

அறிவை வளர்க்கும் ஓர் மாத வெளியீடு.

—(○)—

அறிவுடையார் எல்லாம் உடையார்; அறிவிலார்
என் உடையரேனும் இலர். (குறள்.)

மலர் 2. | ஈரோடு 1937. ஜனவரி 1. | இதழ் 9.

குயிற் கண்ணிகள்.

(அனுப்பபட்டி பி. ஆர். சின்ன கிருஷ்ணசாமி)

1. சாமியின் பக்தரென்று
சாது வேதங்கள்கொண்டு
பூமியில் திரிவாரடி—குயிலே
பூனைகள் போல் வாரடி

2. மோட்சம் நரகம் என்னும்
மோடி வார்த்தைகளாலே
ஆட்சி புரிவார் தம்மைக்—குயிலே
அழித்துநலம் காணுவாயீ

3. வயிறு வளர்க்க வெண்ணி
(இங்கு) வந்திடும் பார்ப்பனர்கள்
கயிறுதிரித்து விட்டார்—குயிலே
கந்தல் புராணங்களை

4. சாதி மதங்க ளென்று
சாத்திரங்கள் எழுதி
நீதி குலைத்து விட்டார்—குயிலே
நேர்மையில் மாக்களடி

5. வேதம் புராணமென்னும்
வெட்டி வார்த்தைகளாலே
ஆதி முதலிருந்தே—குயிலே
(தேசம்) அல்லல் அடைந்ததடி

6. கல்வி வளர்ப்பதற்கு
கட்டிடங்கள் உதவார்
கல்லுப்பொம்மைகள் வைக்க—குயிலே
கட்டுவார் பெருங்கோயில்

7. தாய்தந்தை சோற்றுக்கின்றி
தத்தளித்தலைந்திட
கோயில்குளங்கள் சென்று—குயிலே
கொண்டாட்டம் செய்திடுவார்

8. படித்த புருஷனுக்குப்
பாமரப் பெண்ணைக்கட்டிக்
குடித்தனம் செய்யச்சொல்வார்—குயிலே
கொடுமை இதைப்போலுண்டோ?

9. தேசம் கடவுளென்று
செப்பி ஏழைகள் தம்மை
மோசம் புரிவாருடி—குயிலே
மூட உலகமடி

10. ஏழைக்குழைப்போ மென்று
இரப்பார்கள் ஓட்டுகளை
ஏழைபடுந்துயரம்—குயிலே
ஏனென்றும் கேட்பாரில்லை

மத வெறி.

(தோழர் ஈ. வெ. ராமசாமி.)

உலகில் மதங்கள் என்பவைகள் ஏற்பட்டு பல ஆயிரக் கணக்கான வருஷங்கள் ஆகி இருந்தாலும் மதங்களை ஏற்படுத்தினவர்கள் எல்லாம், அல்லது மதங்களின் மூல புருஷர்கள் எல்லாம் தெய்வீகச் சக்தி பொருந்தியவர்களாயும், தெய்வ சம்பந்தமுடையவர்களாயும், தீர்க்கதரிசன ஞான முள்ள மகாத்மாக்களாயும் இருந்தார்கள் என்று சொல்லப்பட்டும் எல்லா மதக் கட்டளைகளும் தெய்வங்களாலேயே மூல புருஷர்கள் மூலம் உலகத்திற்கு இறக்கப்பட்டது என்றுசொல்லப்பட்டும் இருந்தாலும் சதாசர்வ காலமும் அந்த அந்த மதப் பிரச்சாரம் செய்யப்படாவிட்டால் மதம் ஒழிந்துபோய் விடுமே என்கின்ற பயம் இன்றி உலகிலுள்ள எல்லா மதஸ்தர்களிடமும் ஆதி முதல் இன்றுவரை இருந்துதான் வருகின்றது. இந்த அபிப்பிராயத்திலும், காரியத்திலும் உலகில் இன்ன மதம் உயர்வு, இன்ன மதம் தாழ்வு என்று சொல்லுவதற்கில்லை.

சாதாரணமாக ஒரு கோடி ரூபாயோ, அல்லது இரண்டு கோடி ரூபாயோ கையில் வைத்துக்கொண்டு ஆயிரம் ஆட்களையோ, அல்லது இரண்டாயிரம் ஆட்களையோ நியமித்து 5, 6 பாஷைகளில் பத்திரிகைகளையும் வைத்துக்கொண்டு ஏதோ ஒரு தாழ்த்தப்பட்ட மிருகத்தின் பேரால் ஒரு மதத்தைக் கற்பித்து அம் மிருகத்துக்குச் சில "தெய்வீகத்தன்மை"யைக் கற்பித்து அது பல "அற்புதங்கள்" செய்ததாக ஆபாசமானதும், பொருத்தமற்றதுமான கதைகளைக் கட்டிவிட்டு பிரசாரங்கள் செய்ய ஆரம்பித்துவிட்டால் கண்டிப்பாக சில வருஷத்திற்குள் லக்ஷக்கணக்கான மக்களை அம் மதத்தைப் பின்பற்றுபவர்களாகச் செய்துவிடலாம். பிறகு அந்த மதத்தை எவனாவது குற்றம் சொல்லுவானேயானால் அவன் தண்டிக்கப்படவோ, வையப்படவோ, அடிக்கப்

படவோ, அம் மதக்காரர்களால் கொலை செய்யப்படவோ ஆளாகும்படியும் செய்துவிடலாம்.

ஆதலால் மதங்களுக்கு ஜீவ நாடிகளாக இருந்து வருவன பணமும், ஆள்பவர்களின் சலுகையும்பிரசாரமுமேஅல்லாமல் அவற்றின் தெய்வீகத்தன்மையோ, உயர்ந்த தத்துவமோ அறிவுக்கும், ஆராய்ச்சிக்கும் பொருந்தக்கூடிய கொள்கைகளோ என்று எந்த மதத்தையும் யாரும் சொல்லிவிட முடியாது.

"சமீப காலத்தில் ஒரு கிராமத்தில் ஒரு பெண்ணை ஒரு "பேய்பிடித்துக்கொண்டது" என்று அந்தப்பெண் ணும்தலை விரித்து ஆடத்தொடங்கினாள். அதற்காக ஒரு பேயோட்டி யைக் கூப்பிட்டு அந்தப் பேயை ஓட்டச்சொன்னதில் அந்தப் பேயோட்டி இந்தப் பெண்ணைப் பிடித்திருக்கும் பேய் யார் என்று கண்டுபிடிப்பதில் 2-நாள் செலவழித்து கடைசியாக "5, 6 வருஷத்திற்கு முன்னால் அவ்வூர் கிணற்றில் விழுந்து செத்துப்போன ஒரு மராட்டியன் அடுத்த ஜன்மத்தில் நா யாய்ப்பிறந்து இந்தப் பெண் வீட்டில் வெகு செல்லமாய் வளர்ந்து இந்தப் பெண்ணிடமும் மிக அன்பாய் இருந்து ஆறு மாதத்திற்கு முன் அதுவும் கிணற்றில் விழுந்து செத் துப்போனதால் அது பேயாகி இப்போது அந்தப்பெண்ணைப் பிடித்துக்கொண்டது" என்று சொன்னான். இதை அந்த வர்க்காரர்கள் நம்பினார்கள் என்ற குறியை இந்தப் பெண் தெரிந்தவுடன் பேய் ஆடும்போது அடிக்கடி நாய்மாதிரி குலைப்பதும், சிற்சில சந்தர்ப்பங்களில் மராட்டிப் பேச்சு மா திரி பேசுவதுமாய் இருந்தாள். அதுமாத்திரமல்லாமல் தன் னைப் பிடித்திருக்கும் பிசாசு நாய்ப் பிசாசுதான் என்பதைக் காட்டுவதற்காகச் சில சமயங்களில் மலத்தைதச் சாப்பிடவும் செய்தாள். மற்றும் வேறு பல நாய்களுக்கும் தின்பண்டம் போட்டு சதா 7, 8 நாய்களுடன் காமாதுர விளையாட்டும் விளையாடுவாள். இதைப் பார்த்த எல்லோருமே சிறிது கூடச் சந்தேகமில்லாமல் இந்தப் பெண்ணைப் பிடித்தி ருப்பது நாய்ப் பிசாசுதான் என்று தீர்மானித்துக்கொண்டார் கள்."

மதங்களும் இது போலவே தான் தன்னை ஒரு மதக்கா ரன் என்று காட்டிக்கொள்ள வேண்டுமானால் மதக் குருக் கள், அல்லது மதகர்த்தர்கள், அல்லது மதப் பிரசாரக்காரர் கள் என்று சொல்லப்படுபவர்கள் என்ன சொல்லுகின்றார் களோ; எப்படி நடந்தால் மத பக்தி உடையவன் என்று

சொல்லுவார்களோ அந்தப்படி நடக்கத்தான் ஒவ்வொரு மத பக்தனும் ஆசைப்படுகிறான்.

மதம் நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டதென் றும், சைனசுகதும், மததுதுகும சமமந்தம் பாரக்கக கூடா தென்றும் பகுத்தறிவு வேறு, மதக்கோட்பாடுகள் வேறு, என்றும், இந்தக்காலம் வேறு, அந்தக்காலம் வேறு என்றும் பெரியார்கள் நியமனங்களுக்குக் காரண காரியங்கள் விசாரிக் கக்கூடாது என்றும் "ரிஷிமூலம், நதி மூலம்" பார்க்கக் கூடாது என்றும் எல்லா மதக்காரர்களும் சொல்லி விடுவதால் உலகில் மதத்தின் பேரால் எந்த மூடனும் எதையும் சொல் லித் தப்பித்துக் கொள்ளலாம் என்கின்ற தைரியத்தின் மீதே மத ஆபாசமும், மத அயோக்கியத்தனங்களும் உலகில் நிலைத்து வருகின்றன. இந்த லட்சணத்தில் உள்ள மதங் களுக்கு ஆள் பிடிக்க வேண்டும் என்கின்ற ஆர்வத்தின் மீது மதமாற்றப்பிரசாரங்களும் நடந்து வருகின்றன என்றால் இது "புழுத்ததின் பீது காய் விட்டை யிட்டது" என்கின்ற பழ மொழிப்படி மனிதர்களை மேலும் மேலும் மூடர்களாக்கு வதாகவே இருந்து வருகிறதே அன்றி இதில் நாணையமோ, உயர்வோ இருப்பதாகச் சொல்ல முடியாது. சாதாரணமாக இந்திய மக்களில் 100-க்கு 92-பேர்கள் தற்குறிகள், எழுதப் படிக்கத் தெரியாத பாமர மக்கள், இவர்களிலும் 100-க்கு 90-பேர்கள் நல்ல ஜீவனத்துக்கு மார்க்கமில்லாமல் வயிற்றுப் பிழைப்புக்கு எதையும் செய்யலாமென்று கற்பிக்கப்பட்டிருக் கிறவர்கள். இப்படிப்பட்ட இவர்களிடத்தில் எது சொன் னால் ஏறாது? என்ன சொன்னாலும் நம்பும் சக்தி எழுத்து வாசனை அறியாத மூடர்களுக்கே அதிகம். ஆதலால் இப் படிப்பட்ட ஜனங்களிடம் மதப்பிரசாரம் செய்து மத மாற்று தல் வேட்டை ஆடுவது என்பது யாவருக்கும் சுலபமான காரி யமாகும்.

இந்திய மக்களின் கல்வி அறிவு வாசனை அற்ற தன்மை யும், பாமரத்தன்மையும், அடிமைத் தன்மையும், எல்லாம் சேர்ந்து உலகத்தில் வேறு எந்த தேசத்திலும் இல்லாத அவ் வளவு மதங்களும், மத வேற்றுமைகளும், மத மாற்றங்களும் தாண்டவமாடுகின்றன. இந்தியாவில் இந்துக்கள், கிறிஸ்து வர்கள், முஸ்லீம்கள், புத்தர்கள், யூதர்கள், பாரசீகர்கள், சீக்கியர்கள், ஆரிய சமாஜிகள், வைணவர்கள், சைவர்கள், ஸ்மார்த்தர்கள் முதலிய கடவுள் மாறுபாடுள்ளவர்களும்,

மதகர்த்தாக்கள் மாறுபட்டுள்ளவர்களும், மதக் கோட்பாடுகளின் அர்த்த மாறுபாடுள்ளவர்களுமாக எத்தனையோ பிரிவினர்கள் இருந்துகொண்டு வெகு காலமாகவே மதமாற்றப் பிரசாரம் செய்துகொண்டு தான் வருகிறார்கள்.

ஆனால் இந்த மதங்களில் மனித வாழ்க்கை தத்துவத்தில் எதாவது ஒன்றுக்கொன்று பிரமாத வித்தியாசங்கள் இருக்கிறதா என்று பார்த்தால் ஒன்றுமே காண முடியாத நிலையில் தான் இருந்து வருகின்றன.

எல்லா மதத்துக்குமே—ஒரு கடவுள் உண்டு.

மேல் லோகமுண்டு.

மோட்ச நரகமுண்டு.

ஆத்மா உண்டு.

செத்த பிறகு இந்த ஆத்மா என்கின்ற கொள்கைகளிலாவது, அவ்வது மனிதன் அவனவன் நன்மை தீமைக்கு ஏற்ற விதம் பலன், மோட்ச நரகம் அனுபவிப்பான் என்கின்ற கொள்கைகளிலாவது கருத்து வித்தியாசமில்லாமலே இருந்து வருகின்றது.

பிரத்தியட்ச அனுபவத்திலோ எல்லா மதத்திலும் "அயோக்கியர்கள்" "யோக்கியர்கள்" இருந்து தான் வருகிறார்கள்.

எல்லா மதத்திலும் ஏழைகள் பணக்காரர்கள் இருக்கிறார்கள்.

எல்லா மதத்திலும் எஜமான், கூலியாள் இருக்கிறார்கள்.

எல்லா மதத்திலும் உற்சவம், பண்டிகை, இருக்கின்றன.

எல்லா மதத்திலும் வணக்கம், தொழுகை, பிரார்த்தனை, ஜபம், தபம், இருக்கின்றன.

எல்லா மதக்கடவுள்களும் தொழுகை, பிரார்த்தனை, வணக்கம், பூசை ஆகியவைகளுக்குப்பலன் கொடுக்கும் என்றும், இவற்றாலேயே நாம் செய்த எப்படிப்பட்ட பாவங்களும் மன்னிக்கப்பட்டு விடலாம் என்றும் நாம் கோரியதை அடைந்து விடலாம் என்றும் ஓர் நம்பிக்கை இருந்துதான் வருகின்றது.

மற்றும் எல்லா மதக் கடவுள்களும் கண்களுக்குத்தோன்றாததும், மனத்திற்கு படாததும், ஆதி, அந்தம், ரூபம், குணம், பிறப்பு, இறப்பு முதலியவைகள் இல்லாதவைகளுமாகவேதான் இருக்கின்றன. எல்லா மதங்களும், "கண்களுக்கும், மனதிற்கும் தோன்றக் கூடிய எந்த வஸ்துவுக்கும் ஒரு கர்த்தா இருக்கவேண்டும் என்றும், ஆனால், கண்களுக்கும், மனதிற்கும் எட்டாத ஒரு வஸ்துவாகிய கடவுளுக்கு மாத்திரம் ஒரு கர்த்தா இல்லை யென்றுமே சொல்லுகின்றன. ஒரு மதமாவது என் கடவுள் கண்ணுக்குத் தெரியக்கூடியது என்றோ, என்வேதமாவது தனது கோட்பாடுகள் எல்லாம், மக்கள் எல்லோரும் ஏற்று நடக்கக் கூடியதாய் இருந்து வருகின்றது, அல்லது நடக்கக்கூடியதாய் செய்ய சக்தி உள்ளதாய் இருக்கின்றது என்றோ, சொல்லியோக்கியதை உடையதாக இல்லை. எல்லா மதக்காரர்களுக்கும் பசி, தாகம், நித்திரை, புணர்ச்சி, இன்பம், துன்பம், ஆசை, அதிர்ப்தி, கவலை, போதாது என்கின்ற தரித்திர குணம் ஆகியவை ஒன்றுபோலவேதான் இருக்கின்றன. எல்லோருடைய வேதமும் கடவுளாலும் கடவுள் தன்மை உடையவர்களாலுந்தான் உண்டாக்கப்பட்டதாகச் சொல்லப்படுகின்றன என்றாலும் அவை ஒன்றுக்கொன்று மாறுபட்டதாகவும் பலவற்றில் நேர்மாறான கருத்துக் கொண்டதாகவும் இருந்து வருகின்றன. எல்லா மதக்காரர்களுக்கும் ஒவ்வொருவித அடையாளம் இருக்கின்றன. இந்த நிலையில் மதப்பிரசாரத்தால், மதமாற்றத்தால் மனிதர்களுக்கு என்ன லாபம் ஏற்படும் என்பது நமக்கு விளங்கவில்லை.

சாதாரணமாக இந்தியர்களில் 8 கோடி முஸ்லீம்கள் இருக்கிறார்கள். 1 கோடி கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள். சுமார் 10 கோடி வைணவர்கள் இருக்கிறார்கள். 5 கோடி சைவர்கள் இருக்கிறார்கள்.

மற்றும் கலப்பு மதம் உள்ளவர்களும், மதக்குறிப்பு இல்லாதவர்களும் ஏராளமாயிருக்கிறார்கள் என்று உத்தேச

மாக்கச் சொல்லக்கூடுமானாலும் இவர்களில் பெரும்பான்மையோர் சமீப காலங்களில் அதாவது சுமார் 1000, 2000 வருஷங்களுக்குள் மதமாற்றமடைந்தவர்கள் என்று சொல்லலாமானாலும் இவர்களின் வாழ்க்கையில் எதாவது விசேஷமோ, உயர்வோ உண்டா என்பதைச் சிந்தித்து நன்றாய் பார்ப்போமேயானால் ஒருவித மேன்மையும் எந்த ஒரு தனி மதக்காரருக்கும் இல்லை என்றுதான் சொல்லவேண்டும்.

அதாவது அரசியலிலாகட்டும், பொருளியலிலாகட்டும், அறிவியலிலாகட்டும், சமூதாய வாழ்க்கையிலாகட்டும், ஆண் பெண் தன்மையிலாகட்டும், எல்லோரும் ஒரு திட்டத்தில் இல்லாவிட்டாலும் கொள்கையில் ஒரு மாதிரியாகவோதான் இருந்து வருகின்றார்கள்.

ஆகையால் மனித சமூகத்திற்கு அவரவர்கள் வாழ்க்கையில் உள்ள கவலைகள் அற்று அதிர்ப்தி ஒழிந்து சாந்தியும், சந்தோஷமும் கொண்டு வாழ்வதற்கு பொருளியலும், சமூதாய இயலிலும் ஆண் பெண் தன்மையிலும் சமதர்ம தத்துவம் கொண்ட வாழ்க்கை ஏற்பட இந்தியாவுக்கோ, அல்லது உலகத்துக்கோ இனி மதம் ஒழிப்புப் பிரசாரம் வேண்டுமா? அல்லது மதம் மாற்றுப்பிரசாரம் வேண்டுமா? என்பதை ஒவ்வொரு அறிவாளியும் யோசிக்க வேண்டியது முக்கிய கடமையாகும்.

மதல் மாற்றுதல் மதப் பிரசாரம் ஆகிய காரியங்களால் சமீப காலத்திற்கு முன்பு உலகிலும் குறிப்பாகத் தென்னிந்தியாவிலும் நடந்த முட்டாள்தனமான—மூர்க்கத்தனமான பலாத்காரக்கொடுமைச் செயல்களும், கலகங்களும், அடிதடிகளும், குத்து வெட்டுகளும், கொலைகளும், சித்திரவதைகளும் எவ்வளவு என்பதற்குச் சரித்திரங்கள், புராணங்கள் பிரத்தியட்ச அனுபவங்கள், எத்தனையோ மலிந்து கிடக்கின்றன. இவைகளையெல்லாம் உத்தேசித்தாவது இனி வரும் சுயமரியாதை அறிவியக்க சமதர்ம உலக ஆட்சியில் மத விஷயத்தைப்பற்றி ஆதரித்து எவராவது தெருவில் நின்று பேசினாலும், தெருவில் புஸ்தகங்கள் வைத்து விற்பனை செய்தாலும், பத்திரிக்கைகளில் எழுதினாலும் அவர்களெல்லாம் கடுமையான தண்டனைக்குள்ளாவார்கள் என்று சட்டம் செய்யப்படுமானால், உலக மக்கள் பிரிவினையற்று, குரோதமற்று, மடைமையற்று, தோளோடு தோள் புனைந்து தோழர்களாக வாழமுடியும் என்பதோடு மத தத்துவங்களின்

தேடி சோறு — நீர் மாள.

(பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம்.)

காயிற் கருப்பைக்குள் சிரிருளில் கட்டுண்டு கண்மூடி குருட்டுக்கன்னையிலிருந்து குழவி கருப்பையை விட்டு வெளிப் பட்டவுடனே, காயிறுமினிய நருத்துவியபால், கண்ணாசு நீங்கி மூகவிற் காண்பது சூரியன் அல்லது தீயின் ஒளியேயாகும். நாயிறு மறைந்த பின்னர், இரவில் விளக்கின் ஒளியால் பொருள் களைக் கண்ணாற் பார்த்து அறிகின்றோம். கள்ளிருள் தூக் கத்தில் நான்தோறும் அழுந்திக்கிடந்து, விழித்தவுடன் நாது கண்கள் தீப்பிழம்பாகிய சூரிய ஒளியின் உதவியால் பொருள் களைக்கண்டு பகுத்துகின்றன. காடு திருந்தி நாடாகுமுன் வாழ்க்கை பண்ணடைக்கால மக்கள் பகலெல்லாம் உணவு தேடி உண்டு தூய நீரைக் குடித்து மகிழ்ந்து மாலையில் சூரியன் மறைந்து இருள் சூழ்ந்தவுடன், காட்டிலும், மலைப் பொந்து களிலும், அடர்ந்த புதர்களிலும் உள்ள கொடிய விலங்கு கட்குப், பாம்பு, தேள் முதலிய நச்சுப் பிராணிகட்கும்

பலனால் இன்று உலக மக்கள் அனுபவிக்கும் உயர்வு தாழ்வு நிலை ஒழிந்து சகல துறைகளிலும் சமத்துவத்து டன் வாழ முடியும் என்றும் வற்புறுத்திக் கூறுகிறோம். இந்த அபிப்பிராயமானது மதங்கள் தெய்வத்தினாலும், தெய்வாம்சம் பெற்றவர்களாலும் உண்டாக்கப்பட்டது என் கின்ற நம்பிக்கையை உண்மையாயும், உறுதியாயும் உடைய வர்களுக்கு விரோதமாய் இருக்காது, அவர்கள் ஆத்திரப் படவும் மாட்டார்கள் என்றும் கருதுகிறோம். ஏனெனில் அப்படிப்பட்ட மதமானது அதாவது கடவுளால் உண்டாக் கப்பட்ட மதமானது மனிதனுடைய பிரசாரம் இல்லாவிட் டால் அல்லது ஏதாவது ஒரு மனிதன் மறுத்தால் மறைந்து போகுமே அழிந்து போகுமே என்று அவர்கள் (மத பக்தர் கள்) பயப்படமாட்டார்கள்.

பனி, காற்று, மழை முதலியவைகளால் ஏற்படும் குளிருக்கும் அஞ்சித் தங்கள் குடிசைகளில் புகுந்து கல்லினாலும், தீக்கடைக் கோலினாலும் தீயையுண்டாக்கி அதனை வளர்த்து அத்தீயின் காவலில் வாழ்ந்தார்கள்.

இன்று காணப்படும் நகரங்களில் நெருங்கி அடுத்த கல் வீடுகளுக்குள் உடம்பின்மீது உடை மேல் உடை உடுத்தி மின் சார விளக்கு ஒளியில் வாழும் இக்கால மக்களுக்குத் தீயின் கூறான ஒளியின் அருமை தெரியாது. அக்காலத்து மக்கள் தமக்கு உயிர்த்துணையாய் முதன் முதல் கண்ட பொருள்கள் பெருந்தீக்கோளமாகிய ஞாயிற்றின் ஒளியும், தீயும், நீருமே யாகும். கண்ணால் பொருள்களைக் காண்பதற்குக் காரணமா யிருப்பதும், கண்ணால் கண்ட பொருள்களில் மிகப்பெரியதும், ஒளி விட்டெரியக்கூடியதும், உயிர் வாழ்க்கைக் கின்றியமையாத துமாகிய சூரியனை நமது முன்னோர் கடவுளெனக் கருதி வணங்கத் தொடங்கினர். அதனால் நாம் கண்டவற்றுள் முதற் பெரும் பொருளாகிய ஞாயிற்றின் பயனை கிழமைகளில் முதற் கிழமைக்கும், இரண்டாவதாக இரவில் குளிர்ந்த ஒளி யால் தங்களை மகிழ்விக்கும் திங்களை (சந்திரன்) யே அடுத்த நாளைக்கும் பெயர்கள் இட்டழைத்த நுட்பம் ஆழ்ந்து சிந்திக் கத்தக்கதாகும்.

இரவெல்லாம் காடுகளில் தீத்துணையிலிருந்து கீழ்த்திசை யை நோக்கி அருணன் உதயத்தை எதிர்பார்த்திருப்பார்கள். கிழக்கு வெளுத்ததும் பாடி ஆடி மகிழ்வார்கள். இத்தீயையும் நீரையும் மக்கள் மட்டுந்தான் முதன் முதலில் கண்டு மகிழ்ந் தார்கள் என்பதில்லை. பகுத்தறிவில்லா தாவர சங்கமம் ஆகிய எல்லா உயிர்களும் நாள்தோறும் தீயையும் நீரையும் கண்டு மகிழ்ந்தன—மகிழ்கின்றன. இக்கால மக்களுக்கு அறிவு வள ர்ந்து பரந்து பலவகை அவாக்கள் மிகுதிப்பட்டமையாலும் இயற்கைப்பொருள்களைத் தங்கள் தேவைக்குத் தக்கபடி செயற்கைப் பொருளாக்கி வருவதில் இவர்கள் கருத்து முழுவ தும் ஊன்றி நிற்பதாலும் இயற்கையின் அழகையும், அற்புதத் தையும், அருமையையும் கண்டு மகிழ்வதற்குப் பலர் இயலாதவர் களாய் இருக்கின்றார்கள்.

ஐம்பெரும் பூதங் (பொருள்) களில் ஒன்றான தீயானது வெளியே அண்டத்தில் காணப்படுவதைப்போல் உடம்பாகிய பிண்டத்திலும், ஓரளவிலிருந்து மாறுபடாமலிருக்கும் வரையில் உடல் நலங்கெடாமல் நோயின்றி நெடுநாள் வாழலாமெனும்

உண்மையையும் நாளாவட்டத்தில் மக்கள் கண்டறிந்தார்கள். தீயை எளிதில் உண்டுபண்ணத் தீப்பெட்டியில்லாதஅக்காலத்தில் சிலர்தீயை வளர்த்துக்கொண்டேயிருப்பார்கள். அத்தீயிலிருந்து பலர் தங்களுக்கு வேண்டிய தீயை எடுத்துச்செல்வார்கள். மழை, பனி, காற்று, குளிர் முதலிய துன்பங்களுக்கும், தேள், பூரான், எறும்பு, கொசு, ஈ, மூட்டைப்பூச்சி, பேன், தெள்ளுப் பூச்சி, தேனீ, குளவி, பலவகை வண்டுகள், மற்றுமுள்ள முதலிய துன்பப்படுத்தும் சிற்றுயிர்களுக்கும், "சாம்பல்" விரோ தப்பொருளெனக் கண்டபடியால், அவர்கள் நீராடினவுடனே, தாங்கள் வளர்க்கும் தீயில் நீற்று விழும் சாம்பலை உடல்முழு தும் பூசிக்கொள்வார்கள்.

சிலவிடங்களில் தீயை வளர்த்துக் கொண்டிருக்கும் வயது சென்றவர்கட்கு, மற்றவர்கள் கிழங்கு, காய், கனி முதலிய உணவுகளைக் கொடுத்து உதவுவார்கள். பொதுவாக வானில் தோன்றும் சூரியன், சந்திரன், நக்ஷத்திரம், மின்னல், இடி, எரிமலை, முதலியவைகளைக்கண்டு உலகில் நிகழும் எல்லா ஒளிகளும், தீயின் செயல்களேயெனவும், இறப்பென்பது உடம்பிலுள்ள "உயிர்த்தீ" தன்னளவிற்குறைந்து அடங்கிப்போவது தான் என்பதும் முன்னோர்கண்ட உண்மை. ஆற்றங்கரை, குளக்கரை முதலிய இடங்களில் மக்கள் நீராடினவுடன், "குளிர் காயவும்" "தீயை வணங்கவும்", எப் போதும் தீ எரிந்துகொண்டேயிருக்கும். "அத்தீயே சிவமா னது;" அத்தீயை வணங்குமிடமே பின்னர் கோயிலாக மாறினது. தீயானது தங்களுக்குத் துன்பத்தையும், அச்சத்தை யும் நீக்கி இன்பத்தைக் கொடுப்பதாலும், சிவந்த நிறத்துடன் இருப்பதாலும், அதற்குச் சிவமென்னும் பெயரிட்டார்கள்.

இன்றும் பகல் இரவு விளக்கெரியாக் கோயில்களில், கட வுள் இல்லையென்னும் கொள்கையால், இவ்வுண்மை வெளியா கிறது. புத்தர்களும், கிறிஸ்துவர்களும், மெழுகு திரியைப் பகலிலும் கோயிலில் கொளுத்திவைத்தே வணங்குகிறார்கள். தமிழ் நாட்டில் கோயில்களில் மட்டுமின்றி, வீடுகளில் பகலிற் செய்யும், நலந்தீங்குச்சடங்குகளில் விளக்கேற்றிவைத்தும், பாலுள்ள சில மரத்தின் உலர்ந்த சிறு கிளைகளைக் கூட்டி வைத்து நெய்வார்த்து எரித்தும், அதன் பக்கத்தில் கலசத்தில் (குடுவையில்) நீரை வைத்தும் வணங்குகின்றார்கள். ஒருவ ருக்கு உயிர் நீங்கினவுடனே, விளக்கேற்றி வைத்தும், அத்து டன் ஒரு எனத்தில் நீரைவைத்தும் வணங்குவார்கள். மயா னத்திற்குச் சவத்தை எடுத்துச் செல்லும்போதும், சவத்து

டன் தீயை ஒரு பாண்டத்தில் வளர்த்து, சுமந்து சென்று இறந்தவுடலை நெருப்பில் எரிப்பதே நல்லதெனக்கண்டார்கள்.

தீபமானது எங்கும்பொருளை, மிக விரைவில் பற்றியெரிகின்ற தே, அங்கும் பொருள் தீக்கடவுளுக்கு, மிக்க விருப்பமுள்ள பொருள் என நினைத்தார்கள். முதன்முதல் கூடாவினிருந்து கற்பூரம் வந்தபடியால், அதனைக் "கூடம்" என்றும், கற்பூரம் என்றும், தீபதனில் விரைவில் பற்றி எரிவதை மிக விடப்பாகக்கண்டு, அது கடவுள் தன்மையென வணங்கி மகிழ்ந் தார்கள். பொய் களவு முதலிய குற்றந் செய்தாக சங்கேகப் பட்டவர்களை, அற்றில் குளத்தில் தலை முழுகி விளக்கேற்றி வைத்தாவது, கற்பூரத்தைக் கொளுத்திவைத்தாவது, "இல்லை" என்று சொல்லி, அத்தீபை அணைக்கச் சொல்லுகிற வழக்கம் இருந்து வந்தது—வருகிறது. இதனால் விளக்கிலும் கற்பூரத் திலும் தீப்பற்றி எரிவதை அவ்வளவு தெய்வத் தன்மையாய்க் கருதினார்கள். மலைச்சிகரங்களில் விளக்கேற்றி வணங்கி னார்கள். இன்றும் ஆண்டிகள்கோயிற், கோயில்களின் முன், வாணமேவாங்கி வளர்த்தெரியும் பெருந் தீயின் உருவைக்காண, பனைஓலைகளை கூடாய்க்கட்டி, "சொர்க்கப் பனை" என்று தீக்கொளுத்தியும், பொங்கலிட்டு சூரியபூசை செய்வதும்; வீடுகளிலாயினும், அம்பலங்களிலாயினும், பகலிலும் இரவி லும் திருவிளக்கேற்றியே தெய்வந்தொழுதும் வந்தார்கள். இவ் வழக்கம் இந்துக்களிடமட்டும் காணப்படுவதன்று. பௌத்தர், கிறிஸ்தவர், ஜைனர், பாரசீகர், சீக்கியர், முதலான சமயத்தவர்களும், தங்கள் வீடுகளிலும், கோயில்களிலும், இன்றும் பகலிலும் விளக்கேற்றியே வணங்குகின்றார்கள். இத னையே சைவ சமயாசாரியார்கள "அப்பர் சுவாமிகள்"

"எரிகொண்மேனி இளம் பிறை வைத்தவர்
கரிபர் தாங் கடவூரின்மயானத்தார்" எனவும்,

"எரிபெருக்குவர் அவ்வெரி ஈசனை
துருவருக்கம தாவதுணர்கிலார்" எனவும்,

"அருக்கன்பாதம் வணங்குவர் அந்தியில்
அருக்கனாவான் அரனுரு வல்லனோ" எனவும்,

"திருஞானசம்பந்தர்"

"கற்றாங்கெரிபோற்பி கலினை வாராமே
செற்றார் வாழ்திருவைச் சிற்றம்பலமேய" எனவும்,

"எரிகொளல் போனியர் எய்பணிந்தி ப்பராய்
திரியு மூவெயில் தீயெழுச் செற்றவர்" எனவும்,

"அழலே தூரம்புஞ் அருமறையோர் நிறம்
விழலிதன்னும் மருகர் நிறத்நிறம்
கழலவாது செபத்திருவுள்ளமே
கழலிலங்கு நிருஉருச்சைவனே" எனவும்,

"எரியலாலுருவமில்லை எறலாலேறலில்லை
கரியலாற் போர்வையில்லை காண்டகுசோழியார்க்குப்
பிரிவிலா அமரர் கூடி பெருந்தகைப் பிரானன்றேறற்றும்
அரியலால் தேவியில்லை யையனை யாறனார்க்கே"

என அப்பர் சுவாமிகளும்

"சோதியே சுடரே சூழொளி விளக்கே" எனவும்
"சோதியாய்த் தோன்று முருவமே"

எனவும் மாணிக்கவாசகரும் கூறுகின்றபடியால் தீயே சிவமெனப் பிற்காலத்தில் வகுத்தனர்கள் என உணரலாம்.

சிவன் கோயில்களில் வழிபாடுசெய்யப்போகும் மக்களுக்கு அக்கோயில் குருக்கள் சிவப்பிரசாதமாக வாழ்த்திக் கையில்கொடுத்து அனுப்பச் செய்வது சாம்பலேயாகும். அங்குள்ள கடவுள் தீயேனன்பதும் அத்தீயே அண்டத்திலும், பிண்டத்திலுங்கலந்து நின்று உலகம் நடைபெறுகின்ற தெனவும் உடம்பில் இயங்கும் உயிர்த்தியையே, ஜீவாக்கினி, மூலாக்கினி, ஜாடராக்கினி, என வழங்கப்படுகிற தெனவும், இத்தீயின் அளவு உடம்பில் மிகுதல் குறைதல் இன்றி காப்பாற்றுவதினால் நோயின்றி உடல் வன்மையோடு நீண்டகாள் இன்பமாய் வாழலாமெனவுங்கூறி நீற்றைக் கையில் கொடுக்கின்றார்கள். ஆகலால் இதுவரை நாம் சொல்லி வந்த காரணங்களாலும் இருளை அஞ்ஞானத்துக்கும், ஒளியை ஞானத்திற்கும் ஒப்பிட்டு ஞான சொரூபியும், ஜோதி வடிவினனும், கடவுளென்று எம்மதத்தினரும் ஒரே முகமாகக் கூறுவதனாலும் பிற்காலத்தில் சிதம்பரம் அருட்பா இராமலிங்க சுவாமிகளும் உருவ வழிபாடுகளை ஒழித்து வடலூர் தமது சமரச ஞான சபையில் "ஒளிவளர் விளக்காம்" சுடர் வணக்கத்தையே வற்புறுத்திக்காட்டியிருப்பதாலும், தீவழிபாடே சிவ வழிபாடானதென்று நாம் ஒருவாறு கூறுகின்றோம்.

தீக்கடவுள் தங்களைக் காப்பாற்றுகின்றதென்றும், அதை மகிழ்வித்தலை தங்கள் கடமையென்றுங் கருத்துடையவர்களாய் அத்தியில் எண்ணெய், நெய், முதலிய பொருள்களைப்பெய்து, தீ வளர்ப்பதால், அத் தீக்கடவுளுக்கு மகிழ்ச்சியுண்டாகி நன்றாய்ப் பற்றி வளர்ந்து எரிவதாக அக்காலத்து மக்கள் நினைத்தார்கள். தீயின் அருகில் செல்ல இயலாத வெப்பம் மிகுந்த காலங்களிலும், பகல் பொழுதில் இவர்கட்கு பல வேலைகள் ஏற்பட்டதாலும், தீக்கடவுளுக்கு எப்போதும் இரை தேடிக்கொடுத்தலன்றி; எரிவது தணிந்து அவிந்து போகிறபடியாலும் அம்மக்கள் தீக்கற்களினின்றும் அடிக்கடி தீயையுண்டுபண்ணி, வணங்கி வந்ததாலும், தீவெளிப் படக்கூடிய கடினமான கல்லில் தீச்சுடர் வடிவில் வாழைப்பூப் போல் உருவாக்கித் தீயை வணங்குர் இடங்களிலெல்லாம் நாட்டி, அக்கல் வடிவத்தையே, தீவடிவத்திற்குப் பதிலாக வணங்கத் தலைப்பட்டார்கள். எனினும் பலர் பழைய வழக்கத்தால் பகலும் இரவும், அக்கல் உருவத்திற்கு அருகில் சிறு விளக்கேனும் ஏற்றியே வணங்குவார்கள். அதனோடு தங்களுக்கு இன்பம் பயக்கும் நீர், பால், தேன், நெய், பூ, பழம் முதலிய அரும் பொருள்களெல்லாம், அக்கடவுளால் ஆக்கப் பட்டன எனக்கருதி, தீக்கடவுள் உருவத்திற்கு அப்பொருள் களை இட்டு மகிழ்ந்து, பின்னர் அப்பொருள்களைத் தாங்கள் அனுபவிப்பார்கள். அக்கல் வடிவத்தின் மேலுள்ள வாழைப் பூப் போன்ற தீக்குறிக்கல் "சிவலிங்கமெனவும், அதன் கீழ் எற்பட்ட அடிப்பாகத்திலுள்ள பீடிகையை ஆவிடையார் என வும் இக்காலத்தில் வழங்குகின்றனர்.

உலகில் பலதிறப்பட்ட சமயக் கொள்கைகளைக் கொண்ட மக்கள் இருப்பதால், கடவுள் வணக்கம், அவரவர் கருத்திற்கு ஏற்ப மாறுபடுவதன்றி ஒருவர் கருத்து மற்றவருக்குப் பொருந்தாததாகும். இக்காலத்தில் கடவுளுக்கு இவ்வுருவ வணக்கம் வேண்டியதில்லையென்றும், வீண்காலப் போக்கும், பொருளுக்குக் கேடும் ஆகுமன்றி வேறு பயனில்லையென, தீவணங்கும் ஆரிய சமாஜத்தாரும், மற்றபிரமசமாஜத்தாரும் இன்னும் பல மதத்தினரும், உருவ வணக்கத்தைக் கண்டிக்கின்றார்கள். இக்காலத்தில் இது ஒரு வகையாக மக்களுக்குப் பொருந்துமாயினும், அக்காலத்தில் மக்கள் தீயையுண்டாக்க, வேறு வகையொன்றுந் தெரியாமல், கடினமான கற்களினின்றும் தீயையுண்டாக்கினார்கள். ஆகலால் கல்லில் தான் அத் தீ அடங்கியுள்ளதெனக் கருதிக்கல்லை தீ வடிவத்திற்குப் பதிலாக வணங்கினார்கள் என்பதை மேலே கூறினோம்.

இதன் உண்மையை அறியாமலோ, அல்லது சமயப் பகையினாலோ தீ வடிவாகிய சிவலிங்க உருவத்தை ஆண்குறி எனவும், அக்குறியைத்தாங்கி, நீர் சூழ்ந்தோடும் பீடிகைக்கல்லைப் பெண்குறி எனவும் சொல்லுவோர் கூற்று பொருந்தாததாகும்.

நீர் வணக்கமே மால் வணக்கம்.

தீக்கடவுளுக்கு இரண்டாவதாக நீர்க்கடவுளைப்பற்றி சிறிது ஆராய்வோம்.

"காராயணன்" ஜலத்தில் இருப்பவன் எனப்பொருள் படும். நீரின் கன்மையன், கடலில் பள்ளிகொண்டிருப்பவன், கடல் நிற வண்ணன், கார்மேக வண்ணன், நீலநிறவண்ணன், கரிய மேனியன் எனத்திருமாலைப்பற்றி சைவ வைணவ புராணங்களிற் கூறுவதும், இக்கருத்து பற்றியேயாகும். இதனால் பண்டைக்காலத்து மக்கள், தமது உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாத வெப்பத்திற் கடுத்தது, தட்பத்தன்மையுடைய நீரேயாதலால், அதனையும் சேர்த்தே தீயும் நீரும், சிவமும் சத்தியும் என வணங்கி வந்தார்கள்.

பழமையாயுள்ள சிவன் கோயில்களிலெல்லாம், விஷ்ணு உருவம் இருக்கக் காணலாம். தீயானது மேலோங்கி நிமிர்ந்தெரியும் தன்மையால், கோயில்களில் சிவ வடிவத்தை நின்ற நிலையிலும், நிலமட்டத்தில் சமமாகப்பரவி நிற்கும், நீரின் தன்மையைக் காட்டுவதுபோல விஷ்ணு வடிவத்தை படுக்கவைத்தும் வணங்கினார்கள். பின்னர் விஷ்ணு கோயில் வேறாகப் பிரிந்தது. நீரைப் பெண்ணாகவும், தீயை ஆணாகவும், சிலகாலம் வணங்கிப் பின்னர், பெண்ணாகப் பாவனை செய்த நீராகிய சத்தி வடிவத்தை ஆண் வடிவத்தில் மாற்றி, அதற்கும் மனைவி மக்கள் முதலியவைகளை ஏற்படுத்திக் கொண்டார்கள். இதுபோலவே பலர் பிழைப்பிற்காக முருகனுக்கும், விநாயகருக்கும் தனித்தனியே கோயில்கள் கட்டத்தொடங்கினார்கள்.

"எரியலாலுருவமில்லை
அரியலால் தேவியில்லை"

என்னும் தேவாரத்தாலும், நாலாயிரப் பிரபந்தத்தாலும் அறியலாம்.

நீரின் தன்மையைக்குறிக்கும் விஷ்ணு கோயில்களிலும் அலங்காரத்திற்காகத் திருவிளக்கேற்றியும், கற்பூரங் கொளுத்தியும், தங்கள் கோயில்களில், கூட்டம் சேர்வதற்கு வேண்டிய வைகளெல்லாம், ஒன்றின்பின்னொன்றாக ஏற்படுத்திக்கொண்டே வந்தார்கள்—இன்னும் செய்து வருகிறார்கள். இன்னும் விஷ்ணுகோயிலுக்குச் சென்று, கடவுளை வணங்குகிறவர்களுக்கு அங்குள்ளகோயில் பட்டாச்சாரி—பூசாரி அல்லது குருக்கள் என்போர், அர்ச்சனை முடிந்த பின்னர், அங்குள்ள நீரின் தன்மையையுணர்த்தும் பொருட்டு, கடவுளின் வடிவத்திற்கு முன் வைத்துள்ள நீரையே, திருமாலின் தீர்த்தப்பிரசாதமெனக் கையில் அள்ளிவிட்டு குடிக்கச் செய்கின்றார்கள். சிவன் கோயில்களில் நீயின் தத்துவத்தை உணர்த்த வேண்டி, சிவப் பிரசாதமெனத் தீயில் எரிந்து நிற்றப்பட்ட சாம்பலை, உடம்பில் பூசிக்கொள்ளுப்படிக் கொடுத்தார்களென மேலே கூறினோம்.

ஆனால் பிற்காலத்தில் விஷ்ணுகோயில்களில், கூட்டத்தை மிகுதியாகச் சேர்ப்பதற்காகப் பலவகை பொங்கல் சோறு சிற்றுண்டி முதலியவைகளைப் பெருமான் பிரசாதமென வழங்கத் தலைப்பட்டார்கள். இதனைக்கண்டு சிவன்கோயில்காரரும், பொங்கல் பிரசாதங்கள் கொடுக்கத் தொடங்கினார்கள். கடவுளை வணங்குஞ் கோயில்கள் சில் வயிறு வளர்க்குஞ் இடமாக மாறினதால், சிவன் கோயில், விஷ்ணு கோயில் என்று பிரிக்கப்பட்டு, எல்லாக் கோயில்களிலும் பாமர ஜனங்களை மிகுதியாகச் சேர்ப்பதற்காகவும், பொருள் பறிப்பதற்காகவும், வேடிக்கை வினோதங்கள், ஆடல் பாடல்கள், வாகனங்கள், தேர் திருவிழாக்கள் மிகுந்து விட்டன.

பிற்காலத்தில் சிவ விஷ்ணு ஆலயங்களில் போட்டியின் மேல் பரிவாரத் தெய்வங்களென்னும் குட்டிச்சாமிகளுஞ் சேர்ந்தன. பண்டைக்காலத்துக் கருத்து மாறுபட மாறுபட மக்களுக்கு அக்கருத்தின் உண்மை மறைந்து போய் விட்டது. இதனால் தீ வணக்கமே சிவ வணக்கம், நீர் வணக்கமே மால் வணக்கமாக மாறினது என ஒருவாறு கூறினோம். இதனை வாசகர்களெல்லாம் ஒத்துக்கொண்டு பழைய முறையில் தான் கடவுளை வணங்கவேண்டுமென்பது எனது கருத்தல்ல. பண்டைக்காலத்திலிருந்து இவ்வுருவவணக்கங்களும், கொள்கைகளும் மதக்குறிகளும் மாறிக்கொண்டே வந்த காரணங்களைமட்டும் நான் எனது சிற்றறிவிற்கெட்டிய வரையில் சில ஆதாரங்களோடு

கூறினேன். மனிதர்கள் அறிவு வளர வளர கடவுள் வழிபாடும், கடவுளைப்பற்றிய கொள்கைகள் மாறுவதும், கடவுளைப் பற்றிய தத்துவங்கள் உயர்வதும் இயற்கையேயாகும். பிற்காலத்தில் கல்வியறிவு வளர வளர மும்பொருளாகிய பதி, பசு, பாச இலக்கணங்களைப்பற்றி சைவ சித்தாந்த நூல்கள் எழுதப்பட்டன.

சைவ சமயாச்சாரியர்களுடைய தேவார திருவாசகமாகிய தோத்திரங்களுக்கும் பின்னர் தோன்றிய "சந்தானாச்சாரி" யவர்களின், சித்தாந்த சாஸ்திரங்களுக்கும் வேற்றுமையிருக்கிறது. பழைய புராணக்கதைகள் இன்றும் ஒழியவில்லை. எகான்மவாதமாகிய வேதாந்த மதமும் அணுஷ்டானத்திற்கு வரவில்லை. கற்பிதமான புராணக்கதைகளும், ஆகமக்கதைகளும் கோயில்களிற் கலந்து, மயங்கித் தற்காலம் தலைவிரி கோலமாகக் காணப்படுகின்றன.

தற்கால இந்து மதம் என்று தவறாகச் சொல்லுகிற சைவ வைணவ அத்வைத சமயங்களும் கலந்து, காலத்திற்குத் தக்கபடி சீர்திருத்தமடையவேண்டும். இம் மதங்களைப்பிரித்துக் காட்டும் வெளிச்சின்னங்களை முக்கியமெனக் கருதாமல், கடவுள் என்பது அன்பு வாய்மை, அறிவு என்னும் கொள்கைக்கு வரவேண்டும். ஆயிரக்கணக்கான சிறு தேவதைகளுக்கு, உயிர்ப் பலிகளிட்டு பேயாட்டமாடும் பாமர மக்களுக்கு, இயன்றவரையில் "தெய்வம் ஒன்றென்னும்" உணர்ச்சியை முதலில் உண்டு பண்ணவேண்டும். இல்லையேல் சமயப் பகைபால் நெடுங்காலமாக நடைபெற்று வரும் கலகங்கள், வீண் செலவு, கொலை, களவு, பகை முதலிய மகாபாதகங்கள், வளர்ந்துகொண்டுதானிருக்கும்.

மற்ற நாடுகளில் நாஸ்திகர்களே பெரும்பாலும், மக்கள் எல்லோரும் இன்புற்றிருப்பதற்கு வேண்டிய பொது நலஊழியங்களை மிகுதியாய்ச் செய்கின்றார்கள். கோடிக்கணக்கான தங்கள் செல்வங்களையும், பொது நன்மைக்குச் செலவிடுகின்றார்கள். கடவுள் உண்டென்று சொல்லும் "ஆஸ்திக்" களோ உணவின்றி பசியோடும், பிணியோடும், உடுக்க உடையின்றியும், இருக்க இடமின்றியும், கல்வியறிவு சிறிதுமின்றியும், நல்லது கெட்டது தெரியாமல், விலங்கினுங் கேடாய் உழலும் மக்களைக் கவனிப்பதில்லை. சிறிதும் அவர்களிடத்தில் அன்பில்லை. கடவுளைத் திருப்திப்படுத்துவதாக நினைத்து, வீண் செலவு செய்கின்றார்கள். நாள்தோறும், இதனைக் கண்

தமிழிற்குத் துரோகமும், ஹிந்தி பாஷையின் இரகசியமும்.

(சித்திரபுத்திரன் எழுதுவது.)

நமது நாட்டின் க்ஷேமத்திற்காக என்று எந்தக்காரியம் ஆரம்பிக்கப்பட்டாலும், அதனை நம் நாட்டுப் பிராமணர்கள் கைப்பற்றிக்கொண்டு அதனால் தாங்கள் பிழைக்கும் படியாகவும், நம்மக்களுக்கு பெரிய ஆபத்து விளையுற்படியாக வுமேசெய்து விடுகிறார்கள்.

தோழர் காந்தி அவர்கள் ராஜீய நோக்கத்தை முன்னிட்டு இந்தியா முழுதுக்கும் ஒரே பாஷையாயிருக்க வேண்டும் என்கிற கருத்துக்கொண்டு ஹிந்தி பாஷைக்காகப்பொதுமக்கள் பணத்தைச் செலவு செய்தும், பொது ஜனங்களும் தோழர் காந்தி சொல்லுகின்றாரே யென்கிற பக்தியின் பேரிலும் நம்பி, அதை அழுலுக்குக்கொண்டு வந்ததின் பலன் அதுவும் ஒரு வினையாய் முடிந்து வருகிறது.

கூடாய்க் காலங்கின்றோம். இன்று இந்து மதமென்று அருத்தமில்லாமல், சொல்லிக்கொண்டிருக்கிற சிவ விஷ்ணுமதங்கள் சீர்திருந்தாவிடில் மக்கள் மேன்மேலும், தீமை செய்பவர்களாகவும், வறுமை, பிணி, ஒற்றுமையின்மை முதலியவைகட்கு ஆளாகி என்றும் ஏழைகளாகவும், பலவீனர்களாகவும், மக்களுக்குள் அன்பற்றவர்களாகவும், மனிதத் தன்மையற்ற அடிமைகளாகவும் இருப்பார்களேயன்றி, இந்திய மக்கள் ஒன்று சேர்ந்து ஒருக்காலும் மற்ற நாட்டார்களைப்போல், தன் மதிப்போடு, மனிதத் தன்மையில், வாழ வியலாதென்பது எனது தாழ்மையான எண்ணமாகும்.

இதுவரை ஹிந்திக்காகச் செலவாயிருக்கும் பணத்தில் பெரும்பாகம் பிராமணரல்லாதாருடையது என்பதில் யாருக்கும் சந்தேகம் இருக்காது. ஹிந்தி படித்தவர்களில் 100.க்கு 97 பேர் பிராமணர்களாகவே இருக்கிறார்கள். தமிழ் நாட்டின் மொத்தத்தொகையில் 100-க்கு 97 பேர் பிராமணரல்லாதாராயிருந்தும், 100-க்கு மூன்று வீதம் உள்ள பிராமணர்கள் தான் ஹிந்தி படித்தவர்களில், 100-க்கு 97 பேர்களாயிருக்கின்றனர். பிராமணரல்லாதார் 100-க்கு 3 பேராவது ஹிந்தி படித்திருப்பார்களா வென்பது சந்தேகம். இந்தப் படிப்பின் எண்ணிக்கை எப்படி இருந்தாலும், நமக்கு அதைப்பற்றி அதிகக் கவலை ஒன்றுமில்லை. ஆனால் இதில் 100-ல் ஒரு பங்கு கவலை கூட தமிழ் பாஷைக்கு எடுத்துக் கொள்ளுவதில்லை என்பதையும், ஹிந்தி படித்த பிராமணர்களால் நமக்கு ஏற்படும் கெடுதியையும் நினைக்கும்போது இதைப்பற்றி வருந்தாமலும், இம்மாதிரி பலன் தரத்தக்க ஹிந்திக்கு நாம் பாடுபட்ட முட்டாள்தனத்திற்கும், நாம் பணம் கொடுத்த பைத்தியக்காரத்தனத்திற்கும் வெட்கப்படாமலுமிருக்க முடியவில்லை. இந்த ஹிந்தி பாஷையானது, நம் பணத்தில்—நமது பிரயத்தனத்தில்—நமது நாட்டில் பல பிராமணர்கள் படித்து வெளி மாகாணங்களுக்குப் போய், ஆங்காங்கு நமக்கு விரோதமாய் பிரசாரம் செய்வதும், நம்மை சூத்திரர்கள், புத்தியில்லாதவர்கள், முட்டாள்கள் என்றும், தென்னாட்டுப் பிராமணரல்லாதாருக்கு மூளை இல்லை என்றும் சொல்லுவதும், வெளிமாகாணங்களிலுள்ள வர்த்தமான பத்திரிக்கைகளில் போய் அமர்ந்துகொண்டு பிராமணாதிக்கத்தை தேசமெல்லாம் நிலைநிறுத்தவும், பிராமணரல்லாதாரை அழுத்தவும் பிரசாரம் செய்யவும், வெளி மாகாண காங்கிரஸ் முதலிய பொது ஸ்தாபனங்களிலும் இவர்களே தலைவர்களாகவும், அவற்றில் மாதம் 100, 200, 300 வீதம் சம்பளம் பெற்றுப் பிழைப்பதுமான காரியத்திற்கல்லாமல், வேறு வழியில் நமக்கு ஒரு பலனையும் அளிப்பதில்லை. இவ்விஷயத்தைப்பற்றி முன் ஒரு சமயம், ஹிந்தி பிரசாரத்திற்காக, நம்மிடம் பணம் பறிக்க, நமது பிராமணர்களால் வெளிமாகாணத்திலிருந்து தருவிக்கப்பட்ட தோழர் புருஷோத்தம தாஸ் தாண்டன் என்பவரை நேரில் கண்டு, இவ்விஷயத்தை அவரிடம் ஒருவர் தெரிவித்ததில்—அதாவது, பணம் மாத்திரம் பிராமணரல்லாதாரிடம் வசூல் செய்கிறீர்களே; இது வரையில் ஹிந்தி படித்த பிள்ளைகள் எல்லாம் 100-க்கு 95 பிராமணப் பிள்ளைகளாகவேதான்

படித்திருக்கின்றன; அதன் உபாத்தியாயர்களும் 100-க்கு 97 பேர் பிராமணர்களாகவே தான் இருக்கிறார்கள்; இதன் காரணமென்ன? சில பிராமணரல்லாத வாலிபர்கள் உபாத்தியாயர்களாகப் பயிற்சி பெற இஷ்டப்பட்டு வந்தவர்களையும், சரியாய் நடத்தாமல் வெளியேற்றப்பட்டதாகவும், என்னிடம் புகார்கள் வந்துகொண்டிருக்க, இந்நிலையில் இதற்காக பிராமணரல்லாதாரை ஹிந்திக்குப் பணம் கேட்பது சரியாயென்று சொன்னதற்கு, இவ்வளவையும் கேட்டுக் கொண்டு, எல்லாவற்றையும் விசாரிப்பதாய்க்கூறிச்சென்றார். அதன் பிறகு அவர் அதைப்பற்றிக் கவலையெடுத்துக் கொள்ளவில்லை. முன்போலவே காரியங்கள் மாத்திரம் நடந்து வருகின்றன. இதே மாதிரி நமது நாட்டுப் பிராமணர்கள், இந்நாட்டாரைத் தங்களால் ஏய்க்க முடியாது என்று தெரிகிற சமயத்தில், வெளிமாகாணத்தில் இருந்து ஒருவரைக்கூட்டி வந்து ஏமாற்றி தங்கள் காரியத்தைச் சாதித்துக் கொள்வது வழக்கமாக இருந்து வருகிறது.

உதாரணமாக, சுயராஜ்யக்கட்சி என்கிற பிராமணக் கட்சிக்கு நமது நாட்டில் யோக்கியதை இல்லாத காலத்தில், தோழர் தேசபந்து தாஸைக்கூட்டிவந்து செல்வாக்குச் சம்பாதித்துக்கொண்டார்கள். இந்து மகாசபை என்கிற பிராமணர் வர்ணாசிரம தர்ம சபைக்கு நமது நாட்டில் யோக்கியதை சம்பாதிக்க, தோழர் லாலா லஜபதிராயைக் கூட்டிவந்து ஏமாற்றினார்கள். காக்கிநாடா காங்கிரசில் சட்டசபைப் பிரவேசத்திற்கு ஆதரவு கொடுத்ததால் தனக்குக் கொஞ்சம் செல்வாக்குக் குறைந்துபோய் விட்டதெனப் பயந்த பிராமணர் ஒருவர், தோழர்கள் பஜாஜையும் பாங்கரையும் தருவித்து, ஊர் ஊராய்த்திரிந்து, உபசாரப் பத்திரம் பெற்று, ஜனங்களை ஏமாற்றி யோக்கியதையை நிலைநிறுத்தினார்கள். பின் தோழர்காந்தியையும் கூட்டிவந்து ஏமாற்றினார்கள். இம் மாதிரியாகவே இது சமயமும் ஹிந்தியைப் பொதுபாஷை ஆக்க வேண்டும் என்கிற கவலையுள்ளவர்கள் போல், தேசத்தின் பேரால், ஆங்காங்கு பல பிராமணர்கள் பேசுவதும், அதைச் சர்க்கார் பள்ளிக்கூடம் முதலிய இடங்களில் கட்டாயப் பாடமாக்கப் பிரயத்தனப்படுவதும் யார் நன்மைக்கு? இனி கொஞ்ச காலத்துக்குள் ஹிந்திப் பிரசாரத்தின் பலனை அனுபவிக்கப்போகிறோம். பிராமணரல்லாதாருக்கு ஏற்பட்ட பல ஆபத்துக்களில் ஹிந்தியும் ஒன்றாய் முடியும்போலிருக்கிறது. பொதுவாய் ஹிந்தி என்பது வெளி மாகாணங்களில்

பிராமண மத பிரசாரம் செய்ய தர்ப்பித்து செய்யும் வித்தை யாய் விட்டது. இந்த இரகசியத்தை நமது நாட்டுப் பாமர ஜனங்கள் அறிவதேயில்லை. இரண்டொருவருக்கு அதன் இரகசியம் தெரிந்தாலும், பிராமணர்களுக்குப் பயந்துகொண்டு தாங்களும் ஒத்துப்பாடி விடுகின்றார்கள். யாராவது துணிந்து வெளிப்பிற்சொன்னால், இவர்களைத் தேசத்துரோகிகள் என்று சொல்லி விடுகிறார்கள்.

சமஸ்கிருதம்.

இதல்லாமல், நமது நாட்டில் சமஸ்கிருத பாஷைக்கா எவ்வளவு லட்சம் ரூபாய் செலவாகிறது? அது அவ்வளவும் யாருடைய பணம்? சமஸ்கிருதத்திற்கென்று தனியாய் எவ்வளவோ பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. இதில் படிக்கிறவர்கள் எல்லாம் யார்? இதன் உபாத்தியாயர்கள் யார்? பிராமணரல்லாத உபாத்தியாயரையாவது, பிராமணரல்லாத பிள்ளைகளையாவது இதில்சேர்த்துக்கொள்கிறார்களா? அரசாங்கத்திலாவது சமஸ்கிருதத்திற்கு இருக்கிற யோக்கியதை தமிழுக்கு இருக்கிறதா? இச் சமஸ்கிருதம் பிராமணரல்லாதார் தாழ்ந்தவர்கள்—சூத்திரர்—பிற்பட்டவர்—அடிமைகள் என்பதற்கு ஆதாரமாயிருக்கிறதே தவிர, வேறு எதற்காவது—நாட்டிற்காவது உபயோகப்படுகிறதா?

தமிழ்.

ஹிந்தியும், சமஸ்கிருதமும் இப்படியிருக்கத் தமிழைப் பற்றியோவென்றால், தமிழ்நாட்டில் தமிழுக்கென்று தனியாய் எத்தனை பள்ளிக்கூடம் இருக்கிறது? சமஸ்கிருதத்திற்கு இருக்கும் பள்ளிக்கூட அளவில், காலில் ஒரு பங்காவது இருக்கிறதா? பிராமணரல்லாத தமிழ் வித்வான்கள் பேராவது பொதுஜனங்களுக்குத் தெரியக்கூடியதாயிருக்கிறதா? தோழர் உ. வெ. சாமிநாதய்யர், தோழர் ராகவய்யங்கார், இன்னும் அய்யர், அய்யங்கார், ஆச்சாரியார், ராவு, சர்மா, என்னும் பிராமணர்கள் பெயர்கள்தான் தமிழ் வித்வான்கள் லிஸ்டிலும் அடிபடுகிறதே யல்லாமல், பிராமணரல்லாதார் பெயர் தெரிகிறதா? இந்தப் பிராமணர்கள்தான், பழைய தமிழ் காவியங்களின் ஏட்டுப் பிரதிகளைப் பிராமணரல்லாதாரிடமிருந்து வாங்கி, அதைத் தங்கள் பிராமண மதத்திற்குத் தகுந்தபடி மொழிபெயர்த்துக்கொண்டு,

அதை அச்சடிக்கப் பிராமணரல்லாதாரிடமே யாசகமாய்ப் பணம் வாங்கி, அச்சுப்போட்டு, புஸ்தகம் 1-க்கு 10ரூபாய் 15 ரூபாய் என்று விற்றுக் கொள்ளை அடித்து லக்ஷக்கணக்காகப் பணம் சேர்த்துக்கொள்ளுகின்றார்கள். நிற்க, சர்க்காரில் ஒரு தமிழ் அகராதி எழுதக் கமிட்டி ஏற்படுத்தினார்கள். அதில் (தமிழுக்கு வார்த்தைகள் கண்டுபிடித்து அர்த்தமெழுதத் தமிழ்படித்த—தமிழர்— பிராமணரல்லாத புலவர்களும், பண்டிதர்களும் எத்தனையோ பெயர் இருக்க, அக் கமிட்டிக்கு) நமது சார்பாய் பிராமணர்களே அங்கத்தினர்களாய் நியமிக்கப்பட்டார்கள். இதற்காக லக்ஷக்கணக்கான நம் ரூபாய்களை வருஷக்கணக்காய்த் தின்றார்கள். இந்தப் பிராமணர்களால் ஏற்பட்ட தமிழ் தான்—தமிழ் அகராதிதான் தமிழ்நாட்டிற்குத் தமிழாய்—தமிழுக்கு ஆதாரமாய், விளங்கப்போகிறது.

இது இப்படியிருக்க, மதுரையம்பதியில் தமிழ்ச் சங்கமென்று ஒரு சங்கமிருக்கிறது. ஆண்டவனே! இதன் கதை வெளியில் சொன்னால் வெட்கக்கேடு; இது பிராமணரல்லாதாரின் பைத்தியக்காரத்தனத்தையும், மூட்டாள் தனத்தையும் நிலைநிறுத்தக் கல்லின்மேல் எழுத்துக்கு நேராயிருக்கிறது. அக்குள்ள தமிழ் பரீக்ஷை அதிகாரிகளும், தமிழ் சங்கத்திற்கு வருடாந்திரப் பிரசிடெண்டுகளும் 100-க்கு 90 போ பிராமணர்கள். அதிலும் "வீடு பிரித்துப்போட்டிருக்கிறது" என்று சொல்லுவதற்கு "வீடு அவுத்துப்போட்டிருக்கிறது" என்று பேசும்படியான பிராமணர்களை அக்கிராசனராகத் தெரிந்தெடுப்பதும் இச் சங்கத்திற்கு நற்சாட்சிப் பத்திரங்களாகும். சமஸ்கிருத சங்கத்தில் எங்காவது பிராமணரல்லாதார், பரீக்ஷை அதிகாரியாய்இல்லாவிட்டாலும் அங்கத்தினராகவாவது சேர்த்துக்கொள்ளப்படுகிறதா? இப்பொழுது எங்கேயோ, தமிழ் காலேஜ் என்று ஒன்று ஏற்படுத்தி இருக்கிறார்களாம். அதன் அதிகாரிகளும், படிக்கும் பிள்ளைகளும், அளவுக்கு மிஞ்சிய பிராமணர்களே. அதன் செலவுக்கு மாத்திரம் பணம் பிராமணரல்லாதாருடையது. நமது பிள்ளைகளின் படிப்புக்கு அரசாங்கத்தின் மூலமாய் தமிழ் புத்தகம் எழுதிக்கொடுப்பவர்களும் பெரும்பாலும் பிராமணர்களே. அவர்கள் தமிழ்ப் புஸ்தகம் என்று பெயர் வைத்து அப் புஸ்தகத்தில் முக்கால் பாகம் சமஸ்கிருத வார்த்தைகளையே கிரப்பி பிராமண வர்ணாச்சிரமத்தைப் பலப்படுத்துவதான விஷயங்களே நமது சிறு பிள்ளைகளுக்கும், இரத்

தத்தில் கலக்கும்படியான கதைகளையும், வாசகங்களையுமே எழுதிப் பணமும் சம்பாதித்துகொள்ளுகிறார்கள். நம்மில் யாராவது, "தமிழ் புஸ்தகம் என்பது சுத்தத் தமிழில் எழுத வேண்டாமா? அவற்றிற்கேற்ற தமிழ் வார்த்தைகள் இல்லையா? நமது தமிழ்நாட்டின் பழக்க வழக்கம், நாகரீகம் அதில் இருக்கவேண்டாமா?" என்று கேட்டால், நம்மவர்களுக்குள்ளாகவே பாஷாபிமானம், பாஷாபிமானம் என்று பேசுகிறவர்களுமாற்றுபவரும், பிராமண சிஷ்யர்களுமான சிலர், உடனே பிராமணர்களுக்கு வக்காலத்து வாங்கிக்கொண்டு, சமஸ்கிருத வார்த்தைகள் தமிழில் கலந்தால் தமிழுக்கு யோக்கியதை குறைந்துபோகாது; அப்படிக் கலப்பது தான் பாஷையின் முன்னேற்றம்; "பழையன கழிதலும், புதியன புகுதலும், வழுவலகாலவகையினாலே" என்றுசமாதானம் சொல்லுவதோடு இதிலுமா ஜாதித்துவேஷம்? என்கிறார்கள். அப்படியானால் தமிழ் வார்த்தைகளோடு அடிக்கடி இங்கிலீஷ் முதலிய பாஷைச் சொற்களைக் கலந்து பேசுவதில்—எழுதுவதில் என்ன குற்றம்? நமது வீட்டுப்பெண்களிடம் நாம் தண்ணீர் கொண்டுவா என்று சொல்லுவதற்குப் பதிலாக, நம்மால் சரியான உச்சரிப்பை உச்சரிக்கவும், தமிழில் எழுதவும், பழக்கமும், சவுகரியமும் இல்லாத சமஸ்கிருத வார்த்தையாகிய சலம் கொண்டுவா, சலம் கொண்டு வா என்று சொல்லுவது குற்றமில்லையானால், அதற்குப்பதிலாக வாட்டர் கொண்டுவா என்று ஆங்கிலச் சொல் சொல்லுவதில் தப்பென்ன? தனித்தமிழ் என்கிற பதத்திற்கும், பாஷாபிமானம் என்கிற பதத்திற்கும் பொருள் தான் என்ன? இம்மாதிரி பாஷாபிமானத்திலிருந்தே, இவர்களது தேசாபிமானத்தின் யோக்கியதையையும் அறிந்து கொள்ளலாம். பழையன கழிந்து புதியன புகுவதாயிருந்தால், நமக்கும் கவலையில்லை; புதியவை வந்து பலாத்காரத்தில் புகுந்து கொண்டு பழையவைகளைக் கழுத்தைப்பிடித்துத் தள்ளுவதானால், அதையும் சகித்துக்கொண்டு அதற்கு வக்காலத்துப் பேசுவது என்பது பாஷைத்துரோகமும், சமூகத்துரோகமும் ஆவதோடல்லாமல், தமிழ்த்தாயின் கற்பை, தமிழ் துரோகிகளுக்கு சுயநலத்திற்காக விற்றவர்கள் என்று தான் சொல்ல வேண்டும். இம்மாதிரியே மற்றும் நமது அரசியல், மதம், பாஷை, கல்வி, ஆசாரம், நாகரீகம் முதலியவைகளில் பிராமணர்கள் எவ்வளவு தூரம் ஆதிக்கம் பெற்றிருக்கிறார்கள் என்பதும், அவ்வாதிக்கத்திற்கு நம்மவர்களிலேயே எவ்வளவு பேர் நம்மைக்காட்டிக் கொடுத்துக்கொண்டு வாழ்கிறார்கள்

நம் பணியை
கடவுள் ஏற்றுக்கொண்டாரா?

(கைவல்யம்)

பொருளாகக்கொண்ட பொருள் எவைக்கும் முதற் பொருள் கடவுள்; எல்லாச் சக்கரவர்த்திகளுக்கும் பெரியவர் கடவுள்; பஞ்சபூதத்திற்கும் பெரியவர் கடவுள்; பஞ்சபூதத் திற்கும் அதன் சக்திக்கும் அது ஒன்றிலிருந்து மற்றொன்றாக விரிதலுக்கும் குவிதலுக்குமுள்ள சக்தியும் அதற்கு மேற் பட்ட சக்தியிருந்தால் அதற்கும் இந்த உலகத்தைப்போன்ற அநேக அண்டங்களுக்கும் இத்தனைக்குமுள்ள உள் சக் திக்கும் கர்த்தா கடவுள். கர்த்தா என்னும் பேரே கடவு ளுக்குத் தனிப்பெயராகவுமிருக்கிறது. இந்த கம் கடவுள் தானாகவும், மனிதன், மிருகம், பட்சி முதலிய அவதாரங் களாகவும் பல கோவில்களில் சுயம்புவாக எழுந்தருளியும், தேசத்துன்பம், நாட்டுத்துன்பம், ஊர்த்துன்பம், கிராமத்துன் பம், வீதித்துன்பம், குடும்பத்துன்பம், குலகோத்திரத்துன்பம், தனி நபர் துன்பம், மாட்டுக்கும் யானைக்கும் பன்றிக்குட்டிக் கும் நாரைக்கும் கருங்குருவிக்கும் மரத்திற்கும் கல்லிற்கும் துளசிச்செடிக்கும் இத்தனைக்கும் துன்பங்களை தீர்த்து அவரவர்களுக்கு வேண்டியதைக் கொடுத்தார் கடவுள் என் பதாக இதிகாச புராணங்களில் படிக்கிறோம். கடவுள் வந்து ஒவ்வொரு ஊரிலும் ஒவ்வொரு கோவில்களிலும் அநேக மகத் துவங்களையும் தன் திருவிளையாடல்களையும் செய்து வந் தாரென்று அநேக புராணங்களிலும் ஊர்க்கதைகளிலும் கேட்கிறோம். இப்பொழுதும் வருஷா வருஷம் புரட்டாசி மாதத்தில் திருப்பதியில் பார்ப்பனப் பிள்ளையாக வந்து

என்பதும், ஒவ்வொரு பிராமணரல்லாதாரும் சுயநலத்தை விட்டு நடுநிலைமையிலிருந்து யோசிப்பார்களானால் விளங் காமற் போகாது.

விளையாடிப் போவதாகவும், பழனியில் தை கார்த்திகை மாதங்களில் மீன், கோழி, பாம்பு இவைகளை அறுத்து சமைத்து காவடி கட்டி வந்தாலும் உயிர்பெற்று அதாவது உளர் போய்ச்சேர்ந்து விடுகிறதாகவும் கேட்கிறோம். இன்னும் அநேக கோவில்களில் அவர் லீலை புரிவதைக்கேட்டு காமும் போய் காணிக்கை கப்பம் கொடுத்தும் வருகிறோம். இதுவு மல்லாமல் கடவுளுடைய பெண்ஜாதி, வைப்பாட்டி, அவரால் சிருஷ்டித்த பெண், இவர்களிடம் பிறந்த பிள்ளைகள், மூக்கில், கண்ணில், வியர்வையில், நினைவில் உண்டான பிள்ளைகள் தேவர்கள், பரிவாரங்களான பூதம், முனி, குண்டோதரன் முதல் கருடன் வரையிலுமுள்ள அவலாட்கள், அவரைக் கண்ட ஞானிகள், யோகிகள், சித்தர்கள், அவரால் ஆசீர் வதிக்கப்பட்ட ஆழ்வார்கள், நாயன்மார்கள், அவர் பேரை எடுத்து நமக்குக் காட்டின ஆச்சாரிகள், குருக்கள், இத்தியாதி பேர்கள் செய்த அற்புதங்களையும் சரித்தனையும் நம்புகி றோம்; பின்பற்றுகிறோம். அந்த கடவுளும் அவருடைய பரி வாரங்களும் இந்தனையும் நம் தேசத்திலேயே செய்ததாக கதை புராணங்களும் அதற்குத் தகுந்தவாறு அனுமானிக்க சம்பாதகனுமிருக்கிறதே ஒழிய வேறு எந்த தேசத்திலும் அவருடைய லீலையுமில்லை; இந்தனை புராணக்கதைக ளில்லை நம் வயிற்றுக்குச் சோறும், இடுப்பிற்குத் துணி யும், முகத்திற்கு மரியாதையும், கைக்கு வலிவும் காலுக்கு சுவாதீனமும், மனதிற்கு இரக்கமும் இல்லாவிட்டாலும் முன் சொன்ன அவர் திருவிளையாட்டையே பெருமையாக நம் தேசம் கொண்டிருக்கின்றது.

இத்தனையும் நம்பி நாம் அந்த கடவுளின் தயவைப்பெற தேகம், பொருள், மனம் இத்தனையாலும் அதற்குத் தொண்டு செய்து வந்தோம்; வருகிறோம். பொன் வெள்ளி ரத்தினங்கள் காணிக்கையாகவும் ஆபரணமாகவும் போடு கிறோம்; கோவில் கட்டுகிறோம்; கும்பாபிஷேகம் செய்கி றோம்; குரு பூஜையிடுகிறோம். குருக்களை வணங்குகி றோம்; குலகுருவின் பாதம் கழுவுகிறோம். குழந்தை மயிரைக் கொடுத்து குல தெய்வமென்று தனித்தனி பூஜையும் போடுகி றோம். ஆசாரம், அனுஷ்டானம், விரதம் இத்தனையும் கொ ண்டாடுகிறோம். பூசை, நைவேத்தியம், அர்ச்சனை, அபிஷே கம் இத்தனைக்கும் நெய், பால், தேன் இவையும் அநேகம் கொடுக்கிறோம். பங்காளிக்குப் பாதகம் செய்தும் பாடுபடு

கிறவர்கட்கு வேலையும் கூலியும் கொடுக்காமல், பதிக்கையில் கிடக்கையில் பாதுகாக்கும் பணியாளருக்கு பத்துப் பணம் கூடக்கொடுக்காமல், படிக்கப் பணம் கேட்க வரும் பந்துப்பிள்ளைகளை பக்கத்தில் கூட வர விடாமல் பசித்து வந்தவர்களைப் பறக்க அடித்தும், கடவுளுக்கு பூமி, தோட்டம், தோப்பு, நந்தவனம், கிணறு, குளம், பால்மடம் இத்தனையும் செய்துவிட்டுச் சாகிறோம். நாள், நட்சத்திரம் வருடம், மாதம், வாரம் இத்தனைக்கும் கட்டளை ஏற்படுத்தி யிருக்கிறோம். இனியும் சொல்லப்போனால் நமது ஆயுளெல் லாம் கடவுளுக்கே உழைக்கிறோம். இத்தனை உழைப்பும் விசேடமும் மரியாதை வணக்கமும் நம் நாட்டானைப்போன்று கடவுளுக்குச் செய்கிறவர்கள் வேறு எந்த நாட்டிலுமில்லை.

இந்தப்பெரிய மனிதருக்கு இத்தனையும் எதற்காகச் செய்கிறோம்? நமக்கு வேண்டியதைச் செய்வார், சமயத் திற்கு உபயோகப்படுவார் என்பதே தவிர வேறு இல்லை. மோக்ஷத்தை மட்டுந்தான் கடவுள் கொடுப்பார், மற்றதற்கு அவர் அதிகாரியல்ல என்று சொல்லுவதற்குமில்லை. ஏனெ னில் இகலோக சுகங்களைப் பெற்றுக்கொள்வதற்காகவே இத்தனை கர்மங்கள் விதித்ததாகவும், அதைச் செய்தவர் அநேகர்களுக்கு எல்லா போகங்களும் கொடுத்திருப்பதாக வும், தாசி வீட்டுக்குப் போகக்கூட பொன், கொடுத்ததாகவும் கதைகளும் புராணங்களும் குருக்களும் ஆச்சாரிகளும் சொல் லுகிறார்கள். அதை நம்பியே நாமும் இத்தனையும் எந்த கஷ்டமிருந்தாலும் செய்து வருகிறோம். இத்தனை போகத் தையும் பெற்றுக்கொள்ளும் கடவுள் இங்கு ஒரு சிறு சௌகரி யமும் செய்யாமல் சொர்க்கத்தில் போக போக்கியம் கொடுப் பார் என்பதும், இத்தனை செய்தும் நம் அடிமைத்தனத்தை நீக்க கடவுளுக்குச் சம்மதமில்லை என்பதும், நாம் செய்ததை ஏற்றுக்கொண்டாரா, இல்லையா என்பதும், ஏற்றுக்கொண் டால் ஏன் கவனிக்கவில்லை? ஏற்றுக்கொள்ளவில்லையா னால் இனி அவர் திருப்திக்குச் செய்ய வேண்டுவதென்ன என்பதும், பக்கத்தூரான் அவரை எப்படித் திருப்தி செய்து நன்மை யடைகிறான் என்பதும், "குடி அரசு" உங்களுக்கு எடுத்துச்சொல்லும். பக்திமான்கள் முதற்கொண்டு மனித னைத்தூர நீக்கி கடவுளைக் கட்டிக் கொண்டிருக்கிறவர்கள் வரையிலும் படித்து புத்தியில் ஆராய்ச்சி செய்து விட்டு கோபித்துக் கொள்ளட்டும்.

கடவுளைக்கட்டிப்பிடித்து, பொழுதையும் பொருளையும் கெடுத்து, கடைத்தேராமல், அதிக பாத்தியதைகொண்டாடும் தேசமும் பக்த கோடிகளும் இந்தியாவையும் அதிலுள்ள பக்த கோடிகளையும் தவிர வேறு இல்லை. அப்படியிருக்க மனிதனை மனிதன் அடிமை கொள்ளவும், ஏமாற்றவும், ஒருவன் தேடினதை மற்றவன் அபகரிக்கவும், கடவுள் பேரால் ஒரு கூட்டத்தார் பிழைக்கவுமா கடவுள் அதிகாரம் செய்வது? இந்த அதிகாரத்தை நிலை நிறுத்தும் கடவுளும் அதைச்சேர்ந்த புராணக்கதைகளுமான இந்துமதம் ஒழிய வேண்டுமென்கிறது 'குடி அரசு' இதைக்கேட்டுத்தான் புரோகிதர்கள் தம் பிழைப்பு போய்விட்டதென்றழுதாலும் பக்திமான்களும் வருத்தப்படுகிறார்களே! இவர்கள் வருத்தத்தையாவது கடவுள் கவனிக்கப்படாதா? 'கடவுளை நம்பினவன் கைவிடப்படமாட்டான்' என்கிற வார்த்தையையாவது கவனிப்பாரா? நம்பிக்கைக்கு இத்தனை காலமும் போதாதா? காலாவதிக்காலம் இனி எப்பொழுது முடியும்? இத்தனையும் பெற்றுப் பெண்ஜாதி பிள்ளை குட்டி பரிவாரங்களுடன் சுகமனுபவித்துக் கொண்டிருக்கும் கடவுளுக்கு நன்றியுண்டா? இவருக்கு தேர்திருநாளென்ன? சதிர் சங்கீதமென்ன? வாணம் மத்தாப்பின் வரிசை என்ன? கொடி, குடை, வாகனம் சிம்மாசனம், இத்தனைக்கும் புஷ்பத்தாலே சிங்காரிக்கும் அழகென்ன? தேவதாசிகளென்ன? அவர்கள் மூக்கு வைரங்களுக்கும் மடாதிபதிகள் கைவிரல் மோதிர வைரங்களுக்கும் சமத்துவமான பிரகாசமென்ன? இவைகளை எல்லாம் கண்ட பக்த கோடிகளின் ஏகோ விஷய பக்தியென்ன? இத்தனை வைபவத்தோடு கோவில் புகுந்த இவருக்கு திம்பு, தலையணை, தொடைபில்லை, புஷ்ப சந்தன அலங்காரத்தோடு கூடின பள்ளியறை என்ன? அம்மன், பிரியா அம்மன், வெற்றிலை பாக்கு, படிக்கம், பட்சணம், பழம், பால், பக்த கூட்டச் சேவை என்ன? இத்தனையும் நம்மால் அனுபவித்து வரும் கடளுக்கு விஸ்வாசமில்லாமல் போவதற்கு காரணமென்ன? எந்த சிறு குற்றத்திற்கும் வீடு தவறாமல் வந்து காணிக்கை கப்பம் வாங்கிப்போகிறவராயிற்றே கடவுள். நாம் கொடுக்கும் காணிக்கைக் கப்பம் அவர் கணக்கிற்போய் சேரவில்லையா? இந்த காரியத்திற்குத் தனியாக காணிக்கை வேண்டுமா? அக்குற்றங்களையும் அதன் காரணங்களையும் பத்து வயதிற்கு மேல் படிக்காத ஒரு பத்திராதிபரை "குடி அரசின்" மூலியமாக தெரியப்படுத்த அந்தக் கடவுள் திருவுளங் கொண்டிருக்கிறார்.

ஆபத்திற்குதவாத பிள்ளை, பசிக்குதவாத அன்னம், தரித்திரத்தைத் தெரிந்துகொள்ளாத மனைவி, துன்பத்திற்குப் பங்கமிருக்காத நண்பன், இவர்கள் பிரயோஜனப்பட மாட்டார்கள் என்பது போல நிராதரவாயிருக்கும் நமக்கு இந்த சமயம் உதவாத கடவுளால் என்ன பிரயோஜனம்? விதி நம்மை பரிகாசம் பண்ணுகிறது. தேசபக்தி விளக்கு கொளுத்துண்டது. ஆனால் அதில் அவநம்பிக்கையும் மோசடியும் பிறர் கலம் காணாமல் தன்னலமுமே காண்கிறதே. காம் புகழ்ந்து பாடின தெய்வம் வந்து முன்னே நின்று ஒரு வார்த்தை கூட சொல்லப்படாதா? பெரிய இங்கிலீஷ்காரன் விதிவசத்தால் கடலுக்கப்பாலிருக்கிறான். இங்கு வருமுன்னே அவனை 'ராஜ்ய தந்திரம்' என்னும் கத்தரியால் கத்தரித்து விடுகிறார்கள். தாலும் வளர்ந்து பிறரும் வளரச் செய்வ தாகிய அம்சத்தை துண்டித்து அவருடைய ஆண்மையில் முக்கால் பங்கை கொய்து விடுகிறார்கள் என்று நாம் கூவும் சப்தம் கடவுள் திருச்செவிக்கு எறவில்லையா? இந்தச்சிதை வுண்ட மனிதர் தமது விலைமிகுந்த கற்பனா சக்திகளினால் தேடிப் பார்க்க மாட்டார்கள். எனினும் சந்தேகம் நம் நாட்டில் தோன்றி காமே சண்டை போடுவது அவருக்கெட்ட வில்லையா? பெண்டாட்டி பிணக்கு, பிள்ளை மாந்தம், திருட்டுப் பயல்கள் திருட்டுப் பலிதப் பிராத்தனை இத்தனைக்கும் சாது இருந்தே இருக்கிறது. உண்டிகைப் பணம் குறைந்தாலும் வருஷா வருஷம் காவடிக் கணக்கு குறைந்தாலும் கட்டளையை நிறுத்தி விட்டாலும் குருக்களுக்கு தக்ஷணை குருவிற்கு பாதபூசை, குட்டிச்சுவாமிகள் உருவு, கருமாந்தரம் கல்லெடுப்பு, கலியாணம் இத்தனைக்கும் கொடுக்க வேண்டியதை கொடுக்காவிட்டாலும் அந்தக் கடவுள் பண்ணும் கூத்து கொஞ்ச நஞ்சமா? பெண்ஜாதி, புரோகிதன், பூசாரி குறிகாரன், சோதிடம், பல்லி இத்தனை பேர் சிபார்சினாலும் நம் குடும்பங்களை பண்ணாத கீர்த்தி பண்ணி பழிச் சொல்லுக்கு ஆளாக்கி வரும் கடவுள் நாம் படும் கஷ்டத்தை அறிந்து அதை நிவர்த்திசெய்யக்கூடாதா? நம் கூட்டத்தார்களான பக்தர்கள் அந்த நன்றி கெட்ட தெய்வத்திற்கு பயந்து போனாலும் மேல் உலகத்திலிருக்கும் நம் பெரியவர்களாவது இதைகவனிக்கப்படாதா? காசி, கயா, அரித்துவாரம், ராமேஸ்வரம் முதலிய இடங்களில் வருஷா வருஷம் அமாவாசை பிரதினம் நாம் கூப்பிடும்பொழுது எல்லாம் வந்து நாம் கொடுப்பதை புரோகிதர் மூலியமாக வாங்கிச் செல்லுகிறார்களே! காசி கயாவில் பிரத்யட்சமாக ஆகாசத்

தில் வந்து நிற்பதாக புரோகிதர்களும் அவர்கள் புரோக்கர் களும் சொல்லுகிறார்களே! அங்கு போய் வரும் பணக்கார னும் புரோகிதனும் சொல்லுவது பொய்யாகவாயிருக் கும்? கடவுள் உலகமும் அவர்கள் உலகமும் பக்கமாகத் தானே இருக்கும்? இவர்களாவது சொல்லப்படாதா? முப்பத்தி முக்கோடி தேவர்களையும் வசப்படுத்தும் மந்திரம் நமது கஷ்டங்களை யெல்லாம் தீர்க்காதா? அதற்கு லாயக்கில் லாத மந்திரம் பிழைப்பிற்கேற்படுத்திக் கொண்டதா? இந்த சமயம் நம் கடவுள் நமக்குப் பிரத்தியட்சத்தில் வந்து ஏதா வது உதவி செய்தால் அநேகம் பேர் அவர் பேரைச் சொல்லி பிழைக்கலாம்; 'குடி அரசு'ம் வாயை மூடிக்கொள்ளும்.

கடவுள் இல்லை யென்று 'குடி அரசு' சொல்லவில்லை. உங்களுக்கு கடவுளைப்பற்றி எவ்வளவு தெரியுமோ அவ்வ ளவு அதற்கும் தெரியும். அந்த கடவுளுக்கும் ஆன்மாவிற்கு முள்ள சம்பந்தத்தை பற்றியும் அதன் தத்துவங்களைப் பற்றி யும் அதை சம்மதித்த பெரியவர்களையும் 'குடிஅரசு' குற்றம் சொல்லாது. மனிதனை மனிதன் அடிமை கொள்ளவும் சுய மரியாதையைப் போக்கவும் எழுகள் பணத்தை அபகரிக்கவும் பணக்காரர்கள் பணம் சமூக நன்மைக்கு உதவாமல் பாழாக வும் எந்தக் கடவுள் காரணமாக இருக்கிறாரோ அந்தக் கடவு ளும், அந்தக்கடவுள் பேரால் ஜன சமூகங்களை அடிமை யாக்க அனுகூலமான இதிகாச புராணங்களும் அந்த இந்து மதமுமே ஒழிய வேண்டும் என்று 'குடி அரசு' சொல்லுகி றது. திருஷ்டாந்தமாக ஒன்றை இப்பொழுது எடுத்துக்காட் டுகிறோம். ஒரு இந்து; கிறிஸ்தவனாகவோ மகமதியனாக வோ மாறினால் எல்லாப் பாவத்திலிருந்தும் விடுபட்டு புண் ணிய தேகமாகி எல்லா சுதந்திரமும் அடைகிறான். இந்துவா யிருக்கையில் மிருகத்திற்கு கீழாக மதிக்கப்பட்டு கண்ணில் காணமுடியாத பாவியாகவிருந்தான். இப்பேர்ப்பட்ட அக் கிரமத்திற்கு எதுவாய் இருக்கும் இந்து கடவுள் தான் ஒழிய வேண்டுமென்கிறது 'குடி அரசு.'

வேடிக்கைப் பேச்சுகள்.

(பி. ஆர். குப்புசாமி.)

மகன்:—அப்பா! உலகிலுள்ள ஜீவராசிகளை படைத்தவர் யார்?

தகப்பன்:— கடவுள் படைத்தார்.

மகன்:—கடவுளை படைத்தவர் யார்?

தகப்பன்:— (திடுக்கிட்டு சிறிது நேரம் பொறுத்து) கடவுள் இயற்கையாய் உண்டானவர் ஆதியந்த மில்லாதவர். அவரை யாரும் படைக்கவில்லை.

மகன்:—கடவுள் இயற்கையாய்உண்டாகியிருக்கும்போது மற்ற ஜீவராசிகளும் என் இயற்கையாய் உண்டாகியிருக்க முடியாது?

* *
* * *
*

எஜமான்—: அடே நமது பெட்டி கிட்டி எல்லாம் இராமசாமி கடையில் இருக்கிறது, எடுத்துக்கொண்டுவா.

[வேலைக்காரன் பெட்டி எடுத்துக் கொண்டு சிறிது நேரம் பொறுத்து வந்தான்].

எஜமான்:—ஏண்டா இவ்வளவு நேரம்?

வேலைக்காரன்:—இராமசாமி பெட்டி கொடுத்தார், கிட்டி கொடுக்கவில்லை. அதற்கு எங்கள் இருவருக்கும் சண்டை நடந்தது. பஞ்சாயத்தார் விலக்க வந்தேன். அதனால்தான் இவ்வளவு நேரமாய் விட்டது.

* *
* * *
*

தாயார்:—(டாக்டரைக்கண்டு) காலணாவை குழந்தை விழுங்கி விட்டது. அதை எடுக்கவேண்டும். என்ன கேட்கிறீர்?

டாக்டர்:—5 ரூபாய் வேண்டும்.

தாயார்:—5 ரூபாயா! நேற்று 20 ரூபாய் விலையுள்ள வெள்ளிப்பாத்திரம் கிணற்றில் விழுந்து விட்டது. அதனை எடுக்க குப்பனுக்கு 4 அணாதான் கொடுத்தேன். காலணா எடுக்க 5 ரூபாயா? வேண்டாம், குப்பனைக்கொண்டு எடுத்துக் கொள்ளுவேன்.

* * * * * *

உபாத்தியாயர்:—(பைபிள் பாடம்) பிள்ளைகளே! இந்த உலகம் தேவனால் படைக்கப்பட்டது.

உபாத்தியாயர்:— (பூகோள பாடம்) பிள்ளைகளே! முதன் முதலில் சூரியன் மிகப்பெரிய நெருப்புக்கோளமாயிருந்தது. அதனின்றும் பிரிந்த ஒரு நெருப்புக் கோளந்தான் நாம் வசிக்கும் பூமி. இது வரவரக் குளிர்ச்சியாயிற்று.

மாணவன்:—சார்! காலையில் பூமியைத் தேவன் படைத்தார் என்று பைபிள் கிளாசில் சொன்னீர்களே! எதை உண்மையென்று நம்புகிறது?

* * * * * *

முத்துச்சாமி:—ஐயா சிற்பியவர்களே! என் தந்தையின் தாத்தாவின் தாயின் தகப்பனாரின் தகப்பனாரின் சகோதரர் படமொன்று எழுதிக்கொடுப்பீரா?

சிற்பி:—என்ன! இரண்டுமைல் தூரம் நீளுகின்றதே! எதேனும் படம் கொண்டுவந்தாலல்லவோ அதைப் பார்த்து எழுதமுடியும்? காணாமற்போன ஒருவருடைய உருவத்தை வரைவதெப்படி?

முத்துச்சாமி:—நல்லது! இந்த சிவன், விஷ்ணு, பிரமா, விநாயகர், முருகன், உருவங்களை வரைந்திருக்கிறீரல்லவா? அவைகள் எப்படித் தெரிந்தன? நேரில் பார்த்தா எழுதப்பட்டது?

* * * * * *

மகன்:—இப்பூமியைத் தாங்கிக்கொண்டிருப்பது யாரப்பா?

தந்தை:—ஆதி சேஷன்.

மகன்:—ஆதிசேஷனைத் தாங்கிக்கொண்டு இருப்பது எது?

தந்தை:—(பதில் சொல்ல முடியாமல் விழிக்கிறார்.)

சிவிப்படையே!

(எஸ். சி. பரன்)

நமது ஊர்ச்சிவன் கோயிலில் வசந்தோற்சவம் ஆரம்பித்து நாலு தினங்களாயின. இன்று ஐந்தாம் திருவிழா. சுவாமி ரிஷப வாகனாரூடராய். பார்வதி சமேதராய் வீதி வலம் வருவார். இரவில் வாணவேடிக்கைகளும் உண்டு. பட்டிக்காட்டிலிருந்து புண்ணியத்தை மூட்டை கட்டிக் கொண்டு போகச் சேர்ந்து மூட்டையுடன் ஆண்களும் பெண்களும் வந்து குவிந்திருக்கிறார்கள். (சுவாமி, மாட்டின் மேல் ஏறிவருவானேன்? பெண்ஜாதி சதா கூடவே இருப்பானேன் என்று கேட்காதீர்கள்)

இன்று உற்சவத்துக்காக வந்திருக்கும் ஜனக்கும்பல் அதிகம். எங்கும் அங்காடிக்கடைகளும் வந்து நிரம்பியிருக்கின்றன. சந்துத்தெரு சாமிநாதபிள்ளை ரொம்ப பக்திமான். காலை மாலை சிவன் கோயிலுக்குப் போகாமல் இருக்க மாட்டார். அன்று ஞாயிற்றுக்கிழமையானதால் வழக்கம் போல் கோயிலுக்குக் காலையில் புறப்பட்டார். அவர் மகன் மூன்றாவது பாரத்தில் படித்துக்கொண்டிருக்கிறான். அவன் பெயர் சோமு. அவனும் அன்று தகப்பனாருடன் கோயிலுக்கு வருகிறேன் என்று புறப்பட்டான்.

தகப்பனாரும், மகனும் நேரத்திலேயே ஸ்நானம் பண்ணினார்கள். பரிசுத்தத்திற்காகப் பட்டாடைகளைக் கட்டிக் கொண்டார்கள். குளித்த சுத்தமான சரீரத்தில் சாம்பலைக் குழைத்துப்பட்டை தீர்த்தார்கள். சாமிநாதபிள்ளை வழக்கம்போல் ஒரு தேங்காய், இரண்டு வாழைப்பழம், பாக்கு வெற்றிலை, ஒரு வில்லை சூடம், கொஞ்சம் புஷ்பம், ஆகிய இந்த எடுபிடி தளவாடங்களுடன் புறப்பட்டார்.

தகப்பனாரும், மகனும் கோயில் சந்நிதியை அடைந்தார்கள். உடனே பெரிய ஆரவாரத்துடன் ஒரு கூட்டம்

அவரைச் சூழ்ந்து கொண்டது. "கண்ணில்லாத கபோதி ஐபா! கால்போன நொண்டி சாமி! கை போன முடவன் ஐபா! சீக்காளி ஐபா! நடக்க முடியாதவன் ஐபா! அனாதை ஐபா! முழுசு காள் பட்டினி ஐயா! காலணா காசு கொடு ஐபா! ஒரு தம்பிடியாவது கொடு ஐபா! உனக்குப் புண்ணியமுண்டு ஐபா!" என்ற சப்தம் கூட்டத்திலிருந்து புறப்பட்டு வானத்தைப் பிளக்கின்றது.

தகப்பனும் பிள்ளையும் கூட்டத்தின் மத்தியில் சிக்கிக்கொண்டார்கள். வெளியில் செல்ல வழியில்லை. சோமு கூட்டத்தில் உள்ளவர்களைக் கவனித்தான். கால் போனவர்கள்; கை போனவர்கள்; கண் கெட்டவர்கள்; தீராத நோயாளிகள்; எலும்புந்தோலுமாய் ஸ்கெலிட்டனாக இருப்பவர்கள், அவர்கள் மேலிருந்து வீசும் வாடை சகிக்க முடியவில்லை; இந்தக் காட்சியைக் கண்டு உண்மையில் பரிதாபங் கொண்டான்.

தகப்பனாருக்கோ கோபம் தாங்க முடியவில்லை. "அடே விலகிப் போங்களடா! திருட்டுப் பசங்களா! வேறு பிழைப்பில்லையா உங்களுக்கு! வழியை விடுங்களடா! முடிச்சவிழ்க்கிப் பசங்களா!" என்று சத்தம் போட்டுப் பார்த்தார். ஒருவரும் விலக வில்லை. இதற்குள் அவர் கையிலிருந்த எடுபிடி தளவாடங்கள் போனவிடந் தெரியவில்லை.

கடைசியில் அவர் தனது வஸ்தாதுத் தன்மையைக் காட்ட ஆரம்பித்தார். கால்களாலும், கைகளாலும் உதைத்து அடித்து விரட்டிக் கூட்டத்தை விலக்கிக் கொண்டு, பையனையும் இழுத்துக் கொண்டு வெறுங்கையுடன் கோயிலுக்குப் போய்ச்சேர்ந்தார்.

அங்கேயுள்ள குழவிக்கல்லைப் பார்த்து, அதற்கென்று தான் மனப்பாடம் பண்ணி வைத்திருந்த இரண்டு தேவாரப் பாடல்களை ஓப்பித்தார். பையன் இவற்றையெல்லாம் வேடிக்கை பார்த்துக்கொண்டே யிருந்தான். பாடல் பாடி முடிந்தவுட்ன் பையனையும் அழைத்துக்கொண்டு மீண்டும் வந்த வழியே திரும்பினார்.

இப்பொழுது முன்பு சூழ்ந்து கொண்ட கூட்டம் கிட்டத்தில் நெருங்கவில்லை. ஆனால் அவர்கள் சந்நிதியில் இருபுறங்களிலும் நின்று கொண்டும், உட்கார்ந்து கொண்டும் புலம்

பிக்கொண்டிருந்தார்கள். "அரகரா! மகாதேவா! அண்ணா மலை! முருகா! சிவபெருமானே! கடவுளே! சிவ! சிவ! நட ராஜா! ஆண்டவனே! தீராத துன்பமெல்லாம் தீர்ப்பவனே! மனக்கவலை தீர்க்கும் மகாதேவா!" என்றெல்லாம் சொல் லிக் கதறிக்கொண்டிருந்தார்கள்.

கோயிலுக்குப் போவோர், வருவோர் சிலர், பட்டாணிக் கடலைகள், வாழைப்பழங்கள், தேங்காய் மூடிகள், தம்பி டிகள் ஆகியவைகளை அவர்கள் விரித்திருந்த துணிகளி லும், சுத்தி யா கைகளிலும் போட்டு விட்டுப் போனார்கள். இவைகளையெல்லாம் சோமு கவனித்துக்கொண்டே வந் தான். சந்நிதியை விட்டுத் தாண்டியவுடன் அப்பாவைப் பார்த்துக் கீழ்வரும் கேள்விகளைப் போட ஆரம்பித்தான்.

சோமு:—நீங்கள் கோவிலுக்குப்போய் அங்குள்ள குழ விக்கல்லைக் கும்பிடுவதனால் உங்களுக்கு என்ன பலன் கிடைக்கிறது? என் றினந்தினம் இதற்காக நேரத்தை வீணாக் குகிறீர்கள்?

சாமிநாதபிள்ளை:—அடே முட்டாள்! குழவிக் கல் என்று சொல்லாதே! சுவாமி என்று சொல். கடவுளை நம்பினோர் கைவிடப்படார். அவரால் தான் நாம் பிறந்து வளர்ந்து ஏதோ கொஞ்ச சௌக்கியமாக ஜீவனம் பண்ணிக் கொண்டிருக்கிறோம். ஆகையால் அவரை வணங்கவேண்டியது அவசியமாகும். இனி மேல் இப்படி பேச வேண்டாம்.

சோமு:— சரி அப்படியானால் கோயில் சந்நிதியில் அவ் வளவு பிச்சைக்காரர்கள் இருந்தார்களே, அவர்களுக்கெல் லாம் அந்தச் சுவாமி ஏன் நன்மை செய்யவில்லை? அவர்க ளை, வேறு வேலையே யில்லாமல் தங்கள் கஷ்டத்தை நீக்க வேண்டும் என்று கடவுளைப் பார்த்து முறையிட்டுக்கொண்டு தானே இருக்கிறார்கள்?

சாமிநாதபிள்ளை:—அவர்கள் பூர்வ ஜென்மத்தில் பா வம் செய்தவர்கள்; அதனால் இந்த ஜென்மத்தில் கஷ்டத்தை அனுபவித்துத்தான் தீரவேண்டும். ஆகையால் தான் அவர்க ளைக் கடவுள் கஷ்டம் அனுபவிக்கும்படி வைத்திருக்கிறார்.

சோமு:—அப்படியானால், மனிதன் கடவுள் என்றும், சாமி என்றும் சொல்லிக்கொண்டு ஏன் வணங்கவேண்டும்.

அவரவர் செய்த நன்மை தீமைக்குத் தகுந்தபடி அவரவர் பலன் அனுபவிக்கலாம் அல்லவா? ஆதலால் காமும் கல்ல காரியங்களைச் செய்துகொண்டிருந்தால் போதாதா?

சாமிநாதபிள்ளை:—கடவுளை வணங்குவது கல்ல காரியந்தான். ஆதலால் தான் அதைச் செய்யவேண்டும் என்று பெரியோர்கள் சொல்லுகிறார்கள். நானும் செய்து வருகின்றேன்.

சோமு:—சரி, கடவுள் என்றால் எல்லாவற்றையும் கடந்து நிற்பது என்று அர்த்தம். ஆகவே அது நமக்குத் தெரியாத விஷயம். அப்படியிருக்க வெறுங்கல்லைக் கும்பிடுவதும், அதற்கென்று பணத்தை வீணாக்குவதும் கல்லதா? நாம் கோயிலுக்குப் போகும்போது நம்மைச் சுற்றிக்கொண்ட பிச்சைக்காரர்களின் கஷ்டத்தை நீக்குவது அதைவிட கல்ல காரியம் அல்லவா? பிச்சைக்காரர்களின் பரிதாபத்தைப் பார்க்காமல், அவர்களுக்கு உதவி செய்யாமல், இரங்கமாட்டாமல் அவர்களை உதைத்துத் தள்ளிவிட்டுக் கல்லுக்கு எதிரில் போய் நின்றுகொண்டு பாட்டு ஒப்பித்தீர்களே அது எப்படி கல்லதாகும்?

சாமிநாதபிள்ளை:—சீ! காலிப்பயலே என்ன கெட்டுப் போய்விட்டாய்! 'குடி அரசு' பத்திரிகையும், 'பகுத்தறிவு' பத்திரிகையும் படித்ததால் அல்லவோ இப்படி ஆகிவிட்டாய்! பரம கருணாநிதியும், கிருபா சமுத்திரமும் ஆகிய கடவுளை நிந்தித்தால் நீ அழிந்துபோவாய்!

சோமு:—அப்பா! அப்பா! என்னைக்கோபித்துக்கொள்ள வேண்டாம்; எனக்கு ஒன்றுந்தெரியாமல் தான் கேட்டேன்! பரம கருணாநிதியும், கிருபா சமுத்திரமும் ஆகிய கடவுள் ஏன் அந்தப் பிச்சைக்காரர்களிடம் இரக்கங்காட்டி அவர்களைக் காப்பாற்றக் கூடாது. நீங்கள் சொல்லுகிறபடியே அவர்கள் முன் ஜென்மத்தில் பாவம் செய்திருந்தாலும் அதை தமது கிருபாகடாச்சத்தால் மன்னிக்கக்கூடாதா? ஒருதடவை சிவா என்றால் எல்லாப்பாபமும் தொலைந்துவிடுமே. இவர்கள் தினம் ஆயிரம் தடவை சொல்லுகிறார்களே, இப்படிப்பட்டவர்கள் பாவத்தை தொலைக்காததால் அங்குள்ள சுவாமி என்பதை வெறுங் குழவிக்கல்லென்று நான் நினைக்கிறேன்.

இதைக்கேட்டவுடன் சாமிநாதபிள்ளைக்குக் கோபம் வந்துவிட்டது. "அடே! அபோக்கியப்பயலே! ஏது மறுபடி

மோட்சமும், நரகமும்.

(ஈ. வெ. ரா.)

மனிதன், உடல், உயிர், மாயை எனும் மூப்பொருளாக ஆக்கப்பட்டிருக்கின்றான் என்று சைவர்களும், பிரம்மமே மாயா சம்மந்தப்பட்டு இவ்வுலகில் ஜீவர்களாய்த் தோன்றியிருக்கிறது என்று ஸ்மார்த்தர்களும் "ஆன்மா" என்றொரு பொருளை இறைவன் சிருஷ்டித்து மனித உடலுக்குள் புகுத்தியிருக்கிறான் எனச் சில மதங்களும், இவ்வாறு ஒன்றிற்கொன்று முரணாக, நாம், முன் அதிகாரங்களில் விளக்கிக்காட்டியபடி கூறிவருகின்றன. ஆனால் எல்லா மதங்களும் "ஆன்மா" செய்த நன்மை தீமைக்குத் தகுந்தவாறு மோட்சமும் நரகமும் எய்துமென்பதை அபிப்பிராய பேதமின்றி ஒத்துக்கொள்கின்றன. ஆனால் மோட்சமும் நரகமும் எவ்வாறு இருக்கும் என்றால் ஒவ்வொரு மதமும் ஒவ்வொரு விதமாகவே வர்ணிக்கின்றது. எந்த நாட்டான் நரகத்தைப்பற்றி எழுதியிருந்தாலும் தத்தம் நாட்டிலுள்ள கொடிய பிராணிகளும், பயங்கர உருவங்களும், கஷ்டமான அனுபவங்களுந்தான் நரகத்திலேயிருப்பதாகவும், அவ்வாறே மோட்சத்திலும் தத்தம் நாட்டிலுள்ள உயர்ந்த பிராணிகளும், மரஞ்செடி, கொடி, பழவர்க்கம், உணவு, பெண்கள்

யும் எதிர்த்து, எதிர்த்துப்பேசுகிறாய்!" என்று சொல்லிக் கன்னத்தில் பளீர் என்று ஒரு அறை கொடுத்தார். பையன் பாடு கஷ்டமாகி விட்டது. கண்ணீர்விட்டு அழுதுகொண்டு தந்தையுடன் வீடுபோய்ச்சேர்ந்தான். அன்றுமுதல், பிள்ளைவாள், பையனைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்புவதையும் பத்திரிக்கை படிப்பதையும் நிறுத்திவிட்டார். ஆனால் பையன் மாத்திரம் தனது கேள்விகளை கோவிலுக்குப் போகிறவரையும் கேட்டுக்கொண்டே திரிகிறான்.

முதலிய போக போக்கியங்களுமிருப்பதாகவே எழுதிவைத் திருக்கின்றான்.

நரகமும் மோட்சமும் பணம் பறிப்பதற்குப் புரோகிதர் களால் கட்டப்பட்ட ஓர் கற்பனை உலகம் என்றே யாம் கருதுகின்றோம். சிறு பிள்ளைகளை ஐந்து கண்ணன் வருகிறான், பூச்சாண்டி வருகிறான், அழாதே! அப்படிச் செய்யாதே; இப்படி நடவாதே என்று எமாற்றுவது போலவே மனிதர்களை நரகத்தைக்காட்டிப் புரோகிதர்கள் மிரட்டுவதும், சிறு பிள்ளைகளுக்கு மிட்டாய், சாக்லெட் முதலிய வைகளைக் காட்டி தத்தம் வழிக்குத் திருப்புவதுபோல மக்களிடம் மோட்சத்தைக்காட்டி பணம் பறித்து வருகிறார்கள். மேலும் முதலாளிகள் தொழிலாளிகளையும்; அரசன் குடிகளையும் விழித்து, ஜாக்கிரதை! நீ எஜமானத்துரோகம் ராஜத்துரோகம் செய்தால் என்றும் மீளாத கொடு நரகிலே வீழ்ந்து என்றும் நுன்புறுவாய் என்று மிரட்டி அவர்களுக்குத் தங்களின் நியாயமான உரிமைகளைப் பெறவேண்டும் என்ற எண்ணம் உதிக்காமலே எமாற்றி விடுவதற்குத் தக்க போராயுதமாய் நரகம் விளங்கி வருகிறது.

பொதுவாக எம்மதத்தை உற்று நோக்கினாலும் மோட்சத்தை, பணம், சாம்பல் (விபூதி,) சிலுவை, குருபக்தி, பிரார்த்தனை முதலியவைகளினால் எழிதில் பெறவழி காணலாம்.

மக்களுலகில் வறுமையும், எமாற்றும் அக்கிரமங்களும் இந்த மோட்ச—நரக பைத்தியத்தினாலும், பிராயச்சித்தம் என்னும் பித்தலாட்டத்தாலும் பெருகி வளர்ந்து வருகிறது என்பது மறுக்கமுடியா உண்மையாகும்

மோட்சமும் சுவர்க்கமும்; இன்றைய கள்ளுச் சாராயக் கடைகளைவிட, தாசி வேசிகள் வீடுகளைவிட மோசமானது என்பதை மக்கள் உணரும்படி செய்யவேண்டும். மோட்ச நரகம் என்பது, எப்படி திருடர்கள் பிரயாணிகளை வழிப் பறி செய்வதற்கு தனி வழியில் ஆள் அடையாளம் தெரியாமல் வேஷம் போட்டுக்கொண்டு வந்து வழி மறித்து மண்டையை உடைக்க தடிக்கம்பையும், ஈட்டியையும் ஆயுதமாகக் கொண்டு பொருள் பறித்துச் செல்லுகின்றார்களோ, அது போலவே பகல் வழிப்பறிக்காரர்கள் மக்களின் வாழ்க்கைப் பிரயாணத்தில் வழிமறித்துப் பொருள் பறித்துப் போகச்

செய்து கொண்ட ஆயுதங்களேயாகும். ஆகையால் அதை மனிதன் முதலில் மறந்தாகவேண்டும். இந்த உலக வாழ்க்கையையும், ஒழுக்கத்தையும் மக்களுக்கு உதவி செய்வதையும் தனது அளவுக்கும், தேவைக்கும் மேற்பட்டதை அடைய ஆசைப்படாமலிருக்கவேண்டியதையே மோட்சம் என்று மக்கள் கருதவேண்டும். இந்தப்படி அளவுக்கும், தேவைக்கும் மேல் மக்களை அடையச் செய்யாமல் பார்த்துக்கொள்ளுவதையே மக்களை மோட்சத்திற்கு அனுப்பும் வேலையென்று நாம் கருதவேண்டும். மனிதன் இந்த நாட்டில் எப்படி தனது தேவைக்கும், அளவுக்கும் தகுதிக்கும் மேல் அடைய ஆசைப்படுகின்றானோ அதற்கு ஆதரவாய் இருப்பதற்காகவே மூடர்களுக்கு மேல் உலகத்தில் அவரது தகுதிக்கும், அளவுக்கும், தேவைக்கும் மேலாக அனுபவிக்க ஆசை காட்டி இங்கு தட்டிப் பிடுங்கிக்கொள்ளுகிறார்கள். மூடர்களும், பேராசைக்காரர்களுந்தான் மோட்சத்தை விரும்புவதை நாம் பல உதாரணக்களால் காணலாம். மோட்சத்தையும், தேவலோகத்தையும் பற்றி பாமர மக்களுக்குச் சொல்லப்படும் கருத்துக்களை சற்றுக் கவனித்துப் பாருங்கள். மனிதனுக்கு எதில் சாதாரணமாய் ஆசை வரக்கூடுமோ அதையேதான் மோட்சத்தில் சிருஷ்டித்து இருக்கிறார்கள்.

அதாவது இங்குள்ள மனிதனுக்குப் பொருள் வேண்டும், பெண் வேண்டும், தேவையானதெல்லாம் நினைத்த மாத்திரத்தில் கிடைக்கவேண்டும், நல்ல வாலிபப் பருவம் வேண்டும், சதா இடைவிடாத யோக்கியம்பெறவேண்டும், சாகாமலிருக்கவேண்டும். இந்த விஷயங்கள் மனிதனுக்கு சாகும் வரையிலும், செத்த பிறகும் அனுபவிக்கக் கூடிய தாய் ஆசைப்படக்கூடியதாயிருக்கிறது என்பது யாரும் அறிந்ததாகும்.

ஆகவே இந்தக் காரியங்களையே மேல் உலகத்தில் இருப்பதாகவும், அதை அடையக்கூடும் என்றும் ஆசையுண்டாகும்படி அதாவது மேல் உலகத்தில் எங்கு பார்த்தாலும் பொன்னும், ரத்னங்களும் நிறைந்து கிடைக்குமென்றும், உலகமே பொன்னுலகமென்றும் அங்கு அரம்பை, ஊர்வசி முதலாகிய தேவ கன்னிகைகள் என்பவர்கள் என்றைக்கும் வாலிபமாய் நம்பக்கத்தில் இருந்துகொண்டு நமக்கு சதா போகங்கொடுத்துக்கொண்டிருப்பார்களென்றும், காமதேனு, கற்பக விருட்சங்கள் நமக்கு எது தேவையோ அதை உடனே கொண்டு

வந்துகொடுக்குமென்றும், நரை, திரை, மூப்பில்லை யென்றும் நாம் சாகாமல் சிரஞ்சீவியாய் இருப்போமென்றும் சொல்லி ஏற்பாடு செய்துவிட்டதால், அவைகளைமனிதன் நித்தியமாய் நம்பி இந்த உலகத்தையும், இங்குள்ள போக போக்கியங் களையும் அநித்தியமாய் எண்ணி கஷ்டப்பட்டு சம்பாதித்த பொருள்களையெல்லாம் இந்த மோக்ஷத்திற்கு என்றே செலவு செய்வதுடன் நில்லாது இதற்காகவென்று பலவிதமான அக் கிரமமான வழிகளிலும் மற்ற மக்களை வஞ்சித்தும், பட்டினி போட்டும் பொருள் பறித்தும்கூட இதற்காகச் செலவு செய்ய வேண்டியிருக்கின்றது. உதாரணமாக ஏழை மக்கள் கஞ்சிக்கு அலையும்போது குடம் குடமாய்ப் பால் குடங்களை த்தினமும் கல்லின் தலையில் கொட்டி அவற்றை நாறவைப்ப தின் கருத்து என்ன என்றுபாருங்கள். குடியிருக்க நிழல் இல் லாமல் மக்கள் திரியும்போது மலைகளையும், பாறைகளையும் உடைத்துக்கோட்டைகள் போல - சந்திரகாந்த மண்டபங் கள் போல், மக்கள் கோவில்கள் கட்டுவதின் கருத்து என்ன வென்று பாருங்கள். எவ்விதத் தொழிலும் செய்வதற்கு மூலதனம் இல்லாமலும், தொழிலில்லாமலும் மக்கள் வயிறு வளர்க்கக் கப்பலேறி வேறு நாட்டிற்குக் கூலிகளாய்ப்போய் சொத்துப் பொத்தென்று மாண்டு மடிந்து கொண்டிருக்கும் போது, பொம்மைகளை வைத்து உற்சவம் செய்வதும், அவற் றிற்கு பத்து லக்ஷம், ஒருகோடி பத்துக்கோடிக் கணக்காக நகைகளும், பாத்திரங்களும், வாகனங்களும், துணிகளும், சொத்துகளும் சேர்த்து வைப்பதின் கருத்தென்னவென்று பாருங்கள். நாளுக்குநாள் வாழ்க்கை துன்பகரமாய் மாறி, ஏழைகள் மலிந்து வரும்போது ஆயிரக்கணக்காய்—என்— லக்ஷக்கணக்காய் ரூபாய் செலவு செய்து கும்பாபிஷேகங்கள் செய்வதின் கருத்து என்னவென்று யோசித்துப்பாருங்கள். பூமியை உழுது கஷ்டப்பட்டு பயிர் செய்யும் குடியானவர்கள் அரை வயிற்றுக்குக்கூட போதுமான ஆகாரமில்லாமல் கஷ் டப்படும்போது, குளவிக் கல்லுக்கும், செம்பு, பித்தளை பொம்மைகளுக்கும் தினம் பத்து மூட்டை, இருபது மூட்டை, முப்பது மூட்டை போன்ற அரிசிகள் போட்டுப் பொங்கி நைவேத்தியம் செய்து பாடுபடாத சோம்பேறிகளுக்குக் குடும் பத்துடன் போட்டுக்கொண்டிருக்கும் கருத்து என்ன என்று எண்ணிப்பாருங்கள். மக்களில் நூற்றுக்கு 10-பேர்களுக் குக்கூட அதாவது சராசரி படிப்பு-எழுத்து வாசனைகூட இல்லாமல் இருக்கும்போது வேத பாடசாலை, தேவாரப் பாடசாலை முதலியவைகளுக்கும், கல்லுகள், பொம்மைகள்

பின்னால் நின்றுகொண்டு ஆயிரத்திற்கு ஒருவருக்குக் கூடப் புரியாத வேதபாராயணம் முதலிவைகள் செய்யப்படுவதற்கும் லட்சக்கணக்காய் செலவு செய்ததையும், செய்யப்படுவதின் நோக்கம், என்ன என்பதையும் யோசித்துப் பாருங்கள். இப்படியாக நமது நாட்டில், இதுபோலவே எவ்வளவு காரியங்கள் நடைபெறுகின்றது என்பதை நோக்கினால் மற்ற மக்களை எவ்வளவு பாடுபடுத்திபாவது, அவர்கள் எவ்வளவு கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தாலாவது சிறிதும் லக்ஷியம் செய்யாது-நாம் மோக்ஷத்திற்குப் போகவேண்டும்; நாம் பிரபுவாய் இருக்கவேண்டும். லக்ஷ்மி புத்திரர்ராய்-ராஜாவாய்-நிரந்தர செல்வனாய்-சிரஞ்சீவியாய் இருக்கவேண்டும் என்கிற பேராசையல்லாமல் வேறு தத்துவம் அதில் என்ன இருக்கிறது என்பதை யோகித்துப் பாருங்கள். இந்த மாதிரி மோக்ஷம் கற்பிக்கப்பட்டு அதை அடைவதே மனிதனின் முக்கிய லக்ஷியம் என்று போதிக்கப்படுகின்ற பேராசை ஜனங்கள் மலிந்திருக்கும் இந்த நாட்டில் இந்த உணர்ச்சியை அழிக்காமல் என்ன காரியம். நம்மால் செய்ய முடியும் என்பதை யோசித்துப்பாருங்கள். ஆதலால் தான் முதலில் மோக்ஷ உணர்ச்சி ஒழிக்கப்பட வேண்டியது அவசியம் என்று கருதுகின்றோம்.

சகோதரர்களே இந்த மோக்ஷ-உணர்ச்சி ஒழிக்கப்பட வேண்டியதைப் போலவே நரக உணர்ச்சியும் அழிக்கப்பட வேண்டும். மோக்ஷ உணர்ச்சி எப்படிப் பேராசையின் பிரதிபிம்பமோ அதுபோலவே நரக உணர்ச்சியும், அடிமைத்தனத்தினுடையவும்; பயங்காளித்தனத்தினுடையவும், பிரதிபிம்பமாகும். நரகத்திற்கு பயப்படுவதாலேயே அநீதிகளுக்கு மனிதன் ஆளாகின்றான். தைரியமில்லாத கோழையாயிருக்கின்றான். இவைகளையெல்லாம் விட மனிதன் சிறிதாவது முற்போக்கடைய வேண்டுமானால் சிறிதாவது இயற்கையின் இன்பத்தை நுகரவேண்டுமானால் எல்லாவற்றையும் விட மனிதனுக்கு விதி கர்மபலன் என்கின்றதான உணர்ச்சிகள் கண்டிப்பாய் ஒழியவேண்டும். விதி கர்மபலன் என்கின்றவைகளான உணர்ச்சி இந்திய நாட்டிற்கு ஏற்பட்டிருக்கவில்லையானால் இன்றையதினம் இந்தியா அநேக விஷயங்களில் ருஷியர்களுக்கு—என்-இந்த உலகத்தில் உள்ள மற்ற எந்த நாட்டு மக்களின் நிலைமைக்கும் மேலாக இருந்து அநேகமாக உலக மக்களுக்கே சமத்துவத்தையும் சம இன்பத்தையும் இயற்கை இன்ப நுகர்ச்சியையும் கொடுத்து சர்வ சுதந்திரத்துடன் வாழச் செய்திருக்கும் என்று தைரியமாய்ச்

கோயில்களும், மடங்களும் ஏன்?

(சாமி சிதம்பரனார்,)

நமது நாட்டு எழைமக்கள் அடைந்துவரும் துன்பத்தை அறியாதவர்கள் தற்காலத்தில் எவரும் இலர். வைதீகர்களும், அறிந்திருக்கின்றார்கள்; சீர்திருத்தக்காரர்களும் அறிந்திருக்கிறார்கள்; அரசியல் வாதிகளும் அறிந்திருக்கின்றார்கள். இதனை தற்காலத்தில் வைதீகர்கள் எழுதுகின்ற எழுத்துகளிலும், பேசுகின்ற பேச்சுக்களிலும், சீர்திருத்தக்காரர்கள் எழுதுகின்ற எழுத்துக்களிலும், பேசுகின்ற பேச்சுக்களிலும், அரசியல் வாதிகள் எழுதுகின்ற எழுத்துக்களிலும், பேசுகின்ற பேச்சுக்களிலும் காண்கின்றோம். அவர்கள் எழைமக்களின் துன்பத்தைப் பற்றிக் குறிப்பிடாமலிருப்பதில்லை. எழைமக்களுக்கு அறிவுபுகட்ட வேண்டும். அவர்கள் வறுமைப்பிணியைப் போக்கவேண்டும்; அவர்கள் மன மகிழ்ச்சியோடு வாழ்வதற்கு வகை செய்யவேண்டும் என்று சொல்லாமல் விடுவதில்லை.

உண்மையிலேயே எழைமக்கள் துயரம் ஒழியவேண்டும் என்று கருதுகின்றவர்களும் மேற்கண்டவாறே பேசுகின்றார்கள்.

சொல்லுகின்றேன். ஆகையால் இந்த கர்ம பலனின் உணர்ச்சி, மோட்ச நரக நம்பிக்கைகள் மனித்தன்மைக்கு மிகவும் கேடானவை என்பதை நீங்கள் நன்றாய் ஞாபகத்தில் வைக்கவேண்டும். நான் மேலே காட்டிய இந்தக்காரணங்கள் தான் இந்த உலகத்தில் நமது நாட்டை மாத்திரம் இந்த இழிவான நிலையிலும், மீளா அடிமைத்தனத்திலும் வைத்திருக்கின்றன. இவைகள் ஒழிந்தால் தாமாகவே இந்தியா சுயமரியாதை பெற்றுவிடும்; மனித்தன்மை அடைந்து விடும். ஆகையால் சகோதரர்களே நீங்கள் இந்திய நாட்டின் முற்போக்கிற்கும், விடுதலைக்கும் மனித்தன்மைக்கும் பாடுபட வேண்டுமானால் மேற்கண்ட காரியங்களில் உங்கள் கவனத்தைச் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஏழைமக்கள் ஏழைமக்களாகவும், பணக்காரர்கள் பணக்காரர் களாகவும், தாழ்ந்தவர்கள் தாழ்ந்தவர்களாகவும், உயர்ந்த வர்கள் உயர்ந்தவர்களாகவும், இருந்தால்தான் இந்தியா நாக ரீகம் அழியாமலிருக்கும்; வைதீகம் ஒழியாமலிருக்கும்; மதக்கோள்கைகள் மாறாமலிருக்கும்; என்ற எண்ணமுடைய வர்களும் மேற்கூறியவாறே பேசுகின்றார்கள்.

இதிலிருந்து நமக்குத் தெரியும் உண்மைமாத்திரம் ஒன்று உண்டு. அதாவது: ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக அடி மையிலும், வறுமையிலும் அகப்பட்டு இயற்கை இன்பங்களை துய்க்க முடியாமல் வாழ்ந்திருந்த மக்கள் அனைவரும் இக்கா லத்தில் தங்கள் அடிமைத்தனையும், வறுமைத்தனையும், உதறியெறிந்து விட்டு மக்கள் கூட்டத்தோடு ஒன்றுபட்டு வாழவிரும்புகிறார் கள். இதற்குத்தடையாக நிற்பவை மதமோ, கடவுளோ கலை களோ, செல்வமோ, அதிகாரமோ எவைபாயிருப்பினும் அவைகளையெல்லாம் அழிப்பதற்கும் பின்வாங்கமாட்டார் கள் என்பதை அவர்கள் முன்னேற்றத்திற்கருத்தில்லாத வைதீகர்கள் உணர்ந்திருக்கும் காரணத்தாலேயே அவர்களும் மேற்கூறியவாறு வாயளவில் "எழைமக்கள் துயரம் அகலவேண் டும் என்று பேசுகிறார்கள்.

எழை மக்களின் துயரங்களை ஒழிக்கவேண்டும் என்று உண்மையாகப் பேசுகின்றவர்களுக்குள்ளும், எவ்வாறு ஒழிப் பது என்று அதற்குரிய வழிகளை ஆராயும் வகையில் கருத்து வேறுபாடுகள் நிகழ்வதும் இயல்பாக இருக்கிறது. இக்க ருத்து வேறுபாடுகளுக்கும் காரணம், சிலவற்றில் உள்ள அபி மானமும், மூடநம்பிக்கைகளுமே ஆகும் என்பதை யாரும் மறுக்க வொண்ணாது சீர்திருத்த வேட்கையுடையவர்கள் பாலும் மேற்கூறிய அபிமானமும், மூடநம்பிக்கையும் இல்லாமல் ஒழியுமாயின், அவர்களுக்குள் கருத்து வேறுபாடு உண்டாவ தற்கு எள்ளத்தனையும் இடமில்லை என்பதே நாது எண்ணை மாகும்.

பழமையாக இருந்து வரும் சில செயல்கள் தற்காலத்தில் ஒரு வகையிலும் மக்கள் குழுவிற்கு உதவியாகமல் வீணே நிலைத்திருக்குமாயின், அவற்றை அழித்துப் பொதுமக்க ளுக்குப் பயன்படுத்தும் வகையில் சீர்திருத்தக்காரர்கள் ஒன்று

பட்ட கருத்துடையவர்களாயிருத்தல் வேண்டும் இக்கருத்து எல்லோர்மாட்டும் தோன்றுதல் அரிது; அபிமானமும் மூட நம்பிக்கைகளும் அற்றவர்கள் மாட்டே காணப்படும்.

இனிமேற் கூறியவைகளுக்கு எடுத்துக்காட்டுகளாக சில சொல்லுகின்றோம். இப்பொழுது நமது நாட்டிலிருக்கும் கோயில்களைச் சிறிது உற்று நோக்குவோம். இவைகளுக்குள்ள எண்ணற்ற சொத்துக்களில் நாட்டிற்கு என்னபயன் உண்டாகிறது? இவைகளை ஆண்டு அனுபவித்து இன்புறுபவர்கள் யார்? அவர்களால் தான் யாருக்கேனும் ஏதேனும் பயன் உண்டா? என்ற இன்னோரன்ன கேள்விகளை நீங்களே உங்களுக்குள் கேட்டுக்கொள்ளுங்கள், அவைகளுக்குத் தகுந்த விடைகள் கிடைக்கின்றனவா? என்றும் ஆராய்ந்து பாருங்கள்!

அடுத்தபடியாக இந்தக்கோயில்களுங்கு ஒவ்வொரு காளும் ஆகும் செலவு எவ்வளவு? மாதங்கள் தோறும் ஆண்டுகள் தோறும் நடைபெறும் திருவிழாக்களின் பொருட்டு அழியும் பொருள்கள் எவ்வளவு? இந்தக் கோயில்களைக்கண்டால், இக்கோயில்களில் உள்ள பதுமைகளையோ, குழவிக்கல்லுகளையோ பார்த்து வணங்கினால், அவைகளின் தலையில், மக்களுக்குப்பயன்படும் பால், தேன், நெய், சீனி, பழம் போன்ற பொருள்களைக் கொட்டினால் தாங்கள் செய்த "அங்கிரமங்கள்" தொலைந்து போகும் என்று நம்பி பொருளைச்செலவு செய்து கொண்டு ஊர்விட்டு ஊர்போகும் மக்களுக்கு உண்டாகும் பொருட்செலவு எவ்வளவு? என்ற இந்தக்கணைக்கையும் கொஞ்சம் கூட்டிப்பாருங்கள்! இப் பொருளில் நாட்டுக்கு ஒரு சிறு ஊசிநூனியளவேனும் பயனுண்டா என்றும் எண்ணிப் பாருங்கள்!

இந்தக்கணைக்கின்படி நமது இந்திய நாடு முழுவதிலும் உள்ள கோயில்களையெல்லாம் எடுத்துக் கொண்டு பார்த்தால் நூறு கோடி ரூபாய்க்குக் குறையாமல் இவ்வாறு வீண் வழியில் செலவாகுமென்றே கூறலாம். நூறு கோடி ரூபாயாகவே வைத்துக்கொண்டு அதற்கு மாதம் நூற்றுக்கு, குறைந்த வீதமாகிய 5 வட்டி போட்டுக்கொண்டு ஒரு ஆண்டிற்கு மொத்த வட்டி எவ்வளவு ஆகிறது என்று பாருங்கள்! இந்த வட்டித் தொகையை மட்டிலும் செலவழித்து கல்விக்கழகங்களோ, தொழிற்சாலைகளோ, ஏழை மக்களின் பொருட்டு உண்டாக்கி

னால் நாதது நாடு வெகு விரைவில் சம நிலையையடையுமா? அடையாதா? என்ற கேள்விகளையும் ஆராய்ந்து பாருங்கள்.

மற்றொரு செய்தியையும் இவ்வமயம் நினைப்பூட்டுகிறோம். இத்தனை ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக நாம் இந்தக்கோயில்களை யெல்லாம் கட்டிக்கொண்டு அழுதோமே எழுமைக்கலும் இவைகளை நம்பி வழிபாடாற்றி வந்தனமே! நாதது நாட்டிலிருந்த பழைய இந்துமத மன்னர்களெல்லாம் இந்தக் கோயில் களைப்புரந்து வந்தார்களே! இவைகளுக்குக் காணிகளும், காணிக்கைகளும் அளவில்லாமல் அளித்து வந்தார்களே! இவைகளால் நமக்கோ, நாதது நாட்டுக்கோ, நாதது நாட்டுப் பழைய மன்னர்களுக்கோ கிடைத்த பயன் யாது? என்று தான் கேட்கின்றோம். நாதது அறிவு வரவர அடிமையாயிற்று நாம் அன்னிய நாட்டினரால் "கூலிகள்" என இழிவுபடுத்தப்படுகிறோம். ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகவே அடிமை இழிந்து அடிமைப் படுகுழியில் கள்ளுறங்கு கிடக்கின்றோம். நாதது நாடு அடிமை நாடு என்று பிறரால் எள்ளி நகைப்பிடத்தக்க நிலையில் இருக்கிறது. நாதது நாட்டுப் பழைய மன்னர்கள் பெயர் சொல்லுவதற்குப் பெருமை இல்லாமல் மறைந்தது; என்று நாம் கூறுவதை யார் மறுக்க முடியும்?

உண்மையிலேயே நாதது நாட்டுக் கோயில்களும், அவைகளில் வதிவதாகக் கருதப்படும் தெய்வங்களும், பெருமை பொருந்தியனவாக இருந்தால். உயிருள்ளவையாக இருந்தால், வல்லமையுள்ளவையாக இருந்தால் என் நாம் தற்போதுள்ள எழுமை நிலையில் இருக்கவேண்டும். நாதது நாட்டு மக்களில் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது பேர் எழைகளாகவும், அடிமைகளாகவும், கல்வியறிவற்றவர்களாகவும் இருக்கவேண்டும் என்று கேட்கிறோம். இக்கேள்வியையும் உங்கள் மனதில் பதித்து எண்ணிப்பாருங்கள்! உண்மை தோன்றாமற் போகாது.

அன்றியும், நாதது நாட்டில் கோயில்களின் பெயராலும், திருவிழாக்களின் பெயராலும், பொதுப் பொருள்களும், மக்களுடைய செல்வங்களும் செலவாகின்றது போல வேறு எந்த நாட்டிலேலும் செலவாகின்றதா? என்று வரலாற்று நூல் வல்லவர்களைக் கேட்டுப்பாருங்கள்! மதத்தின் பெயரால், மற்ற நாடுகளிலும், இந்து மதத்தினைத்தவிர மற்ற மதத்தினர்களிடையிலும் செலவாகும் பொருள்கள் எந்தவகையில் செலவாகின்றன? அந்தப் பொருள்களால் அந்த மக்கள் நன்மையடைகின்றார்களா? இல்லையா? அல்லது நம்மைப் போலவே அவர்க

னும், ஒன்றுக்கும் உதவாத வீண் வழிகளில் பாழாகச் செலவு செய்கிறார்களா? என்ற செய்திகளையும் கொஞ்சம் கேட்டுப் பாருங்கள்.

நாமறிந்த வரையிலும், மற்ற நாட்டினரும், மற்ற மதத்தினரும், மதத்தின் பெயரால் செல்வாகும் பொருள்களை ஏழை மக்களின் கல்விக்காகவும், அவர்களின் உடல் நலத்திற்காகவும், பொது மக்களுக்கு மருத்துவ உதவியளிக்கும் வகைக்காகவும் செலவு செய்வதாகவே அறிகின்றோம், ஏன் நாது கோயிலின் செல்வங்களை இந்த வகையில் செலவழிக்கக்கூடாது? இந்த வழியில் செலவு செய்தால் நாது "சாமிகள்" சினங்கொள்ளுமா? அல்லது குடி யோடிப் போகுமா? அப்படிப் போனால்தான் போகட்டுமே! அதனால் யாருக்கென்ன தீமை விளைந்துவிடப் போகின்றது.

இனி மடங்களை எடுத்துக்கொள்ளுங்கள். அவைகளின் செல்வத்தைக் கணக்கிட்டுப்பாருங்கள்! பெண்டு பிள்ளையற்ற துறவிகள் கோலம் புனைந்த ஒருவருக்கு என் கோடிக்கணக் கானபொருள்? அந்தப்பொருளைக்கொண்டு அந்தத் துறவிக் கோலம் பூண்டவர்கள் மக்களுக்கு எதாவது கடுகளவாவது நலம்புரிகிறார்களா? நலம்புரிய வேண்டும் என்ற கருத்தாவது உண்டா? என்று எண்ணிப்பாருங்கள்.

அந்த மேடைக்காரர்கள், செய்யும் அடாச்செயல்களுக்கு அளவுண்டோ? அவர்கள் தாது வருவாய்களை குடிக்கும் கூத்திக்கும் செலவிடுவதைத்தவிர வேறு என்ன செய்கிறார் கள்? துறவிகளாக இருக்கின்ற இவர்களுக்கு, அரண்மனை யைப்போன்ற பெரிய பெரிய மடங்களேன்? இலட்சக்கணக் கான பெறுமானமுள்ள வயிரமோதிரங்களேன்? நெய், வாய், கண், மூக்கு, செவி யென்னும் ஐம்புலன்களையும் அடக்கியாள வேண்டிய இவர்களுக்கு, பஞ்சணை மெத்தை களும், தினம் தலையணைகளும், தங்கப்பற்ப ங்களும், தேனில் ஊறவைத்த மாம்பழத்தோடு பலா, வாழை ஆகிய முக்கனிகளும் என்? இந்திரியத்தை அதிகப் படுத்தி காம இச்சையைப் பெருக்கக் கூடிய வாதாம் பருப்பு, குங்குமப்பூ முதலியவைகள் கலந்த மரக்காலைப் படியாகக் காய்ச்சிய பசும் பாலேன் இவைகளெல்லாம் துறவிகளுக்கு வேண்டற் பாலன வென்று எந்த நூல்களிலேனும்கூ றப்படுகின் றனவா? இவ்லையே. பணத்திமிரினால் அல்லவோ துறவிவேட ம்பூண்டவர்கள் இவ்வாறு இன்பம் அனுபவித்துக்கொண்டு

ஆண்டுதோறும் இலட்சக்கணக்கான பொருளை வீணாக்கு கின்றனர்? இந்த உண்மை நாத்து நாட்டினர்க் கெல்லாம் தெரி யாதா? தெரிந்தும் என் சும்மா இருக்கவேண்டும்; இவர்களைக் கண்டித்து, இவர்கள் செல்வத்தைப் பறிமுதல் செய்து நாட்டின் நன்மைக்குப் பயன் படுத்த ஏன் கிளர்ச்சி செய்யக்கூடாது?

இன்று, அறிவிலர்ச் சீர்திருத்தக்காரர்களாக இருக்கின்ற சுயநலியாளர்கள் சொல்வதென்ன? மேற்கூறிய வாறு பயனில்லாமல் வீணாகப்போகின்ற கோயில்களின் செல்வங்களையும், மடங்களின் செல்வங்களையும் பறிமுதல் செய்தோ அல்லது வசப்படுத்தியோ மக்களுக்கு—தேசத் திற்குப் பயன் படுத்துங்கள்! என்றுதானே சொல்லுகிறார் கள்? இதைக் கேட்டவுடன், கோயில்களின் செல்வங்கள் மக்க ளின் நன்மைக்குச் செலவானால் மதம் போய்விடும், கடவுள் போய்விடும், புராணங்கள் போய்விடும்; மடங்களை ஒழித்து விட்டால் மதங்களின் ஞாபகச் சின்னங்கள் அழிந்துவிடும், மதங்களைப்பற்றி உபதேசம் செய்வோர் போய்விடுவார்கள், மதவிடங்களாக விளங்குவன மடங்களே யாகும்; ஆகையால் மடங்களின் சொத்துக்களில் கைவைக்கக் கூடாது, அவைக ளை அழிக்கக்கூடாது; இவ்வாறெல்லாம் செய்தால் "நாஸ்தி கம்" பரவிடும், என்று சொல்லி விடுகிறார்கள்.

இதற்குச் சுயநலியாக்காரர்களாகிய நாங்கள் கூறும் பதில், பொது மக்களின் பொருள் வீணாவதை விட—பொது மக்களுக்கு எவ்வகையிலும் பயன்படாத கோயில்களும் மடங் களும் இருப்பதை விட—அவைகள் இருந்துகொண்டு ஏழை மக்களை மேலும் மேலும் அறியாமையிலும், வறுமையிலும் அழுத்திக் கொண்டிருப்பதை விட— அவைகள் அழிந்து போ வதனால்— மறைந்து போவதனால் உலகம் முழுகிப்போய் விடப் போவதில்லை. அவைகள் ஏழை மக்களுக்குப் பயன் படுவதன் மூலம், மதம் அழிவதாயிருந்தால் அழியட்டும்; தும் பம் விட்டது, கடவுள் அழிவதாயிருந்தால் அழியட்டும்; அழி ந்து போகும் கடவுளை எத்தனை நாளைக்குக் கட்டி வைத் துக்கொண்டு காப்பாற்ற முடியும்? புராணங்கள் அடியோடு மாண்டு போக வேண்டியது தான்; ஆகையால் அவைகள் அடியோடு மாண்டு போகட்டும் என்றுதான் கூறுகிறார்கள். இதில் என்ன குற்றமிருக்கிறது? ஆகையால் வீண் அபிமான த்தையும், மூடநம்பிக்கைகளையும் விட்டுவிட்டு, ஏழைமக்களைச் சீர்திருத்துவது எப்படி? அதற்குப் பொருள் எங்கே இருக் கிறது அப்பொருளை எவ்வழியிற் பெறுவது என்பதை மட்டி

கடவுள் செய்யும்வேலை என்ன?

(ம. சிங்காரவேலு பி. ஏ. பி. எல். எழுதியது.)

நமக்குத் தெரிந்தவரையில் பிரபஞ்சத்தில் கடவுளுக்கு இடமிருப்பதாக ஏற்படவில்லை. கடவுளின் லட்சணங்கள் நமக்கு விளங்குகின்றதா என்பதை விசாரித்தோம். அதுவும் நமக்குத் திருப்திகரமாக எதுவும் விளங்கவில்லை. பிறகு பக்தர்களும், சமயவாதிகளும்; தத்துவ நூல் ஆசிரியர்களும் தங்கள் குழந்தைப் பருவத்தில் கேட்டுவந்த சொல்லாகிய "கடவுளை" இன்னதென்று பொருள் தெரியாமலே நம்பி வருகின்றனர்.

கடவுள், அல்லது கடவுளர் வேலை என்ன? புராணங்களில் கடவுள் சிவனாகவோ, விஷ்ணுவாகவோ அவதரித்துச் சிற்சில கீர்த்தியங்களைச் செய்ததாகச் சொல்லப்படுகிறது. இதை அறிஞர் உலகம் நம்புவதற்கு இடமில்லை. சிவன், பிரமன், விஷ்ணு செய்ததாகச் சொல்லுங் காரியங்கள் தற்கால மனிதருக்கு அருவருப்பைத் தரத்தக்கவை என்றே மதிக்க வேண்டும். சில மாதங்களில் கடவுளுடைய அருள் பெற்று சில மனிதர்கள் அபூர்வச் செய்கைகள் செய்ததாகச் சொல்லுவதும் உண்டு. கிறிஸ்தவ ஆகமத்திலும், மகம்மதிய ஆகமத்திலும், கிறிஸ்துமும், மகம்மதும் கடவுளருள் பெற்றவர்களென்று சொல்லப்படுகின்றது. ஆனால் மற்ற மனிதர்கள்

ளும் எண்ணிப் பார்ப்பீர்களாயின் மேலே நாம் கூறியவற்றின் உண்மை விளங்கும். இதை விட்டு, வெள்ளைக்காரன் வந்ததன்னால் நம் நாடு கெட்டுப் போயிற்று; ஏழைமக்கள் துன்பப்படுகிறார்கள்; ஆகையால் வெள்ளைக்காரனை விரட்டவேண்டும்; என்று பேசுவதில் பலனில்லை என்றே கூறுகின்றோம். முதலில் நம்மைத் திருத்திக்கொண்டு பிறகு வெள்ளையருடன் சண்டை செய்வோம். அதற்கு நாங்களும் முன்னிற்போம்.

செய்துவரும் வேலைகளை விட இவர்கள் செய்ததாகச் சொல்லப்படும் காரியங்கள் விசேஷமாகத் தோன்றவில்லை. அந்தக் காலங்களில் தோன்றிய இயேசுவும், மகம்மதுவும், சிவன், விஷ்ணு, பிரமனும், துக்கம் நிறைந்த நமது காலத்தில் தோன்றலாகாதா? அந்தக் காலத்தில் இருந்த அவசரம் இந்தக் காலத்தில் இல்லையா? புண்ணிய காலத்தில் தோன்றிய கடவுளரும், தீர்க்கதரிசிகளும், பாபம் நிறைந்துள்ள நமது உலகில் ஏன் தோன்றலாகாது? இதற்கு விடையாதெனில், அக் காலங்களில் கடவுளர் உலகில் அவதரித்ததாகச் சொல்லும் கதைகளும், அவர்கள் செய்ததாகச் சொல்லும் கித்தியங்களும், பொய் என்பதற்குச் சந்தேகமில்லை. மூட நம்பிக்கை காலங்களில் தான் கடவுளர் திருவிளையாடல்கள் யாவும் எழுதப்படுகின்றன. விசாரணை மேலிட்ட காலங்களில், எந்தக் "கந்தபுராணங்களும், வெளிவர அச்சப்படும். பாமர ஜனங்கள் கூட பழைய புராணக்கதைகளை நம்பினாலும், நமது காலங்களில் புதிய புராணங்கள் எழுதப்படுமேயாகில், அவர்கள் நகைப்புக்கு இடமுண்டாகும். இது புராணிகர்களுக்கு நன்றாகத்தெரியும். இதுகாரணமாகவே புதிய "கந்த புராணங்கள்" எழுத அச்சப்படுகின்றார்கள். திருவிளையாடல் முதலிய புராணங்கள் யாவும், பார்ஸி கதைகளைப்போன்றனவும், அராபிக் கதைகளைப்போன்றனவும், பஞ்ச தந்திரக் கதைகளைப்போன்றனவுமான ஐதிந்தியங்கள்; அதாவது இலக்கியங்கள் என அறியவேண்டும். இவைகள் கூறும் விஷயங்கள் உண்மை என யாருங்கருதார். ஆனால் இவை கூறுங்கூற்றினை நமது காட்டில்தான் மத விஷயமாக எடுத்துக்கொள்ளப்படுகின்றன. இது மிகவும் வருந்தத்தக்கதே. பாமர ஜனங்கள் தங்கள் பகுத்தறிவை உபயோகிக்கும் பட்சத்தில், புராணங்களின் ஆபாசங்கள் தெள்ளென விளங்கும். இதனை எடுத்துக்காட்டி, பலகோடி மனிதரை மூட பக்தியினின்று மீட்க வேண்டிய கடமை அறிஞருடையதே. இதனை எடுத்துரைப்பாரை நாஸ்திகர்களென்றும், கடவுள் இல்லாப் பாவிகளென்றும் கூறுவதில் பிரயோஜனமில்லை. "சொல்லுவதில் நியாயமுளதா" என விசாரித்தல் வேண்டும். இதுதான் உத்தமருக்கழகு. புராணங்கள் கூறும் கடவுளுடைய திருவிளையாடல்கள் யாவும் கழைக்கூத்தைப் போன்றவர்களென்றால், கடவுளுக்கு என்னதான் வேலை? சிருஷ்டி என்பார்கள் பக்தர்கள். அவர்களில் சைவர்கள் சொல்வதாவது:—ஆன்மா அனாதியாக கர்மத்தில் தோய்ந்திருந்தைத சிவன் ஆன்மாவுக்குத் தனு, கரண, புவன்,

போகத்தைத் தனது கருணையால் அருளி, ஆன்மா பாசத்திலிருந்து விடுபட பக்தி மார்க்கத்தை உணர்த்தியதாகச் சொல்லுகின்றார்கள். இது முழுமையும் கற்பிதமென்று எண்ணவேண்டி வருகிறது. ஆன்மா என்பதே கற்பிதம்; இதனைக் கற்பித்துக்கொண்டு அனாதியாகப் பாசத்தில் ஆழ்ந்து கிடந்ததை எடுத்துத் தூக்கிவிட, தேகம், உலகம் முதலியவற்றைச் சிருஷ்டி செய்தாராம். கடவுளுடன் அனாதியாக இருந்த ஒன்றை மீட்டார் என்பதும் முரணே. எப்படியெனில், அனாதி என்றால் காலாதீதமாகும். காலத்திற்கு மீறியதை எப்படி மீட்பதாகச் சொல்லுவது?

இது நிற்க, சர்வசக்தியுள்ள கடவுள் ஆன்மாவோடு அனாதியாகவே இருந்ததாகச் சொல்லுகின்றார்கள். இரண்டும் அனாதி என்றால், ஒன்று மற்றொன்றை சிருஷ்டிப்பது எப்படி? தனு, கரண, புவன போகத்தைக் கடவுள் சீவனுக்கு அளித்தாரென்றால், எவ்விதம் அளித்தார்? கை, கால் முகம், தலை முதலிய தேக உறுப்புக்கள் எங்கிருந்தோ ஓடி வந்தனவா? அல்லது பிள்ளையாரைப் பிடித்து வைப்பது போல் ஈசன் நம்மைப் பிடித்து வைத்தாரா? நம்முடைய அனுபவமெல்லாம் சீவனெனப்படுவோர் யாவரும், சிறு வித்திலிருந்து படிப்படியாக உருவங்களைப் பெறும் காட்சியே. ஆதலின், கடவுள் முதலில் வித்தைப் படைத்தாரா? அல்லது சீவர் உருவங்களைப் படைத்தாரா? சைவர் சொல்லும் அபாசம் ஒரு பக்கம் இருக்க, வேதாந்திகள் என்ன சொல்லுகிறார்கள் என்று பார்ப்போம். சத்தம், அதாவது சொல்லிலிருந்து சோதி வந்ததாம்; சோதியிலிருந்து ஆகாயம் வந்ததாம். அதிலிருந்து தீ, தண்ணீர், மண் முதலிய தத்துவங்கள் உண்டாயினவாம்! வேதாந்திகளுக்கு, மனிதனும், மற்றுமுள்ள சீவர்களும் சிருஷ்டிக்கப்பட்டதாகச் சைவர் சொல்லுவது உடன்பாடில்லை. வேதாந்திகள் பிரமத்திலிருந்து உலகமும், உயிரும் பரிணமித்தன வென்பார். பரிணமித்தல் என்றால் ஒன்றிலிருந்து ஒன்று இயற்கையாகவே மாறுதல். ஆதலின், இயற்கையாகவே மாறும் பொருள்களுக்குக் கடவுள் உதவி ஏன் வேண்டும்? இத்தியாதி சிருஷ்டிக் கதைகளிலிருந்து கடவுளுடைய பக்தர்களுக்கே கடவுள் இன்னவேலை செய்கின்றார் என்று திட்டமாகச் சொல்ல முடியவில்லை என்றே ஏற்படுகின்றது. இவ்விதமான சிருஷ்டிக் கதைகளுக்குக் கணக்கு வழக்கில்லை. ஒரு மதஸ்தர் சொல்லும் கதைக்கும் மற்றொரு மதஸ்தர் சொல்லும் கதைக்கும் பொருத்தமோ, சம்

பந்தமோ கிடையாது. ஒரு மதஸ்தர் முட்டையிலிருந்து வந்தது உலகமும், உயிரும் என்பார்; வேறொரு மதஸ்தர் பிரமன் தலையிலிருந்தும், முகத்திலிருந்தும், வயிற்றிலிருந்தும், கால்களிலிருந்தும், நான்கு வருணத்தார்களாகிய பிராம்மண, க்ஷத்ரிய, வைசிய, "சூத்திரர்கள்" பிறந்ததாகச் சொல்கின்றார்கள். "எதா பக்தாததாதேவா", அதாவது பக்தன் எப்படியோ அப்படியே கடவுளும் என்ற வாக்கியப்படி, அந்தந்த பக்தனுக்குத் தோன்றியவாறு கடவுளுடைய வேலையைக் கற்பிக்கிறார்களே யொழிய கண்டதாக யாரும் சொல்லவில்லை. கடவுளும், கடவுள் செய்ததாகச் சொல்லும் கிர்த்தியங்களும், காவிய கற்பனைகளென்று கட்ட (Poetic Creation) சில சிருஷ்டிக் கதைகளை இங்கு உதாரணமாகக் காட்டுவாம்.

சிகப்பு இந்தியர் (Red Indians) சொல்லும் கதை வினோதமானதாக இருக்கும். பூமி ஒரு காலத்தில் மூடு பனியால் மூடப்பட்டிருந்தது. பெரிய ஆவி, அதாவதுகடவுள் தன்னுடைய அம்புவில்லால் அவைகளைப் பிரித்தார். களிமண்ணை எடுத்து மனித உருவமாக்கி அனலில் வேகவைத்தார்; சுடுகை போதாமையால் ஒரு மண் மனிதன் வெளுப்பாய் வந்தான். அதிக சூட்டினால் ஒரு மண் மனிதன் கருப்பாய் வந்தான். அனலும், குளிர்ச்சியும் சேர்ந்து மிதத்தில் வேகவைத்த மண்மனிதன் சிகப்பாய் வந்தானாம்! அவன் தான் மனிதருக்குள் உத்தம புருஷனாம்! அமெரிக்கா தேசத்து இந்தியர் சிவப்பாய் இருப்பார்கள் என்பதை இக்கதையின் சந்தர்ப்பத்தில் கவனிக்கத் தக்கது. தென் அமெரிக்கர்கள் தங்கள் கடவுளாகிய ஒரு நட்சத்திரக் கணத்திலிருந்து தாங்கள் வந்ததாகவும், இந்த தாராகணம் மறைவுள்ள காலத்தில் தங்கள் பிதாவாகிய கடவுள் நோயால் வேறுபடாமல் இருப்பதாகவும் சொல்லுகின்றார்கள்.

கால் முக்ஸ் (Calmucks) என்ற கூட்டத்தாரின் ஆதி மனிதன் பிரகாசிக்கும் முகத்தையுடையவனாய் இறக்கைகளுடன் பறந்து கொண்டிருந்தானாம்! ஆனால் கடவுள் கட்டளைக்கு மாறாக நடந்தபடியால் இறக்கை கழன்று உலகில் நடக்க ஆரம்பித்தானாம்!

செமுநோய் (Semunoi) இந்தியர் வேடிக்கையான கதை ஒன்றைச் சொல்லுகிறார்கள். கடவுள் உலகத்தைப் படைத்து

மூன்று அழகிய மனிதரைச்செய்து அவர்களை ஒரு குளத்தில் குளிக்கச் சொன்னாராம். சுத்தமான தண்ணீரில் குளித்தவன் வெளுப்பாகவும், அழுக்குத்தண்ணீரில் குளித்தவன் கருப்பாகவும், அழுக்கும் சுத்தமும் இல்லாத தண்ணீரில் குளித்தவன் சிவப்பாகவும் ஆனார்களாம். அவர்கள் மூன்று பெட்டிகளை வைத்துத் திறக்கச் சொல்லவும் முதலில் திறந்தவனுக்கு அம்பும் வில்லும், இரண்டாவது திறந்தவனுக்கு உளியும் சம்மட்டியும், மூன்றாவது திறந்தவனுக்குக் காகிதமும் பேனாவும் கிடைத்தனவாம். அது முதல் அந்தந்தத் தொழிலாளிகள் உற்பத்தியானார்களாம்!

சீனர்கள் சொல்லும் கதை வேடிக்கையாக இருக்கும். ஒரு பெரிய முட்டையிலிருந்து தங்கள் கடவுள் உற்பத்தியானார். அவர் பெயர் பூன் கூவாங். முட்டையின் மேல் பாகம் வானமாகவும், அடிப்பாகம் பூமியாகவும் ஆயிற்றாம். கடவுள் தனது வலது கையால் சூரியனையும், இடது கையால் சந்திரனையும் நட்சத்திரங்களையும் சிருஷ்டி செய்தாராம். அதன் பிறகு ஐம்பூதங்களையும் (அப்பு, பிரிதிவு, தேயு, வாயு, ஆகாயம்) படைத்து இரண்டு மேகங்களை எழுப்பி, பொன்னிலிருந்து எழுந்த மேகத்தை ஆணுருவமாக்கியும், கட்டையிலிருந்து எழுந்த மேகத்தைப் பெண்ணுருவாக்கியும், இவ்விரண்டு உருவங்களின் சையோகத்தால் ஏற்பட்டன ஆணும் பெண்ணுமாம்! பிறகு இவ்விருவரிலிருந்து மனித சந்ததி உற்பத்தியாயிற்றாம். இதைப்போன்ற விநோத வேடிக்கை சிருஷ்டிக்கதை ஒன்றைக் கிருஸ்துவப் பாதிரிமார் சொல்லுகின்றார்கள். களிமண்ணைக் கொண்டு மனிதனையும், அவன் பக்க எலும்பைக்கொண்டு பெண்ணையும் செய்து, அவர்கள் மூக்கில் தனது காற்றை ஊதி உயிர்ப்பித்தார் எனவும் சொல்லுகின்றார்கள். இதுவோர் ஜாலவித்தையாக எண்ணவேண்டி வருகிறதே யொழிய, பராபர வஸ்துவின் காரியமென்று எண்ண முடியவில்லை.

கால்டியன் (Chaldean) அஸ்ஸீரியன் (Assyrian) கூட்டத்தார், ஆதி காகரீகத்தை அடைந்தவர்களில் இருவர். இவர்கள் சுமார் 50,000 வருஷங்களுக்கு முந்தி வாழ்ந்தவர்கள். இவர்களின் கடவுள், பற்பல ஆபாசத் தொழில்களைச் செய்து வந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இவைகளை இவ்விடத்தில் வரைவது அனாவசியம். இந்தக் கதைகள் யாவும், சைவர்கள் சொல்லும் கதைகளாகிய, தங்கள் சிவ

னார், சூரியனை உதைத்தார், சந்திரனைப் பல்லைப்பிடுங்கி னார் என்பவைகளை யொக்கும்.

சகல மதஸ்தர்களும், கடவுள் சிருஷ்டி செய்யும் வேலையைத் தவிர, மற்றவேலை எதுவும் செய்வதில்லை என்று கருதினார்கள் போலும். ஏனெனில் வேதங்களும், புராணங்களும், சிருஷ்டியைக்குறித்தே முக்கியமாகப் பேசு கின்றன. விவிலிய நூலிலும், நமது திருவிளையாடல் புரா ணத்திலும், சிருஷ்டி செய்த பிறகும் சில ஆண்டுகளாக, தங் கள் கடவுள், மனிதருடன் கூடி விளையாடி வந்ததாகத் தெரி கிறது. இதனை எழுதியுள்ள புஸ்தக ஆசிரியர்கள் தங்கள் கடவுளை மனித உருவத்தைப் பெறச்செய்தாகிலும், அல்லது அசரீரிவாக்குமுதலியமறைந்த ஆதாரங்களாலும், இவ்வுலகில், தங்கள் கடவுள், வேலை செய்து வந்ததாகச் சொல்லுகின் றார்கள். கடவுள், பகுத்தறிவு இல்லாதாரிடம் அக்காலங் களில் காட்டிய மகத்துவங்களைத் தற்கால அறிஞர் கள் முன் காட்டி அவர்களை, தான் இருப்பது உண்மை என நம்பச் செய்யலாகாதா? இந்த விஷயமா கச் செய்துவரும் ஆராய்ச்சிகளில், கடவுள் ஒருவ ரோ, பலரோ, இருப்பார்களேயானால் தாம் இருக்கும் விஷயத்தை மாத்திரம், தற்கால அறிஞர்கள் முன்காட்டி யிருப்பார்கள். மதஸ்தர்கள் கூறும் கடவுளர் இல்லாமையால் தான் அவர்களுடைய வேலையை இன்னதென்று சொல்ல முடியவில்லை என்று யூகிக்கவேண்டி வருகின்றது. இதன் சம்பந்தமாக இன்னொரு கேள்வியுமுண்டு. சிருஷ்டி ஒன் றைத்தானோ செய்தார்? சிருஷ்டி செய்வித்து அதன் பிறகு மனிதர்களுக்கு உதவியாகவோ அல்லது அவர்கள் அறிந்து கொள்ளும் பொருட்டு என்னவேலை செய்து வருகிறார்? அவரை இல்லை என்ற நாஸ்திகர்களை ஆஸ்திகர்களாக்க, என் கடவுள் அவர்கள்முன் பிரசன்னமாகலாகாது? இருந்தா லன்றோ பிரசன்னமாவார்! இத்தியாதி கேள்விகளுக்குத் தக்க விடை யாரும் கொடுத்தாரில்லை; விடை கொடாமை யால், மதஸ்தர்கள் கூறும் கடவுளும், அவருடைய திருவிளை யாடல்களும், வெறும் கற்பனைகளெனக் கருத என்ன தடை?

மனிதர், தனிவாழ்க்கையிலாகிலும் பிரத்தியட்சமாகக் காட்டாவிட்டாலும், அனுமானிக்கவாவது, கடவுள் எதை யாவது செய்து வருகின்றாரா என்று பார்ப்போம்.

நாம் பிறந்தது முதல் சாகும் வரை, நமது பெற்றார், உற்றார், உடன் பிறந்தார் மற்றுமுள்ள ஜனசமூக மக்களை விட, கடவுளாவது, தெய்வங்களாவது நமக்கு உதவி இருந்த தாகத் தெரியவில்லை. காலைமுதல் இரவு வரை, இரவு முதல் காலைவரை நமக்குத் துணையாய் நிற்கின்றவர்கள் நம்மைப் போன்றவர்களைத்தவிர மற்றபடி யாருமிலர். நமது முயற்சியால் எதுவும் திருவினையாகின்றதே யொழிய தெய்வத்தால் அல்ல.

நம்முடைய தேக அவயவங்களும், தாய் தகப்பன் மூலமாக வந்த சக்தியால் கலனிக்கின்றன. வாய் பேசுவதும், கண் பார்ப்பதும், காது கேட்பதும், மூக்கு நுகர்வதும், நாக்கு ருசிப்பதும், தொண்டை விழுங்குவதும், தீனிப்பை ஜீரணிப்பதும், மற்றும் பல தேக உறுப்புகள் வேலைகள் செய்து வருவதும், தாய் தந்தையர் மூலமாக வந்த சக்தி (Energy)யால் அன்றி, வேறோர் கடவுளால் அல்ல. இது தான் பிரத்தியட்சக் காட்சி. இதை யாரும் மறுக்க முடியாது.

நோய் வந்தாலும், அந்நோய்களுக்குக் காரணம், தேகத்திலுள்ள கிருமிகளோ அல்லது, வெளியில் இருக்கும் கிருமிகளோதான் காரணமே அல்லாமல் நமது மெய்,வாய், கண் முதலிய அவயவங்களுக்குப் புலப்படாத கடவுள் காரணம் அல்ல. என்வீட்டில் கிறிஸ்தவ மார்க்கத்தைக் கற்பிக்கும் இரண்டு படங்கள் உள. அதில் இரண்டு குழந்தைகள் தண்ணீரில் மூழ்கிப்போகும் சமயத்தில், இரண்டு கந்தர்வாள் அதனைத்தடுத்துக் காப்பாற்றும் காட்சியைக் குறிப்பிட்டிருக்கிறது. ஆனால் ஒவ்வொரு நாளும் அநேக குழந்தைகள் கிணற்றிலும், குளத்திலும், வெள்ளத்திலும் மூழ்கிச் சாகின்றதை, கந்தர்வ ரூபங்கொண்ட கடவுளர், காப்பாற்றாத காரணம் என்னோ? குற்றம் இன்னதென்றும் தெரியாத அச்சிறு குழந்தைகளைக் காருண்யக் கடவுளர் கைவிட்டதென்னை? தனக்கு வேண்டியவர்கள் ஒருவர் அபாயத்தினின்று மீட்கப்பட்டால் அது கடவுளருளானால், அபாயத்தினின்று மீட்கப்படாத ஆயிரக்கணக்கானவர்களுக்குக் கடவுள் அருள் எங்கு போயிற்று? ஒரு மோட்டார் வண்டி விரைவாக ஓடும் அபாயத்தினின்று தப்பித்த

ஒருவன், கடவுளருளால் தப்பித்துக் கொண்டேன் என்கின்றான். ஆனால் வருட மொன்றுக்கு 6000 பேர் மோட்டார்வண்டி ஆபத்தில் அகப்பட்டு மாளும் நிகழ்ச்சியை அந்தக் கடவுள் ஏன் தடுக்கவில்லை? ஒரு அபாய சம்பவத்தில் பலர் மாண்டது அபாயத்தாலாம்! ஆனால், ஒருவன் தப்பித்துக் கொண்டது கடவுளாலாம்!! இது என்ன யுக்தியோ! அல்லது குயுக்தியோ! அதனை அறிஞர்களே அறிதல் வேண்டும். தான் கோரிய விஷயங்கள் ஒன்று கூடிவந்தால் அது தெய்வத்தால் என்று எண்ணுகிறார்கள். ஆனால், கோரிய 99 விஷயங்கள் கைகூடாமைக்கு யார் காரணமோ அதனைக் கவனிப்பதில்லை. கப்பல் முழுகும்போது அதிலிருந்த சில கொலையாளிகள் தப்பித்துக் கொண்டால், அவர்களையும் தெய்வம்தான் காப்பாற்றியதோ! பக்தர்கள் நியாயப்படி, அதுவும் கடவுள் அருளாய் இருந்தாலும் இருக்கலாம்! எப்படியெனில், திருடப்போன எலிக்கு மோட்சம் கொடுத்த ஈசன், கொலையாளிகளை ஏன் தப்பித்து வைத்திருக்கக் கூடாது? கடவுள் என்ன வேலை செய்கின்றார் என்ற கேள்விக்குப் பக்தர்கள் திருப்திகரமான விடை கொடுப்பதாகத் தெரியவில்லை. அவர் செய்ததாகச் சொல்லும் வேலைகள், பக்தர்களுக்குள்ளேயே உடன் பாடில்லாமலிருக்கின்றன. இதை யாரும் நம்புவதற்கு இடமில்லை. உலகத்தை சிருஷ்டித்த மாதிரியும், மனிதனை சிருஷ்டித்த மாதிரியும், ஒரு மதஸ்தன் சொல்லுவதுபோல மற்றோர் மதஸ்தன் சொல்லுவதில்லை. செய்ததாகச் சொல்லும் காரியங்கள் யாவும் விளையாட்டுக் கதையாக இருக்கக் கண்டோம். கழைக்கூத்தாடிகளும், கடவுள் செய்ததாகச் சொல்லும் செயல்களைவிட ஆச்சரியகரமான விளையாட்டுகளைச் செய்கின்றார்கள். ஒரு கண்ணிமைப் பொழுதில் மாங்காய் வித்திலிருந்து, செடியும், கிளைகளும், பூவும், காயும், பழமும் உண்டாக்கிக் காட்டுகின்றார்கள்! இதைவிட "ஒரு நாளில் இவ்வுலகைச் சிருஷ்டித்தார் கடவுள்" என்று சொல்வதால் கடவுளுக்கு என்ன சிறப்பு? இந்த விசாரணையில் கடவுளுக்கு எந்த வேலையும் இருப்பதாகவாவது, அல்லது அவர் செய்ததாகவாவது விளங்கவில்லை.

ஜாதி முறை.

சாதியைக்காப்பாற்றும் பல சாதி அபிமானிகளே!

"குடி அரசு" தலையங்கம் ஒன்றில் "ஆதியில் ஏற்பட்ட நான்கு சாதிகள்" 4000 சாதிகளாகப் பிரிந்ததற்குக் காரணம் ஒரு சாதியும், மற்றொரு சாதியும் மாறி மாறி கலந்ததால் ஏற்பட்டதென்று சொல்லப்பட்டதோடு அந்த சாதிகள்தான் எல்லாப் பஞ்சம சாதியுமாகும் என்று பார்ப்பன ஆதாரங்களில் குறித்துள்ள சாதி ஆதாரங்களை எடுத்துக்காட்டினோம். அப்படி இருந்தும் இன்னும் நம்மவரிலேயே ஒரு கூட்டத்தார் அதாவது தங்களை வேளாளர் என்று சொல்லிக் கொள்ளுபவர்களில் ஒரு சிலர் மெ சாதிக்கிரமத்தை அதாவது ஆதி சாதி என்பவைகளான, பிராமணர், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன், பஞ்சமன் என்கின்ற கிரமத்தை ஒப்புக்கொண்டும் தங்களை மாத்திரம் சற் சூத்திரர் என்று அழைத்துக்கொண்டும், மற்றொரு சிலர் அந்நாதிக்கிரமவார்த்தைகளை வடமொழிப் பெயர்களால் சொல்லாமல் தென்மொழிப்பெயரால் சொல்லிக்கொண்டு அதாவது அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என நான்காகப் பிரித்து அவை தமிழ் நாட்டில் ஆதியிலேயே அதாவது ஆரியர் வருவதற்கு முன்னாலேயே இருந்ததென்றும் அவற்றிலும் தாங்கள் காலம் சாதி என்றும் ஒரு கற்பனையைக் கற்பித்துக்கொண்டு அப்படிப்பட்டவர்களான தங்கள் கால்வருக்கும் தொண்டுசெய்ய—அடிமையாய் இருக்க வேறு பல சாதிகள் ஏற்பட்டு இருப்பதாகவும், அவர்கள்தான் "பன்னிரு பறை பதினெட்டு சாதிகள்" என்பது என்றும் ஒரு புதிய ஏற்பாட்டைச் சொல்லி ஒரு வழியில் திருப்தி அடைந்து வருகிறார்கள். (இந்த இருவர் கூற்றின் உண்மை எப்படி இருந்தாலும், வடமொழிப்படி பார்த்தாலும் சரி, தென் மொழிப்படி பார்த்தாலும் சரி, வேளாளர் 4-வது சாதி என்பதை ஒப்புக் கொள்ளுகின்றார்கள் என்பது மாத்திரம் இதிலிருந்து அறியக்கிடக்கின்றது.)

அந்தப்படி கூறப்படும் பள்ளு பறை பதினெண்குடி மக்கள் என்பவர்களைக் குறிக்கும் முறையில் "பணி செய்யும் பதினெண்வகைச் சாதியார்" என்னும் தலைப்பின் கீழ் குறிக்கப்பட்டிருப்பது என்னவென்றால் இலை வாணிகன், உப்பு வாணிகன், எண்ணெய் வாணிகன், ஓச்சன், கல் தச்சன், கன்னான், குயவன், கொல்லன், கோயிற்குடியன், தச்சன். தட்டான், நாவிதன், பள்ளி, பாணன், பூமாலைக்காரன், வண்ணான், வலையன், என்பதாகக் கொண்டு குறிக்கப்பட்டிருக்கின்றன. (இது அகராதியில் குறிக்கப்பட்டதாகும்)

ஆனால் இதே பதினெண் மக்களை அபிதானகோசம் என்னும் ஒரு ஆராய்ச்சி நூலில் காண்கின்ற விவரப்படி குறித்திருப்பதென்னவெனில் "எவலாள்களாக சிவிணகயர், (இவர்கள் ஆந்திர நாட்டிலிருந்து வந்தவர்களாம்.) குயவர், பாணர், மேளக்காரர், பரதவர், செம்படவர், வேடர், வலையர், திமிலர், கரையார், சான்றார், சாலியர், எண்ணெய் வாணிகர், அம்பட்டர், வண்ணார், பள்ளர், புலையர், சக்கிலியர், எனப் பதினெட்டு பெயர்கள் குறிக்கப்பட்டிருக்கின்றன. அப்படிக் குறித்திருப்பதிலும் தமிழ் நாட்டிலுள்ள தெலுங்கர்களை (ஆந்திரர்களை) குறிப்பிடுவதில் "கம்மவார் என்னும் கவரைகள் ஏவற்பரிசனங்களாகவும் உப்பமைப்பவர்களாகவும் அனுப்பப்பட்டவர்கள்" என்று குறிக்கப்பட்டிருக்கின்றது.

இவை ஒருபுறமிருக்க வேளாளர்களிலும் பல பிரிவுகளை காட்டி அதில் உயர்வு தாழ்வுகளை கற்பிக்கும் வரிசையில் குறிப்பிட்டிருப்பது என்னவென்றால் "சூத்திரருள்ளே வேளாளர் தலையாயினர், அவருள்ளே முதலிகள் தலையாயினார். இவர்களுக்கு அடுத்தபடி வேளான் செட்டிகள், இவர்கள் சோழபுரத்தார், சித்தக்காட்டார், பஞ்சுக்காரர் முதலிய பலதிறப்பட்டவர்கள். இதற்கடுத்த படியிலுள்ளோர் கார்காத்தார். அடுத்த வரிசையிலுள்ளோர் சோழிய வேளாளர், இவர்கள் சைவர்களாவார்கள். சமபந்தி போசனத்திற்கும் உரியவர்கள். இதற்கடுத்தபடியில் உள்ளவர்கள் சோழிய, துளுவ கொடிக்கால் முதலிய பல வகை வேளாளர்களாவார்கள். (இவர்கள் மாச்ச போசனம் செய்பவர்கள்) இவரிற் தாழ்ந்தோர் அகம்படியர், அவரிற்றாழ்ந்தோர் மறவர், அவரிற்றாழ்ந்தோர் கள்ளர், அவரிற்றாழ்ந்தோர் இடையர். இவர்கட்கடுத்தபடியிலுள்ளோர்

கவரைகள் கம்மவர்கள் என இந்தப்படியாக குறிப்பிடப் பட்டிருக்கின்றன.

இவற்றுள் எதிலும் பிராமணர்கள் விஷயத்தில் எவ்வி தமான பாகுபாடும் தாழ்வுக்கிரமமும் சந்தேகமோ, ஆக்ஷே பணையோ சொல்லுவதற்குச் சிறிதும் இடமில்லாமல் செய்து கொள்ளப்பட்டிருப்பதைக் கவனித்தால் ஜாதியின் சூழ்ச்சித் தத்துவம் நன்றாய் விளங்கும். மற்றபடி க்ஷத்திரியர்களி லும், வைசியர்களிலும் இருக்கும் சண்டைகளும் ஆக்ஷே பணைகளும் க்ஷத்திரியர், வைசியர் என்று சொல்லிக்கொள் வதில் எவ்வித உயர்வு தத்துவமும் இல்லாமல் ஒருவருக் கொருவர் தங்களில் வீண் வழக்காடிக் கொண்டு பொது ஜன களாலும் ஒப்புக்கொள்ளப்படாமல் ஒருவரை ஒருவர் இழி த்துரைத்து குறைவு படுத்தி வருவதும் அநேக இடங்களில் பிரத்தியக்ஷமாய் காண்கின்றோம். மற்றும் ஒவ்வொரு ஜாதி யாரும் தங்கள் தங்கள் ஜாதிகளைப்பற்றிய எல்லைவு மேன் மை ஆதாரங்கள் கற்பித்துக்கொண்டாலும், கண்டுபிடித்தா லும் எந்த விதத்திலும் பிராமணர்கள் என்று சொல்லிக் கொள்ளும் பார்ப்பனர்களுக்கு மற்றவர்கள் எல்லாம் கீழ்ப் பட்டவர்கள் தான் என்பதை நிலைநிறுத்துவதற்கு மாத்தி ரம் அவ்வாதாரங்கள் பயன்படுகின்றனவே தவிர மற்றபடி எந்தக் கருத்தைக் கொண்டு கஷ்டப்பட்டு இவ்வித ஆதாரங் கள் கற்பிக்கப்பட்டதோ, கண்டு பிடிக்கப்பட்டதோ அவற் றிற்குச் சிறிதும் பயன்படுவதில்லை என்பதையும் பிரத்தி யட்சத்தில் பார்க்கின்றோம்.

எனவே இந்த நிலையில் இன்று நமது நாட்டில் பார்ப் பான் ஒருவனைத் தவிர மற்றவர்கள் தாழ்ந்த ஜாதியார்கள் அதாவது பார்ப்பனனால் தொடவும், சமபந்தி போஜனம் பண்ணவும் மற்றும் சில பொது உரிமைகள் பெறவும் கூடாத ஜாதியார்கள் என்பதும், அவனுக்கு அடிமைபாகயிருக்க வும் ஒழுக்கத்தவறுதலால் அதாவது "விபசாரம்" "கீழ் மேல் ஜாதிக் கலப்பு" என்று சொல்லும்படியான "இழி தன்மை"யில் பிறந்தவர்கள் என்பதும், இன்றையத நம் ஜாதித் தத்துவமாயிருக்கின்றதை யாரும் மறுக்க முடியாதென்று உறுதி கூறுவோம்.

மற்றபடி இவற்றிற்கு எவ்வித தத்துவார்த்தம் சொல்லு வதானாலும் அதை மூடர்கள் முன்னால் மாத்திரம் சொல்

லிக்கொள்ளக் கூடுமே தவிர ஜாதிக்கும், ஜாதியைக் கற்பித்த மதத்திற்கும், இவ்விரண்டிற்கும் ஆதாரமான வேதம், சாஸ்திரம், தர்மம் என்று சொல்லப்பட்ட ஆதார நூல்களில் இருக்கும் உண்மைகளுக்கும் எவ்வித ஆக்ஷேபணையும் எவ்வித தத்துவார்த்தமும் சொல்லமுடியாது என்பதையும் யாதொரு பதிலும் சொல்லாமல் பேசாமல் இழிவை ஒப்புக் கொண்டு தான் தீரவேண்டியதாகும் என்பதையும் கண்டிப்பாய்ச் சொல்லுவோம்.

இவை ஒருபுறமிருக்க இந்த ஜாதிக்கிரமத்தில் பார்ப்பனர்களைத் தவிர மற்றவர்களுக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கும் யோக்கியதைகளையும், உரிமைகளையும் பார்ப்போமானால் கடுகளவு பகுத்தறிவோ, மானமோ இருக்கின்ற மனிதர்கள் ஒருக்காலமும் தங்கள் ஜாதிப்பேரை சொல்லிகொள்ள முடியாதபடியும், அதைக் கனவிலும் நினைக்க முடியாதபடியும் இருப்பதை நன்றாய் உணரலாம். அதாவது காலாவதி ஜாதியார்களாக சூத்திரர்கள் என்று சொல்லப்படும் வகுப்பாருக்கு பார்ப்பனர்கள் ஏற்படுத்தியிருக்கும் உரிமையானது எப்படியிருக்கின்றது என்று பார்த்தால் இப்போது "பாரம்பரியமாய் குற்றம் புரியும் வகுப்பார்" (அதாவது கிரிமினல்ட்ரைப்ஸ்) என்று சொல்லக்கூடியவர்களுக்கு சர்க்காரால் ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற நிர்ப்பந்தத்திற்கும், சட்டதிட்டங்களுக்கும் அவர்களை கடத்துகின்ற மாதிரிக்கும் சிறிதுகூட குறைவில்லாமல் கடத்துகின்ற மாதிரியாகவே ஏற்படுத்தி இருக்கின்றார்கள். உதாரணமாக இரண்டொன்றைச் சொல்லுவோம்.

அதுவும் தர்ம சாஸ்திரங்கள் என்று சொல்லப்பட்ட சட்டங்களில் உள்ளதையே சொல்லுவோம்.

"ஸ்நாதமஸ்வம், கஜமத்தம், ரிஷபம் காமமோஹிதம்.
சூத்ரமக்ஷசம்யுக்தம், தூரதப் பரிவர்ஜ்ஜயேல்."

அதாவது குளிப்பாட்டிய குதிரையையும்—மதம் கொண்ட யானையையும்—காம விகாரம் கொண்ட காளை மாட்டையும், எழுத்துத்தெரிந்த சூத்திரனையும் பக்கத்தில் சேர்க்கக்கூடாது என்பது கருத்தாகும்.

"ஜப, ஸ்தப, தீர்த்தயாத்திர, பிரவர்ஜ்ஜய, மந்த்ர
சாதனம்,
தேவதாராதனம் சசய்வஸ்திரீ சூத்ர பததானிஷள்".

அதாவது ஜபம், தபசு, தீர்த்தயாத்திரை, சந்நியாசம், கடவுள் தோத்திரம், ஆராதனை இந்தக்காரியங்கள் பெண்களும், சூத்திரர்களும் ஒருபோதும் செய்யக்கூடாது என்பது கருத்தாகும்.

"நபடேல் சமஸ்கிருதம் வாணீம்."

(சூத்திரன்) சம்ஸ்கிருதம் படிக்கக்கூடாது என்பது கருத்தாகும்.

"நைவ சாஸ்திரம்படே நைவ கருணையாத் வைதிகா
[கதரம்
கஸ்காயாது தயால் பூர்வம் தபோமந்திரஞ் சுவர்ஜ்ஜ
[யேல்"

(சூத்திரன்) சாஸ்திரம் படிக்கவோ, வேதத்தைக் கேட்கவோ ஒருக்காலும் கூடாது. அவன் சூர்ய உதயத்திற்கு முன் குளிக்கவும், மந்திரம் ஜபிக்கவும், தபசு செய்யவும் கண்டிப்பாய் கூடாது என்பது கருத்தாகும்.

"இதிஹாச புராணானி நபடேச்சோது மர்மஜ்ஞ"

இதிகாச புராணங்களும் கூட (சூத்திரர்கள்) படிக்கக் கூடாது. ஆனால் (பிராமணர்கள் படிக்க) காதால் கேட்கலாம்.

"சாதுர்வர்ணியம் மயாசிருஷ்டம் பரிசரியாத்மகம்
கர்மம் சூத்ரஸ்லியாபி பாவனாம்".

(கீதா ஸ்லோகம்)

நான்கு வர்ணங்களும் என்னால் சிருஷ்டிக்கப்பட்டவை. அவற்றுள் சூத்திரனுக்கு பிராம்மண சிசுருஷை தான் தர்மம் எனபது கருதது.

இதுபோல் ஆயிரக்கணக்காக எழுதிக்கொண்டே போகலாம். இவைகள் எல்லாம் தான் நமது ஜாதிமத ஆச்சார அனுஷ்டானங்களாக இருக்கப்படவேண்டியவை என்று வேதங்கள், தர்மசாஸ்திரங்கள், பகவான் வாக்குகள் என்று சொல்லப்படுபவைகளில் சொல்லப்பட்டவைகளாகும்

எந்தக் காரணத்தாலோ இந்துமத தர்மத்தை அனுஷ்டித்துத் தீரவேண்டியதல்லாத ஒரு ஆக்ஷி இந்த நாட்டுக்கு ஏற்பட்டதின் பலனால் நம்மில் சிலராவது இந்த தர்மங்கள் முழுவதும் வலியுறுத்தப்படாமல் இருக்கமுடிகின்றது. ஆனால் இந்த நிலையாலும் நாம் மறுபடி நமது ஜாதியையும், மதத்தையும் காப்பாற்றும் கவலைகொண்டு ஒவ்வொருவரும் தங்கள் தங்களுக்கு என்று மதத்தையும், ஜாதியையும் சொல்லி அவற்றை நிலை நிறுத்திக்கொண்டே போவோமானால் பின்னால் நமது நிலை என்ன ஆகும் என்பதை சற்று யோசித்துப் பார்க்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

எதோ "பொல்லாத விதிவசத்தினால்" இன்று ராமராஜ்யத்தைக்கோரும் தோழர் காந்தியாரும் வருணாச்சிரமத்தைக்கோரும் "தேசிய" தலைவர்களும் கேட்கும் சுயராஜ்யம் வந்துவிடுமேயானால் இன்று இம்மாதிரி ஜாதிகளைக் காப்பாற்றியவர்களின் கதி என்னவாகக்கூடும் என்பதையும் சற்று போசித்துப்பார்க்கும்படி வேண்டிக்கொள்ளுகிறோம்.

இந்துக்கள் என்பவர்களுக்குள் ஜாதிப்பிரிவு இருக்கும் வரை ஜாதி உயர்வுதாழ்வு வித்தியாசம் ஒருக்காலமும் போகவே போகாது என்பதைக் கண்டிப்பாய் ஞாபகத்தில்வைத்துக் கொள்ளும்படி எச்சரிக்கை செய்கிறோம்.

இன்றையதினம் தேசியவாதிகளாயிருக்கின்றவர்கள் இந்தியா சுதந்திரம் அல்லது பூரணசுயேச்சை அடையவேண்டுமென்கின்ற உண்மையான ஆசையுடையவர்களாயிருப்பார்களானால் அவர்கள் வெள்ளைக்கார ஆக்ஷியிருக்கும் போதே ஜாதி வித்தியாசங்கள் எல்லாம் ஒழியும்படியான ஏற்பாடுகள் செய்துகொள்ள வேண்டியது தான் அறிவுள்ள வேலையாகும். அதை விட்டுவிட்டு முதலில் "நீ போய்விடு நாங்கள் பார்த்துக்கொள்ளுகிறோம்." என்று சொன்னால் அது "தான் சாவதற்கு தானே மருந்து குடித்தது" போல் தான் ஆகுமேதவிர வேறொரு பயனும் தராது. எனெனில் இந்தியாவில் இந்துக்கள் என்பவர்களில்1000க்கு 999 பேருக்கு குறையாமல் ஜாதி வித்தியாசத்தை ஒழிக்க வேண்டும் என்கின்றஎண்ணமில்லாதவர்களாய்இருப்பதோடுஒவ்வொருவரும் "மேல் ஜாதி" ஆகவேண்டுமென்று ஆசைப்படுவதும் தனக்கு கீழ் பல ஜாதிகள் இருக்க வேண்டுமென்று ஆசைப்படுவது

ஒன்றாக்கொன்று பொருத்தம்.

(சித்திர புத்திரன்)

இராமன் பிறப்பும் சுப்ரமணியன் பிறப்பும் ஒன்றுபோல வே கற்பிக்கப்பட்டிருக்கின்றது. இரண்டு பேர்களும் பூமி பாரம் தீர்க்கவும் ராக்ஷதர்கள் அசுரர்கள் அக்கிரமங்களை அழிக்கவும் தோன்றினவர்கள். இராமன் பிறப்பதற்காகவும்

மான உணர்ச்சி உள்ளவர்களாகவே இருக்கின்றார்கள். இந்த நிலையில் இன்றையதினம் இருக்கும் பல சௌகரியங்களை ஒழித்து விட்டு வருணாச்சிரம கொள்கையும் ஜாதி ஆதிக்கத் திமிரும் உடையவர்களான மக்களிடம் ஆக்ஷியும், பிரதிநிதித் துவமும் வந்து விட்டால் பிறகு எந்த விதத்தில் ஜாதிக்கொடு மைகளும் அதனால் ஏற்படும் தொல்லைகளும் ஒழியக்கூடும் என்பதை யோசித்தால் அதன் கெடுதி விளங்காமல் போகாது.

இந்தியர்களுக்குள் ஜாதி வித்தியாசம் உயர்வு தாழ்வு கொடுமைகள் ஆகியவைகள் இல்லாதிருந்திருக்குமானால் இந்தியா ஒருநாளும் அன்னியர் ஆக்ஷிக்கோ, அடிமைத் தனத்திற்கோ அடிமையாகி இருக்கவோ முடியவே முடியாது. நமக்குள் இருக்கும் இழிவுகளில் நம்மால் கூடுமானதை யெல்லாம் நாம் ஒழித்து ஒற்றுமைப்பட்டு பின் அயலானை வெளியில் போகச்சொல்லலாம் என்று கருதியும் நடவாததின் பயனாய் ஏற்படும் அதாவது இன்றையதினம் உள்ள இழிவை யும், கொடுமையையும் அடிமைத்தனத்தையும் அடையாமல் ஏமாற்றித் தப்பித்துக்கொள்ள முடியாது என்பதை மாத்தி ரம் கல்லின் மேல் எழுதிவைப்போம்.

தேவர்கள் விஷ்ணுவை வேண்டிக் கொண்டார்கள். சுப்ரமணியன் பிறப்பதற்காகவும் தேவர்கள் சிவனை வேண்டிக்கொண்டார்கள்.

இராமன் ஒரு மனிதன் விந்திலிருந்து பிறந்தான். ஆனால், சுப்ரமணியன் சிவன் விந்திலிருந்து தோன்றினான். இராமன் ராக்ஷதர்களைக்கொன்றான்; சுப்ரமணியன் அசுரர்களைக் கொன்றான். இராமன் செய்த சண்டையில் ராக்ஷதர்களைக் கொல்லக் கொல்ல மூலபலம் தானாக உற்பத்தியாகிக் கொண்டே இருந்தது.

அதுபோலவே சுப்ரமணியன் அசுரர்களைக் கொல்லக் கொல்ல சும்மா தானாகவே அசுரர்கள் உற்பத்தியாகிக்கொண்டிருப்பதும் தலையை வெட்ட வெட்ட மறுபடியும் முளைத்துக்கொண்டிருப்பதுமாக இருந்தது. இன்னமும் பல விஷயங்களில் ஒற்றுமைகள் காணலாம். ஆகவே இரண்டும் ஒன்றுக்கொன்று போட்டிக்காக உண்டாக்கப்பட்ட கற்பனைக் கதைகள் என்பது விளங்கும். மற்றும் பெரிய புராண 63 நாயன்மார்கள் கதையும் பக்த லீலாமிர்த ஹரிபக்தர்கள் கதையும் அனேகமாக ஒன்றுபோலவே கற்பிக்கப்பட்டிருப்பதைக்காணலாம். பெரிய புராண நாயன்மார்களில் குயவர் வகுப்பு என்பதற்காக ஒரு நாயன்மாரை திருநீலகண்ட நாயனார் என்று உற்பத்தி செய்ததுபோலவே பக்த லீலாமிர்தத்திலும் குயவர் வகுப்புக்காக கோராகும்பர் என்பதாக ஒரு பக்தரை கற்பித்து இருக்கின்றார்கள். பெரிய புராணத்தில் பறையர் வகுப்பு என்பதற்காக நந்தனார் என்பதாக ஒரு நாயனாரை சிருஷ்டித்தது போலவே பக்த லீலாமிர்தத்திலும் பறையர் வகுப்புக்காக சொக்க மேளா என்கின்ற ஒரு பக்தரை சிருஷ்டித்து இருக்கின்றார்கள். இப்படியே மற்றும் பல நாயனார்களும், ஹரி பக்தர்களும் கற்பிக்கப்பட்டிருந்தாலும் அவர்கள் சம்பந்தமான கதைகளும் ஏறக்குறைய ஒன்றுபோலவே கற்பிக்கப்பட்டிருக்கின்றன.

உதாரணமாக, திரு நீலகண்ட நாயனார் தன் பெண் ஜாதியோடு கோபித்துக்கொண்டு ஒருவருக்கொருவர் திரேக சம்மந்தமில்லாமலிருந்ததை சரி செய்ய சிவபெருமான் சிவயோகியாக வந்து இருவரையும் சேர்த்து வைத்ததாக கதை உண்டாக்கப்பட்டிருக்கின்றது.

அதுபோலவே பக்த லீலாமிர்தத்தில் கோராகும்பாரும் தன் மனைவியுடன் கோபித்துக்கொண்டு ஒருவருக்கொருவர் தேக சம்பந்தமில்லாமல் இருந்ததைச் சேர்த்து வைப்பதற்காகவே விஷ்ணு பெருமான் தோன்றி இருவர்களையும் சேர்த்து வைத்ததாகவே கதை கற்பிக்கப்பட்டிருக்கின்றது.

அதுபோலவே பெரிய புராணத்தில் நந்தனாருடைய கதையிலும் நந்தனாரைக் கோவிலுக்குள் விடும்படி பரம சிவன் இரவில் வேதியர் கனவில் வந்து சொன்னதாகக் கற்கப்பட்டிருக்கின்றது.

பக்த லீலாமிர்தத்தில் சொக்கமேளர் (சொக்கமாலா என்றும் சொல்வதுண்டு) என்னும் பறையர் ஒருவரை விஷ்ணு இரவில் வந்து கோவிலுக்கு அழைத்துப்போனதாகவும் சொல்லப்பட்டிருக்கின்றது.

இப்படி அனேக கதைகள் சைவத்திற்கும், வைணவத்திற்கும் போட்டிபோட்டு கற்பிக்கப்பட்டிருக்கின்றன. இரண்டிலும் பார்ப்பனர்களுக்கும், அர்ச்சகர்களுக்கும் உயர்வுகள் கற்பிக்கப்பட்டிருப்பதிலும் ஒன்றுபோலவே கற்பிக்கப்பட்டிருப்பதையும் காணலாம். இரண்டிலும் ஜாதி வித்தியாசத்தை உறுதிப்படுத்தி பிறகு அந்தக் குறிப்பிட்ட நபர்கள் விஷயத்தில் மாத்திரம் மிக்க கடினமான நிபந்தனை மீது மன்னிக்கப்பட்டிருப்பதையும் பார்க்கலாம். ஆகவே இவைகள் சிவனும், விஷ்ணும் ஆகிய இரு கடவுள்களும் ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக்கொண்டு செய்தார்களா? அல்லது இரண்டு சமயத்தின் போராலும், ஜாதிகளை நிலை நிறுத்தவும், மதப்பிரசாரத்திற்கும், வயிற்றுப்பிழைப்புக்கும் வழிதேடும் ஆசாமிகளால் கற்பிக்கப்பட்டதோ என்பதை வாசகர்கள் தான் முடிவு செய்துகொள்ளவேண்டும்.

ஏனெனில் நாம் சொன்னால் அது மிகுந்த "தோஷமாக ஏற்பட்டு, பெரிய பாவத்திற்காளாக வேண்டியதாய்ப் போய் விடும்."

முக்கிய கவனிப்பு.

“குடி அரசு” (வாரப்பதிப்பு)

“பகுத்தறிவு” (மாதப்பதிப்பு)

அரசியல் புரட்டு,
மத இயல் புரட்டு,
பொருளியல் புரட்டு,
சமுதாய இயல் புரட்டு,
தேசிய இயல் புரட்டு

முதலாகிய பல புரட்டுகளையும், அவற்றைத் தங்கள் சுயநலங்களுக்குப் பயன்படுத்திக் கொண்டு மக்களை ஏமாற்றி வாழும் பல “தலைவர்கள்”, மதாச்சாரியார்கள், மடாதிபதிகள், சீர்திருத்தக்காரர்கள், தேசபக்தர்கள், அரசாங்கத்தார் என்பவர்களின் யோக்கியதைகளையும் பச்சையாய் வெளியாக்கி மக்களுக்கு தைரியமாய் உண்மையை எடுத்துக்கூறும் புரட்சிப் பத்திரிகைகள் தென்னாட்டில் ஏன்? இந்தியாவிலேயே இவற்றைத்தவிர வேறு கிடையாது என்று சொல்லலாம்.

குடி அரசுக்கு வருட சந்தா ரூ. 3-0-0
பகுத்தறிவுக்கு ,, ரூ. 1-0-0
இரண்டு பத்திரிகைக்கும் சேர்ந்து
வருட சந்தா ரூ 3—8—0

விலாசம்:—மானேஜர்,

குடி அரசு ஆபீஸ், ஈரோடு

பகுத்தறிவு வெளியீடுகள்.

—)≡(—

தோழர் ஈ. வெ. ரா. எழுதியவை.

பெண் ஏன் அடிமையானாள்? ...	...	ரூ.	0 5 0
பிரகிருதிவாதம் ...	...	,,	0 3 0

அறிஞர் சார்ல்ஸ் T கோர்ஹாம் எழுதியது.

முன்னேற்றத்திற்கு மதம் முட்டுக்கட்டை ...		,,	0 5 0

Hon பெர்ட்டிரண்ட் ரசல் எழுதியவை.

நான் ஏன் கிறிஸ்துவனல்ல? ...	...	,,	0 3 0
மதம் மக்களுக்குச் செய்த நன்மையென்ன? ...		,,	0 3 0

அறிஞர் இங்கர்சால் எழுதியவை.

மதம் என்றால் என்ன? ...	...	,,	0 3 0
கடவுள் ...	...	,,	0 5 0
நான் சமுதாயவாதியானதேன்? ...	...	,,	0 3 0
எல்டோடோ ...	...	,,	0 4 0
பேய்-பூதம்-பிசாசு ...	...	,,	0 3 0

அறிஞர் பிரடீச்சாரி M. A., L. T., எழுதியவை.

மதமும் விஞ்ஞானமும் ...	...	,,	0 3 0
பிரபஞ்ச உற்பத்தி ...	...	,,	0 3 0

அறிஞர் ஜோஸப் மெக்கேபி எழுதியது.

மதப்புரட்சி ...	...	,,	0 4 0

தோழர் M. சிங்காரவேலு B. A., B. L., எழுதியவை.

மெய்ஞ்ஞான முறையும் மூடநம்பிக்கையும்	1-ம் பாகம்	0	6 0
ஷ	2-ம் பாகம்	0	5 0

அறிஞர் ஜீன் மெஸ்லியர் எழுதியவை.

பகுத்தறிவு or கத்தோலிக்க குருவின் மரணசாசனம்		0	4 0
ஷ	2-ம் பாகம்	0	4 0

தோழர் அ. இராகவன் எழுதியது.

பெண்ணுரிமையும் மதமும் ...	...	,,	0 3 0

அறிஞர் சிவானந்த சரஸ்வதி எழுதியது.

ஞானசூரியன் (“நான்காம் பதிப்பு”) ...		,,	0 5 0
ஷ	காலிக்கோ பயிண்டு ...	,,	0 8 0
மரணத்திற்குப் பின் ஜீவனுண்டா? (ல. ப. நூ. பி.)			0 4 0

கிடைக்குமிடம்:—

குடி அரசு பதிப்பகம், ஈரோடு.

குடி அரசு பதிப்பக வெளியீடுகள்.

1.	இந்தியாவின் குறைபாடுகள் (160 பக்கம்)	0	8	0
2.	லெனினும், மதமும்	0	4	0
3.	பொதுவுடமைத் தத்துவங்கள்	0	3	0
4.	கடவுளும், பிரபஞ்சமும்	0	4	0
5.	உழைப்பாளிகளுக்குஎன் இவ்வுலகில்லை	0	1	0
6.	இராமாயண ஆராய்ச்சி பாலகாண்டம்	0	4	0
7.	,, அயோத்தியாகாண்டம் (200 பக்கம்)	0	8	0
8.	,, ஆரண்ய காண்டம்	0	4	0
9.	,, கிட்கிந்தா காண்டம்	0	4	0
10.	ஞானசூரியன் (ஞான்காம்பதிப்பு) 200பக்கம்	0	5	0
11.	தர்ம பரீக்ஷை அல்லது புராண ஆபாசம்	0	3	0
12.	பேயோ கூற்று மெய்யா? பொய்யா?	0	3	0
13.	பங்கமும் அல்லது பார்ப்பனக் கொடுமை	0	4	0
14.	ச. வை. ரா. சீர்திருத்த மகாநாட்டி உபந்நியாசம்	0	2	0
15.	அகத்தியர் ஆராய்ச்சி	0	2	0
16.	இராவணேசுவரன் பாடல் திரட்டு	0	2	0
17.	சுயமரியாதைப் பாடல்	0	2	0
18.	கதர் மூடநம்பிக்கை (இங்கிலீஷ்)	0	2	0
19.	பன்னாட்டுத உபந்நியாசம்	0	1	0
20.	சோஷியலிசம்	0	2	0
21.	பொல்ஷ்விக் முறை	0	1	0
22.	ச. வை. ரா இலங்கை உபந்நியாசம்	0	0	9
23.	சமதர்ம உபந்நியாசம்	0	0	6
24.	சோதிட ஆராய்ச்சி	0	4	0
25.	மறுமதி விளக்கம்	0	2	0
26.	மறுப்புக்கு மறுப்பு	0	3	0
27.	பாரத ஆராய்ச்சி (ஆதிபர்வம்)	0	4	0
28.	புது ரஷ்யா (200 பக்கம்)	0	8	0
29.	புராண ஆராய்ச்சி தக்க ஆதாரங்களுடன்	0	8	0
30.	கர்ப்ப ஆட்சி	0	6	0
31.	ராவணப் பெரியார்	0	5	0
32.	இங்கர்சால் பொன்மொழிகள்	0	4	0
33.	ரகசியம் எங்கே?	0	2	0
34.	ஜாதியை ஒழிக்க வழி	0	4	0
35.	கலைக்கியானம் அல்லது ஸ்கலஸ்டிக்கட்டுரை	0	5	0

கிடைக்குமிடம்:— குடி அரசு பதிப்பகம், ஈரோடு.

Edited Printed and Published by E. V. Krishnasamy at the Unmai vilakam Press, Erode.